

கல்கி
KALKI
25.8.1968
40 காசு




Blue Seal
TALC
Blue Seal
TALC


கல்கி

பொருளடக்கம்

கீலக ஆவணி 10 ★ ஆகஸ்டு 25

கல்கியில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

படவிளக்கம் 4ம் பக்கம் →



திருமணம்

கல்கத்தா திரு எம். வி. சுப்பிரமணியத்தின் புதல்வி சௌபாக்கியவதி


சாந்தி மீனாக்ஷிக்கும்


கோவை வழக்கறிஞர் திரு சி. பி. மீனாக்ஷிசுந்தர சாஸ்திரியாரின் குமாரர்

சிரஞ்சீவி கணபதிக்கும்

சமீபத்தில் சென்னை ஹேமமாலினி கல்யாண மண்டபத்தில் திருமணம் மிக விமரிசையாக நடைபெற்றது. சென்னை கவர்னரும், அமைச்சர்களும், பிரதம நீதிபதியும், இதர நீதிபதிகளும், நகரப் பிரமுகர்களும் காலையில் நடைபெற்ற திருமணத்துக்கும் மாலை வரவேற்பு வைபவத்துக்கும் வந்து சிறப்பித்தனர்.

வாழ்க மணமக்கள் !




அரசாங்கம்
த.நா.கா.க
நேற்று!
வன்முறை
இளைஞர் காங்கிரஸ்
த.நா.கா.க
இன்று
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா --- பாரதியார்

மலர் 28 ★ இதழ் 4

பாரதம் விலகி நிற்குமா?

உலகில் பல துறைகளில் ஒற்றுமையும் இசைவும் ஏற்பட்டு வருவதைக் காண்கிறோம். யாரும் திட்டமிட்டு இந்த இசைவை ஏற்படுத்தாமல், இயற்கையாகவே இது நிகழ்ந்து வருகிறது. உண்மை ஒன்றாகத்தான் இருக்க முடியும். இறுதியில் உண்மையான அந்த ஒன்றே பல துறைகளில் உலகெங்கிலும் ஏற்கப்படுவதால் ஒற்றுமை உண்டாகி வருகிறது.

சமய ஒற்றுமை என்பது இன்று நன்கு நிலைப்பட்டு விட்டது எனலாம். இதைப் பரம ஆசாரக்காரர்களும், குறுகிய மத உணர்ச்சி கொண்டவர்களும் கூட மறுக்க முடியாது.

உலகப் பெரும் நாடுகளின் அரசியல் கட்சிகளைப் பார்த்தாலும் அவற்றின் இலட்சியங்களில் விசேஷமாக வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. கட்சிக்காரர்களின் சொந்த நலனை வைத்துத்தான் அரசியல் சச்சரவுகள் நடக்கின்றனவே ஒழிய, கட்சிகளின் நோக்கத்தில் ஒற்றுமையே ஏற்பட்டு வருகிறது.

நாகரிக நாடுகளின் தொழில் உற்பத்தியில் எல்லா நிறுவனங்களிடையே ஓர் இசைவைக் காண்கிறோம். அரசாங்கமே தொழில் நடத்தினாலும் சரி, தனியார் நடத்தினாலும் சரி, பெரிய தொழிற்சாலைகளின் அளவுக்கும் நோக்கத்துக்கும் ஏற்ப அவை யாவும் திறம்பட நிர்வகிக்கப்பட வேண்டுமாயின், ஒரு நாட்டின் உற்பத்தித் துறையில் உள்ள நிறுவனங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பது நிதரிசனமாகி வருகிறது.

முதலாளித்துவ நாடு எனப்படும் அமெரிக்காவில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பொதுவான நலன்கள் உண்டு என்ற உணர்ச்சி உண்டாகி, பரஸ்பரம் இரு சாராரிடையே இசைவு ஏற்பட்டு வருகிறது.

மறுபுறத்திலோ கம்யூனிஸ நாடாகிய செக்கோஸ்லோவேகியாவில் கட்டுப்பாடுகள் பல தளர்த்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இது ஒற்றுமைச் சகாப்தத்தின் குறிப்பிடத் தக்கதோர் அடையாளமாகும். சமாதானமும், மானுட கௌரவமும், சுதந்திரமும் வளருவதற்கான வித்து செக்கோஸ்லோவேகிய இயக்கத்தில் உள்ளது.

அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் இடையே இருந்த இடைவெளி குறைந்து அவை நெருங்கி வருவது இந்த ஒற்றுமைச் சகாப்தத்தின் ஒரு முக்கியமான அம்சம். அமெரிக்காவில் தலைமை ஏற்பது நிக்ஸனாயினும் சரி, ஹம்ப்ரி ஆயினும் சரி – அமெரிக்காவில் ஆட்சி பீடத்தில் அமருவது குடியரசுக் கட்சியாயினும் சரி, ஜனநாயகக் கட்சியாயினும் சரி — அந்த நாடு ருஷியாவுடன் சமாதான சக வாழ்வு வாழவே விரும்புகிறது. அதே போல் ருஷியாவும் அமெரிக்காவுடன் அமைதியாக ஒத்து வாழவே விரும்புகிறது. எதிராளியைப் பயமுறுத்துவது என்கிற மாயப் பெயரில் அணு ஆயுதங்களைக் குவித்து வைத்துக் கொள்ளும் நிலைக்கு முடிவு காண இவ்விரு வல்லரசுகளும் உள்ளூற விரும்புகின்றன. அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இவ்வம்சத்தின் இசைவுக்கான தொடக்கத்தைக் கண்டோம்.

ஆனால் இதில் காந்தியும், சர்தார் பட்டேலும், நேருஜியும் ஸ்தாபித்த இந்தியக் குடியரசு ஒப்பமிடாத அவமானத்தையும் கண்டோம். உலகம் முழுவதும் பல துறைகளில் இசைவு ஏற்பட்டு வருகையில் இந்தியா மட்டும் தனித்து நின்று இன்னும் பல குழப்பங்களில் தத்தளித்து வருவதற்கே இது ஓர் அடையாளமாகும்.

இந்தியாவில் தொழில் துறையை எடுத்துக் கொண்டால், இங்கு அமெரிக்காவைப் போல் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கு மிடையே இசைவு ஏற்படவில்லை. செல்வந்தர்களான முதலாளிகள், செல்வத்தை விளைவிக்கும் தொழிலாளிகள் இவர்களிடையே ஏற்பட வேண்டிய ஒற்றுமையின் அவசியத்தை நம் நாட்டுத் தொழிலாளிகளும், தொழிற் சங்கங்களும் இன்னும்

உணரத் தொடங்கவில்லை. அரசியல்வாதிகளான தொழிற்சங்கத் தலைவர்கள் சச்சரவுகளை எவ்வளவுதான் பயன்படுத்திக் கொண்டாலும் ஒற்றுமையின் அவசியம் காலக்கிரமத்தில் உணரப்பட்டே தீரும். கோழிகள் கூவ மறுப்பதால் பொழுது விடியாமற் போகாது.

ஆனால் இன்னோர் இனத்தில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள இசைவின்மைதான் நிச்சயமாக நாட்டைப் பின்னோக்கி இழுத்துச் செல்கிறது. மொழிவாரி ராஜ்யப் பிரிவினையைத்தான் குறிப்பிடுகிறோம். தொழிலும் வர்த்தகமும் இந்தியாவை ஒருங்கிணைத்து வருகிற சமயத்தில், மொழிகளுக்கு அர்த்தமில்லாத முக்கியத்துவத்தைத் தந்து, அந்த அடிப்படையிலேயே சட்டசபை ஆட்சியையும் அமைத்ததால் ஆங்காங்கே சுயநலக் கும்பல்களை சிருஷ்டி செய்தாகி விட்டது. அரசியல்வாதிகள் இதனால் ஆதாயம் அடையலாம். ஆனால் அறிவாளிகள் இந்த ஏற்பாட்டின் தீமையை உணர்ந்து, இதிலிருந்து விமோசனம் பெற வழி உண்டா என்றே ஆராய்ந்து வருகின்றனர். எல்லைத் தகராறுகளும், தாவாக்களும் அனந்தமாகப் பெருகி, பாரத தேசம் என்ற ஒன்றிடம் அன்பு வைத்திருந்தவர்களுக்கெல்லாம் எரிச்சலூட்டி வருகின்றன. ஆனாலும் மொழிவாரி அமைப்பினால் அதிகாரம் பெற்று, அதன் பலனைச் சுவைத்தவர்கள் இந்த ஏற்பாட்டை மாற்ற அநுமதிக்க மாட்டார்கள். மொழிவாரிப் பிரிவினையின் விளைவாகவே பல 'சேனை'கள் தோன்றியுள்ளன. அந்தந்த ராஜ்யத்துப் பெரும்பான்மையினருடைய வாக்கின்மீது ஆட்சி அதிகாரம் பெறுகிறவர்கள் இந்தச் சேனைகளை வாயளவில் ஆட்சேபித்து எவ்வளவுதான் பேசினாலும், அவற்றுக்கு மறைமுகமாக உதவியே புரிவார்கள். ஆனால் இந்தியா ஒரு நாடாக இருக்க வேண்டுமாயின் — நம் மக்கள் யாவரும் பயமின்றி நாடெங்கிலும் சமமாகச் சர்க்காரின் காப்புப் பெற்று வாழ வேண்டுமாயின்—இந்தச் சேனைகளையெல்லாம் கலைத்தேயாக வேண்டும்.

உலகில் பல விஸ்தாரமான துறைகளில் இசைவு ஏற்பட்டு, ஒழுங்கான, அமைதியான ஒற்றுமைசகாப்தம் பிறக்கும் என்ற நம்பிக்கை தோன்றியுள்ளபோது இந்தியாவில் இப்படிப் பட்ட குறுகிய பிரிவினைகள் நாட்டைப் பிளந்து வருவது நம் துரதிர்ஷ்டம். ஆயினும் உலகெங்கனும் ஏற்பட்டு வரும் ஒற்றுமையின் சூட்சுமமான தார்மிக சக்தி இந்தியா மீதும் பாய்ந்து பிரிவினைச் சுவர்களைத் தகர்த்து, ஐக்கிய பாரதத்தை உண்டாக்கும் என நம்புவோம், பிரார்த்திப்போம். உலகில் உண்டாகியுள்ள இசைவின் உதயத்திலிருந்து இந்தியா மட்டும் ஒளி பெறாதிருக்க முடியாது. உதய ஒளியைக் கண்டிருக்கக் கூடிய பழைய பெரும் தலைவர்கள் நம்மை விட்டுப் போய் விட்டது உண்மை. ஆயினும் உதிக்கும் சூரியன் வானத்தில் மேலும் ஏறிக் கதகதப்பு அடையும் போது, இன்று நம் நாட்டின் தலைமையில் இருப்பவர்களும் கூட ஒளியை உணராதிருக்க இயலாது.

இயற்கையின் சீற்றம்

முப்பத்தைந்தாண்டுகளுக்குமுன் பீஹாரில் பூகம்பம் ஏற்பட்ட போது, மக்களின் பாபத்துக்குக் கூலியாகவே இயற்கை சீறுவதாகக் காந்தி அடிகள் கூறினார். வெகு சமீபத்தில் தலைவர் ராஜாஜி, 'நாம் மகா பாபம் புரிகிறோம்; நம் ஒழுங்கீனங்களுக்காக ஆண்டவன் எந்தத் தண்டனை அளித்தாலும் அதிகமாகாது' என்று எழுதினார்.

குஜராத், கேரளம், ஒரிஸ்ஸா, மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், அஸ்ஸாம் ஆகிய ராஜ்யங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளக் கஷ்டத்தை நினைக்கையில் இம்மகானின் வாக்குத்தான் மனத்தில் தைக்கிறது. இந்த ஆறு ராஜ்யங்களுள் குஜராத்தில் ஏற்பட்டுள்ள உற்பாதம் மிகக் கொடுமையானது.

எதிர்காலத்தில் வெள்ளக் கொடுமைக்கு மக்கள் ஆளாவதைத் தவிர்க்குமுகமாகச் சில காரியங்கள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில், ஆற்றோரங்களில் வீடுகள் கட்டுவதைக் கட்டுப்படுத்த மத்திய சர்க்கார் அதிகாரம் எடுத்துக் கொண்டிருப்பதைக் குறிப்பிட வேண்டும். எதிர்கால நடவடிக்கையில் ராஜ்ய அரசாங்கங்களுக்கு ஒரு முக்கியமான பொறுப்பு உண்டு. நதி நீர்ப் பங்கீடு பற்றி ராஜ்யங்கள் ஒன்றோடொன்று யுத்தம் செய்து வருகிற போதே, இது போன்ற வெள்ளக் கொடுமை ஏற்படுவதை இயற்கை தரும் தண்டனையாக ராஜ்யங்கள் எண்ண வேண்டும். ஆற்று நீர்ப் பங்கீட்டுச் சண்டைகள் ஓய்ந்து, டாக்டர் வி. பி. அவர்கள் விரும்பியது போல் தேசத்தின் ஆறுகள் யாவற்றையும் இணைத்து அதனால் தண்ணீர் தட்டுப்பாடு, போக்குவரத்து முதலிய பிரச்னைகளைச் சமாளிப்பதோடு, இவ்வாறு எல்லா ஆறுகளும் இணைக்கப்படுவதால் அவற்றின் நீர் மட்டத்தை எல்லை மீறாமல் கட்டுப்படுத்தும் சாத்தியக்கூற்றையும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்.

பொருளடக்கப் பட விளக்கம்

பையனும் பூனையும்!

எப்பொழுதுமே சிறுவர்களும் பழக்கப் பட்ட பிராணிகளும் சிநேகிதர்கள். அவைகளுக்கு இரை போடுவதிலும் ஒரு குஷி அவர்களுக்கு! பிராணிகளும் அதை ஒரு விளையாட்டாகவே கருதி அவர்களோடு பழகும்.

படம் அனுப்பியவர் : ஏ. எம். ஹுஸைன்

ராஜாஜியின் கருத்துக்கள்

தமிழக அரசாங்கம் வருமானத்துக்காக லாட்டரிச் சீட்டு விற்பதைக் காண வருத்தமாயிருக்கிறது. யாருக்கும் சபலம் உண்டாக்கக் கூடிய பெரிய பரிசுகள் வைக்கப்பட்டுள்ளன. லாட்டரிச் சீட்டு விலையும் மிகக் குறைவாக (ஒரு ரூபாய்) வைக்கப்பட்டிருக்கிறது. சூது என்கிற பாபத்தில் மக்களை ஈடுபடுத்த இதை விட மோசமாகவோ, சக்தி வாய்ந்ததாகவோ எதுவும் செய்ய முடியாது. தி. மு. க. அரசாங்கத்தின் ஆதரவில் இப்படி நடப்பது கண்டு அதிர்ச்சியும் துயரமும் கொள்கிறேன். இதற்கு மக்கள் பலமான ஆட்சேபணை தெரிவிக்க வேண்டும். தாம் தொடங்கி வைக்கும் தீமையின் கொடுமையை முதன் மந்திரி உணர்ந்து, இது அடிப்படையிலேயே தோஷமானது என்று கண்டு, இதனைக் கைவிடுவார் என நம்புகிறேன்.

எந்த உழைப்புமின்றி பணக்காரராவதற்கு வாய்ப்புத் தருவது கலப்படமற்ற சூதாட்ட உணர்வை வளர்ப்பதேயாகும். சர்க்கார் ஆதரவில் இவ்விதம் சூதாட்டம் நடத்துவதைத் தடுக்கத் துணைப் பிரதமரும், சட்ட மந்திராலயமும் வழி காணாதது எனக்கு ஆச்சரியமூட்டுகிறது. இம்முறையில் பணம் சேர்க்க ராஜ்யங்களுக்கு விசேஷ அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எப்படி வேண்டுமானாலும் நிதி சேகரிக்க ராஜ்யங்களுக்கு 'உபரி அதிகாரம்' அரசியல் சாஸனத்தில் தந்திருக்கவில்லை.

***

தமிழக சபாநாயகர் ராஜிநாமா செய்துவிட்டார். ஒரே சமயத்தில் சபாநாயகராகவும், கட்சிப் பிரசாரகராகவும் இருப்பதை அசௌகரியமாகக் கண்டதால் அவர் ராஜிநாமா செய்ததாகச் சொல்லப்படுகிறது. இரண்டாகவும் இருப்பதன் **அசௌகரியத்தைத்தான்** அவர் உணர்ந்திருக்கிறாரே தவிர அதன் **அநீதத்தை** உணரவில்லை. அதெப்படியாயினும், அவர் இப்போது பதவியிலிருந்து விலகிவிட்டபடியால், அவருக்கு அடுத்தபடியாகச் சபாநாயகர் ஸ்தானத்துக்கு வருகிறவர் அரசியல் தொடர்புகளை எல்லாம் விட்டு, சபாநாயகர் பதவிக்குரிய நிலைத்த சம்பிரதாயங்களை அநுசரித்து நடப்பார் என்று நம்பலாம். இவ்விஷயத்தில் சிறிதும் காலம் தாழ்த்தாமல் ஸ்ரீ ஸஞ்சீவ ரெட்டி அவர்கள் எல்லாச் சபாநாயகர்களுக்கும் வழி காட்டினார்.

சபாநாயகர் தமது தொகுதியில் எதிர்ப்பின்றி மீண்டும் தேர்ந்தெடுக்கப்படச் சட்டப்படி வழி செய்ய வேண்டும் என்று கூறுவது சட்ட நுணுக்க அறியாமையைக் காட்டுகிறது. ஒரு சபாநாயகர் பட்சபாதமின்றியும், பொறுமையுடனும், திறமையுடனும், உறுதியுடனும், முற்றிலும் திருப்திகரமாகத் தம் பணியைச் செய்திருப்பாராயின், அவர் எதிர்ப்பின்றி மீண்டும் ஏகமனதாகத் தேர்வு பெறுவதற்குச் சம்பிரதாயமே உதவி புரியும்; இதற்குச் சட்டம் வேண்டியதில்லை.

சபாநாயகரின் தொகுதியில் மறு தேர்வின்போது வேறொருவரைத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுந்த அரசியல் காரணம் இருக்கலாம். அதே போல் சபாநாயகர் பதவிக்கு வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும் நியாய

காமகோடியின்



கருணைமொழி

மனிதனுக்கு உடம்பு என்று ஒன்றை யாரோ எப்பொழுதோ ஏற்படுத்தி விட்டார். அது உள்ள வரையில் பசி தாகம் முதலியன இவனைப் பாதித்துக் கொண்டே இருக்கின்றன. அவற்றைத் தீர்த்துக் கொள்ள மனிதன் அநேக காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அப்போது நமக்கு உபயோகமாக இருப்பவற்றிடம் ஆசை உண்டாகிறது. இடையூறாக இருப்பவற்றிடம் துவேஷம் உண்டாகிறது. ஆசையும் துவேஷமும் இருப்பதால் மீண்டும் உடம்பு (பிறப்பு) வருகிறது. இதிலிருந்து எப்படி நிவிருத்தி பெறுவது? ஒரு வழிதான் உண்டு. உடம்பை என்னுடையதல்ல என்று செய்தால் உடம்பு என்கிற வியாதி தானாகத் தீர்ந்து போகும்.

உங்களுக்குப் பல சிநேகிதர்கள் இருக்கலாம். அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் உள்ளவரையில் அவர்களுடைய நல்லது பொல்லாததெல்லாம் நம்மைத் தொடுகின்றன. ஒரு காலத்தில் அவர்களை நமக்கு விரோதிகளாகிவிடுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவர்களுடைய சுக துக்கத்துக்கும் நமக்கும் சம்பந்தமில்லாமல் போகிறது. (அடிக்கடி அவர்களுக்குத் துக்கம் ஏற்பட வேண்டும் என்பதில் மாத்திரம் கொஞ்சம் சம்பந்தம் இருந்தாலும் இருக்கலாம்.) இப்படி மாறுபாடு ஏற்படுவதற்குக் காரணம் என்ன? அவர்கள் நம்முடையவர்கள் என்ற அபிமானம் போனதுதான். இதுபோலவே உடம்பிலிருந்தும் நம்முடையது என்ற அபிமானத்தை நீக்க வேண்டும். அதன்பின் சம்சார வியாதி தானே தீர்ந்து போகும்.

மான காரணம் இருக்கலாம். (எனவே ஒரே சபாநாயகர் மீண்டும் ஏகமனதாகத் தேர்வு பெறவோ, அப் பதவியைத் தொடர்ந்து பெறவோ அவசியமில்லை.)

தி. மு. க.வின் தேர்தல் பிரசாரத்தில் திரு ஆதித்தன் தீவிரமாக ஈடுபட்டிருந்தது பழிப்புக்கிடமாயிருந்தது. இதை முதல் மந்திரி அங்கீகரிக்கவில்லை என்பதற்குப் பத்திரிகைச் செய்திகளில் குறிப்பு கண்டு மகிழ்கிறேன்.

ஃஃஃ

வேறெந்த ராஜ்யத்தையும்விடத் தமிழ் நாட்டின் இன்றைய தலைவர்கள்தான் பெயர் மாற்றங்களுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள். தங்களது சக்தியையும், காலத்தையும், சிந்தனையையும் ராஜ்ய நிருவாகத்துக்குச் செலவிடுவதைவிட அதிகமாகப் பழக்கத்திலுள்ள பெயர்களை மாற்றுவதற்காகச் செலவிட்டு வருகிறார்கள். போஸ்ட் ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன், செக் போஸ்ட், கார்ட், ரயில்வே ஸ்டேஷன், பஸ், மோட்டார் கார், சைக்கிள் முதலியவற்றுக்குப் பதிலாகப் புது வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் இது போன்றவற்றுடன் நேரடியாக உழைத்து, அவற்றை நடைமுறையில் கையாளுபவர்கள் பழைய ஆங்கிலோ — இந்திய வார்த்தைகளையே உபயோகிக்கின்றனர். இந்தப் பெயர்கள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக வழக்கில் இருந்து வருபவை. 'கண்டக்டர்', 'டிரைவர்', 'ஸெல்ஃப் — ஸ்டார்டர்', 'என்ஜின்', 'ரயில்வே ஸ்டேஷன்' போன்ற வார்த்தைகளைத்தான் இன்றும் நடைமுறைப் பழக்கத்தில் கேட்கிறோமே ஒழிய இவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புக்களை அல்ல.

ஒரு காலத்தில் நானும் இதே திசையில் மொழி பெயர்ப்புச் செய்தவன்தான் என்பதை வெளியிட்டுக் கொள்கிறேன். ஆனால் நடைமுறைகளை மேலும் மேலும் உணர்ந்து, நடைமுறைக்கு ஒவ்வாதனவற்றை மேலும் மேலும் கைவிட்டபின், இன்று பொதுமக்களிடம் புழங்கும் வார்த்தைகளை அப்படியே வைத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனமெனக் காண்கிறேன். புது வார்த்தைகள் அழகாயிருக்கலாம். ஆனாலும் மக்களிடம் வழக்கிலுள்ளதைப் பின்பற்றுவதே நல்லதுவெனக் கருதுகிறேன். காலஞ்சென்ற என் நண்பர் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களைவிடப் பெரிய தமிழறிஞரோ, தமிழன்பரோ இருக்க முடியாது. அவரே பொது வழக்கிலுள்ள பதங்களைத்தான் ஆதரித்தார். மக்களின் வாய்மொழிக்குப் பதிலாகச் செய்கிற மொழி பெயர்ப்புத் திட்டத்தை நான் கைவிடுமாறு தூண்டியவர் அவரே.

ஃஃஃ

ராக்ஃபெல்லரின் பெருஞ்செல்வம் அவர் வேட்பு பெறுவதற்கு அநுகூலமாயிராமல், தடையாகவே இருந்தும்கூட, செயல் துடிப்பு மிகுந்த நிக்ஸன் குடியரசுக் கட்சியின் சார்பில் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு வேட்புப் பெற்றிருக்கிறார். நிக்ஸன் ஜனாதிபதி தேர்வில் வெற்றி கண்டு, ஜனநாயகக் கட்சியிடமிருந்து ஆட்சிப் பளுவை இறக்கி வைக்கக் கூடும் என்பதற்கும் சமிக்ஞைகள் உள்ளன. வெள்ளை மாளிகையை யார் வெற்றி கொண்டாலும், அமெரிக்காவும் ருஷியாவும் நெருங்கி வருகிற போக்கு நீடிக்கும் என்பது உறுதி.

ஃஃஃ

கருத்தடை பரவினாலன்றி ஜனத்தொகை வெடித்துப் பரவும் என்கிற 'கட்டுக் கதை'யைப் போப் ஆண்டவர் நம்பவில்லை என்று 'ஆப்ஸர்வடோர் ரொமானோ' கூறுகிறது.

உலகில் ஜனத்தொகை உயர்ந்து வருவதைப் போப் உணர்ந்திருக்கிறார். ஆயினும் உயிர் நூலின் உண்மைகள் எப்படி நடைமுறையாகின்றன என்பதையும், சமூக—சரித்திரச் சான்றுகளையும் பார்க்கும்போது மக்கட்தொகைப் பெருக்கம் இயற்கையாகவே கட்டுப்படும் என்று அவர் நம்புகிறார்.

கருத்தடைச் சாதனங்களால் மக்கட்தொகையைக் குறைக்கு முன்பே ஒழுக்கக் குறைவும் சுயக் கட்டுப்பாட்டுத் தளர்ச்சியும் ஏற்பட்டுவிடும். இதனால் மக்களின் தரம் பாழாக்கப்படும்.

தமது கத்தோலிக்க உலகின் பொதுநலனில் போப் ஆண்டவர் அக்கறை கொண்டவர்.

வருந்துகிறோம்!

ஸ்ரீமதி ராஜம் ராமசுந்தரம் அண்மையில் காலமானதை அறிந்து பெரிதும் துயருற்றோம். காலஞ்சென்ற ஸ்ரீ டி. ஆர். வேங்கட்ராம சாஸ்திரி அவர்களின் புதல்வி ராஜம், சென்னை மராமத்து இலாக்காவில் பொறி இயல் நிபுணராகச் சிறந்த பணியாற்றிப் புகழுடன் எய்திய ராமசுந்தரத்தின் மனைவியார் ஆவார். தமது அறுபதாவது வயதில் இறைவனடி சேர்ந்த இவர் சென்னை ஸ்ரீ சாரதா மடம் போன்ற இறை உணர்ச்சியை வளர்க்கும் ஸ்தாபனங்கள் பலவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தார். சமூக நலனுக்காக சதா சர்வகாலமும் இறைவனின் தியானத்திலேயே காலத்தை ஓட்டி வந்த இவரது மறைவு காரணமாக, துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இவரது ஒரே மகனான பாரி கம்பெனியின் பிரதம கணக்காளர் திரு ரத்தினத்துக்கும் மற்ற உறவினர் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவருடன் டாக்டர் சந்திரசேகர் போட்டி போட முடியுமா ?

ஃஃஃ

இந்திய மொழிகளில் இப்போது ஏராளமான கதைகள் எழுதப்படுகின்றன. சிறு கதைகளும், பெரிய நாவல்களும் நிறைய எழுதப்படுகின்றன. ஆனால் திரும்பத் திரும்ப ஒரேவிதமான பிரச்னைகளும், ஒரே விதமான மையப் பொருளுமே கையாளப்படுகின்றன. இன்றைய இலக்கியம் முழுவதிலும் ஒரு வியாதி பிடித்த மனப்பான்மை விரவிக் கிடக்கிறது. நான் இப்படிச் சொல்வதற்கு எழுத்தாளர்கள் மன்னிக்க வேண்டும். மனிதனின் மிக உத்தமமான பாங்குகளை விளக்குகிற ஆரோக்கியமுள்ள இலக்கியம் தோன்ற வேண்டும். இன்றைய இந்தியாவில் கதையின் மையப்பொருளில் ஆரோக்கியமில்லாததற்கு நியாயங்கள் இருக்கலாம். ஆனால் இதைக் கையாள்வதில் மிகை ஏற்பட்டு, இலக்கியமே வறட்சியாகி விடுவது சுலபம். மகாபாரதத்தையும் ராமாயணத்தையும் பார்த்துப் படிப்பினை பெறுவோம். அவை சமயக் கிரந்தங்களாயினும், கதை இலக்கியத்துக்குச் சிறந்த உதாரணமாகும். அவற்றில் எவ்வளவோ சோகம் இருப்பினும் வியாதி பிடித்தாற் போன்ற சோகை இல்லை.

விநாயக சதுர்த்தி



விநாயக சதுர்த்தியின்போது கணபதியை இரட்டை அறுகம் புல்லால் பூஜை செய்ய வேண்டும். புண்ணியம் பாவம், சுகம் துக்கம், சங்கல்பம் விகல்பம், தர்மம் அதர்மம்—இப்படி ஒன்றுக்கொன்று முரணாக உள்ள இரட்டைப் பண்புகள் ஒழிய வேண்டும் என்பதற்காகவே, இரட்டை அறுகம் புற்களால் பூஜை செய்யுமாறு விதிக்கப்பட்டிருக்கிறது.

கணபதிக்குப் பிரியமான நிவேதனப் பொருள் கொழுக்கட்டை. அநாதியான அஞ்ஞான வாசனை கொழுத்துப் போனதால் கட்டையாக (அதாவது ஜடமாக)க் காட்சியளிக்கிறது. அந்தக் கொழுக்கட்டைக்கு உள்ளேயிருப்பது பூர்ணம். ஆனந்தமே வடிவமான பிரம்மம்தான் பூர்ணம். பரிபூர்ணமான சச்சிதானந்த பிரம்மத்தை, நாமரூப வடிவமான பிரபஞ்சம் மறைத்துக் கொண்டிருக்கிறது என்பதே கொழுக்கட்டையின் தத்துவம்.


கொழுக்கட்டையை வடமொழியில் மோதகம் என்று சொல்வார்கள். மோதம் என்றால், சந்தோஷம் என்று பொருள். நாமரூபங்களால் மறைக்கப்பட்டிருப்பினும் பூர்ணமயமான சச்சிதானந்தம் உத்தம ஞானிகளுக்கு விளங்குமாதலால், அவர்களுக்கு இந்தப் பிரபஞ்சமும் துக்கமயமானதல்ல, ஆனந்தமயமானதே என்பதுதான் மோதகத்தின் தத்துவம்.

செல்வ நகரில் செல்வநாயகன்

பம்பாய் நகரில் செம்பூர் பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். ஐந்து லட்சம் ரூபாய் செலவில் ஓர் அருமையான லட்சுமி நாராயணர் திருக்கோயிலும், கல்யாண மண்டபமும் எழும்பி, அந்தத் திருக்கோயிலுக்கு ஆகஸ்டு மாதம் 25ந் தேதி மகா சம்ப்ரோக்ஷணம் விமரிசையாக நடைபெறவிருக்கிறது. சாதுர் மாஸ்ய சங்கல்பத்தைப் பம்பாயில் வைத்துக் கொண்டுள்ள அஹோபில மட ஜீயர் சுவாமிகள் இந்த வைபவத்தில் கலந்து கொள்ள முன் வந்தது பம்பாய் மக்களின் பாக்கியம். இந்த லக்ஷ்மி நாராயணர் திருக்கோயில் எழுப்புவதற்குரிய நிலத்தை வழங்கியது அஹோபில மடமே. லக்ஷ்மி நாராயணரோடு லக்ஷ்மி நரசிம்மரும் சேர்ந்து இவ்வாலயத்தில் மூலவர்களாகக் காட்சி தருகிறார்கள். வழிபடுவதற்குரிய ஆலயமாகத் திகழ்வதோடு, மங்கள நிகழ்ச்சிகளுக்கும் உரிய இடமாகத் திகழும் இந்தத் திருக்கோயிலும், கல்யாண மண்டபமும் எழப் பக்தர்கள் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி பாராட்டுக்குரியது. கும்பாபிஷேக வைபவத்தில் பம்பாய் மக்கள் திரளாகக் கலந்து கொண்டு லக்ஷ்மி நாராயணர், லக்ஷ்மி நரசிம்மர் அருளுக்குப் பாத்திரர்களாவார்களாக.



அ..ப்..பா!...தாங்க முடியாத ஜலதோஷம்!



அன்பையே தடவுவதுபோல, கொஞ்சம் விக்ஸ் வேபோரப்பை தடவுங்கள்

மூக்கிலும், மார்பிலும், முதுகிலும் விக்ஸ் வேபோரப்பை தடவியதும், அவனுக்கு ஜலதோஷத்திலிருந்து, உடனே நிவாரணம் கிடைக்கிறது. விக்ஸ் வேபோரப்பின் இளம் சூடான ஆவியினால், உங்கள் செல்வம் சுகமாக மூச்சு விடுகிறான். இரவு பூராவும் அவன் நிம்மதியாக உறங்குவான்.



விக்ஸ் வேபோரப்

ஒரே இரவில் ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

பொன்னியின் செல்வன்

ஏழாம் அத்தியாயம் ♦ சிரிப்பும் கொதிப்பும் ♦



அரசுரிமையைப் பற்றிப் பழுவேட்டரையரின் வார்த்தைகளைக் கேட்டதும் வந்தியத்தேவன் உடனே ஒரு முடிவுக்கு வந்தான். அரசுரிமையைப் பற்றி இவர்கள் என்ன பேசப் போகிறார்கள்? இவர்கள் யார் பேசுவதற்கு? இந்தக் கூட்டத்தில் நடக்கப் போவதை அறிந்து கொண்டே தீர வேண்டும்! இங்கேயே உட்கார வேண்டியதுதான். இதைக் காட்டிலும் வசதியான இடம் வேறு கிடைக்காது. ஆழ்வார்க்கடியான் எப்படியாவது போகட்டும். அவனைப் பற்றி நமக்கு என்ன கவலை?

இன்றைக்கு இங்கு ஏதோ மர்மமான நிகழ்ச்சி நடைபெறப் போகிறது என்ற எண்ணம் வந்தியத்தேவன் மனத்தில் முன்னமே உண்டாகியிருந்தது. ஆழ்வார்க்கடியானின் விபரீதமான பொருள் தரும் வார்த்தைகள், கோட்டை வாசற் காவலர்களின் துடுக்கான நடத்தை, சம்புவரையரின் அரைமனதான வரவேற்பு, வெறியாட்டம் ஆடிய சந்நதக் காரனின் ஆவேச மொழிகள், — இவையெல்லாம் அவனுக்கு ஏதேதோ சந்தேகங்களை உண்டாக்கியிருந்தன. அந்தச் சந்தேகங்களையெல்லாம் நீக்கிக் கொள்ளவும் உண்மையை அறிந்து கொள்ளவும் இதோ ஒரு சந்தர்ப்பம் தெய்வாதீனமாகக் கிடைத்திருக்கிறது. அதை ஏன் நழுவ விடவேண்டும்?

ஆகா! தன்னுடைய உயிருக்குயிரான நண்பன் என்று கருதி வந்த கந்தமாறன்கூடத் தன்னிடம் உண்மையைச் சொல்லவில்லை. தன்னைத் தூங்க வைத்துவிட்டு இந்த இரகசிய நள்ளிரவுக் கூட்டத்துக்கு வந்திருக்கிறான்! அவனை நாளைக்கு ஒரு கை பார்க்க வேண்டியதுதான்!

அமரர் **கல்கி**



பின்னர் பழுவேட்டரையர் கூறினார்: ''ஜோசியர்களையும் கேட்டாகி விட்டது. அவர்கள் சில காலம் தள்ளிப் போடுகிறார்கள், அவ்வளவுதான். எப்படியிருந்தாலும், அடுத்தாற் போல் பட்டத்துக்கு உரியவர் யார் என்பதை நாம் யோசித்தாக வேண்டும்....?''

''அதைப் பற்றி இனி யோசித்து என்ன ஆவது? ஆதித்த கரிகாலருக்குத்தான் இளவரசுப் பட்டம் இரண்டு வருஷங்களுக்கு முன்பே கட்டியாகி விட்டதே!'' என்று இன்னொரு கம்மலான குரல் கூறியது.

''உண்மைதான். ஆனால் அப்படி இளவரசுப் பட்டம் கட்டுவதற்கு முன்னால் நம்மில் யாருடைய



இதற்குள் [illegible] பழுவேட்டரையர் பேசத் தொடங்கிவிட்டார். வந்தியத்தேவன் காது கொடுத்துக் கவனமாகக் கேட்கலானான்.

'' உங்களுக்கெல்லாம் மிக முக்கியமான ஒரு செய்தியை அறிவிக்கவே நான் வந்திருக்கிறேன். அதற்காகவே இந்தக் கூட்டத்தைச் சம்புவரையர் கூட்டியிருக்கிறார். சுந்தர சோழ மகாராஜாவின் உடல் நிலை மிகக் கவலைக்கிடமாயிருக்கிறது. அரண்மனை வைத்தியர்களிடம் அந்தரங்கமாகக் கேட்டுப் பார்த்தேன். அவர்கள் 'இனிமேல் நம்பிக்கைக்கு இடமில்லை. அதிக காலம் உயிரோடிருக்கமாட்டார்' என்று சொல்லி விட்டார்கள். ஆகவே, இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றி நாம் இப்போது யோசித்தாக வேண்டும்!'' என்று கூறிப் பழுவேட்டரையர் நிறுத்தினார்.

''ஜோசியர்கள் என்ன சொல்லுகிறார்கள்?'' என்று கேட்டார் கூட்டத்தில் ஒருவர்.

''ஜோசியர்களைப் போய்க் கேட்பானேன்? சில நாட்களாகப் பின் மாலை நேரத்தில் வானத்தில் வால்நட்சத்திரம் தெரிகிறதே! அது போதாதா?'' என்றார் ஒருவர்.

யோசனையாவது கேட்கப்பட்டதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இங்கே கூடியுள்ள நாம் ஒவ்வொருவரும் நூறு ஆண்டுக்கு மேலாக, நாலு தலைமுறையாக, சோழ ராஜ்யத்தின் மேன்மைக்காகப் பாடுபட்ட பழங்குடியைச் சேர்ந்தவர்கள். என் பாட்டனாருக்குத் தந்தை திருப்புறம்பியம் போரில் இறந்தார். என் பாட்டனார் வேளூரில் நடந்த போரில் உயிர் விட்டார். என் தந்தை தக்கோலத்தில் உயிர்த் தியாகம் செய்தார். அம்மாதிரியே உங்கள் ஒவ்வொருவரின் மூதாதையரும் இந்தச் சோழ நாட்டின் மேன்மையை நிலை நாட்டுவதற்காக உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். நம் ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் இளம் பிள்ளைகள் யுத்தகளத்தில் செத்திருக்கிறார்கள். இன்றைக்கும் ஈழ நாட்டில் நம்முடைய குலத்தையும் குடும்பத்தையும் சேர்ந்த பிள்ளைகள் போர் செய்து வருகிறார்கள். ஆனால்



அடுத்தபடியாகப் பட்டத்துக்கு வரவேண்டியவர் யார் என்பது பற்றித் தீர்மானிப்பதில் நம்முடைய அபிப்பிராயத்தை மகாராஜா கேட்கவில்லை. தசரதர்கூட இராமருக்குப் பட்டம் கட்டுவது பற்றி மந்திராலோசனை சபை கூட்டி யோசனை செய்தார். மந்திரிகளையும், சாமந்தகர்களையும், சேனைத் தலைவர்களையும், சிற்றரசர்களையும் ஆலோசனை கேட்டார். ஆனால் சுந்தர சோழ மகாராஜா யாருடைய யோசனையையும் கேட்பது அவசியம் என்று கருதவில்லை....''

''நம்மை யோசனை கேட்கவில்லையென்பது சரிதான். ஆனால் யாரையுமே யோசனை கேட்கவில்லை யென்று இறை விதிக்கும் தேவர் கூறுவது சரியன்று. பெரிய பிராட்டியான செம்பியன்மகாதேவியின் யோசனையும் இளைய பிராட்டியாரான குந்தவை தேவியின் யோசனையும் கேட்கப்பட்டன. இல்லையென்று பழுவேட்டரையர் கூற முடியுமா?'' என்று கேலியான தொனியில் ஒருவர் கூறவும், கூட்டத்தில் ஒரு சிலர் சிரித்தார்கள்.

''ஆகா! நீங்கள் சிரிக்கிறீர்கள்! எப்படித்தான் உங்களுக்குச் சிரிக்கத் தோன்றுகிறதோ, நான் அறியேன். நினைக்க நினைக்க எனக்கு வயிறு பற்றி எரிகிறது; இரத்தம் கொதிக்கிறது. எதற்காக இந்த உயிரை வைத்துக் கொண்டு வெட்கங்கெட்டு வாழ வேண்டும் என்று தோன்றுகிறது. இன்று சந்நதம் வந்து ஆடிய 'தேவராளன்' துர்க்கை பலி கேட்பதாகச் சொன்னான். ஆயிரம் வருஷத்துப் பரம்பரை ராஜ வம்சத்தில் பிறந்த நரபலி வேண்டும் என்று சொன்னான். என்னைப் பலி கொடுத்து விடுங்கள். என்னுடைய குலம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் தொன்மையானது. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கத்தியினால் என் கழுத்தில் ஒரு போடு போட்டுப் பலி கொடுத்து விடுங்கள். அன்னை துர்க்கை திருப்தி அடைவாள்; என் ஆத்மாவும் சாந்தி அடையும்....''

இவ்விதம் ஆவேசம் வந்து ஆடிய சந்நதக்காரனைப் போலவே வெறி கொண்ட குரலில் சொல்லிப் பழுவேட்டரையர் நிறுத்தினார்.


சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. மேற்குத் திசைக் காற்று 'விர்' என்று அடிக்கும் சத்தமும், அந்தக் காற்றில் கோட்டைச் சுவருக்கு வெளியேயுள்ள மரங்கள் ஆடி அலையும் 'மர்மர' சத்தமும் கேட்டன.

''ஏதோ தெரியாத்தனமாகப் பேசி விட்ட பரிகாசப் பேச்சையும், அதனால் விளைந்த சிரிப்பையும் பழுவூர் மன்னர் பொறுத்தருள வேண்டும். தாங்கள் எங்களுடைய இணையில்லாத் தலைவர். தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்ற இங்குள்ளவர் அனைவரும் சித்தமாயிருக்கிறோம். தாங்கள் காட்டிய வழியில் நடக்கிறோம். தயவு செய்து மன்னித்துக் கொள்ள வேண்டும்!'' என்று சம்புவரையர் உணர்ச்சியுடனே கூறினார்.

''நானும் கொஞ்சம் பொறுமை இழந்து விட்டேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஒரு விஷயத்தை எண்ணிப் பாருங்கள். சரியாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் விஜயாலய சோழர் முத்தரையர்களை முறியடித்துத் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். திருப்புறம்பியம் போரில் பல்லவ சைன்யத்துக்குத் துணையாக நின்று மதுரைப் பாண்டியரின் படையை நிர்மூலமாக்கினார். அதுமுதல் சோழ ராஜ்யம் நாளுக்கு நாள் பெருகி விஸ்தரித்து வந்திருக்கிறது. காவேரி நதிக்குக் கரையெடுத்த கரிகால் வளவர் காலத்திலேகூடச் சோழ ராஜ்யம் இவ்வளவு மகோந்நதத்தை அடைந்தது கிடையாது. இன்றைக்குத் தெற்கே குமரி முனையிலிருந்து வடக்கே துங்கபத்திரை — கிருஷ்ணை வரையில் சோழ சாம்ராஜ்யம் பரந்து விரிந்து கிடக்கிறது. பாண்டிய நாடு, நாஞ்சில் நாடு, யாருக்கும் இதுவரையில் வணங்காத சேரநாடு, தொண்டை மண்டலம், பாகி நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, வைதும்பர் நாடு, சீட்புலிநாடு, பெரும்பாணப்பாடி, பொன்னி நதி உற்பத்தியாகும் குடகு நாடு,—ஆகிய இத்தனை நாடுகளும் சோழ சாம்ராஜ்யத்துக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வருகின்றன. இவ்வளவு நாடுகளிலும் நம் சோழ நாட்டுப் புலிக்கொடி பறக்கிறது. தெற்கே ஈழமும் வடக்கே இரட்டை மண்டலமும் வேங்கியும் கூட இதற்குள் நமக்குப் பணிந்திருக்க வேண்டும். அப்படிப் பணியாததற்குக் காரணங்களை நான் சொல்ல வேண்டியதில்லை; அவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்ததுதான்!....''

''ஆம்; எல்லோருக்கும் தெரியும். ஈழமும் இரட்டைபாடியும் வேங்கியும் கலிங்கமும் பணியாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒரு காரணம் வடதிசை மாதண்ட நாயகராகிய இளவரசர் ஆதித்த கரிகாலர்; இன்னொரு காரணம் தென்திசைப் படைத் தலைவரான அருள்மொழி வர்மர்.....''

''மழவரையர் கூறும் காரணத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். சென்ற நூறாண்டு காலமாக இந்தச் சோழ நாட்டில் சேநாபதி நியமிக்கும் மரபு வேறாயிருந்தது. பல யுத்தங்களில் ஈடுபட்டு அநுபவம் பெற்ற வீராதி வீரர்களையே படைத் தலைவர்களாகவும் மாதண்ட நாயகர்களாகவும் நியமிப்பார்கள். ஆனால் இப்போது நடந்திருப்பது என்ன? மூத்த இளவரசர் வடதிசைச் சேனையின் சேநாபதி. அவர் என்ன செய்கிறார்? இரட்டை மண்டலத்தின் மீதும் வேங்கி நாடு மீதும் படையெடுத்துப் போகவில்லை. காஞ்சிபுரத்தில் உட்கார்ந்து கொண்டு பொன் மாளிகை கட்டிக் கொண்டிருக்கிறார். வீரப் பெருங்குடியில் பிறந்த வீராதி வீரர்களாகிய உங்களைக் கேட்கிறேன். இதற்கு முன்னால் தமிழகத்தில் எந்த மன்னராவது தாம் வசிப்பதற்குப் பொன்னால் மாளிகை கட்டியதுண்டா! உலகெங்கும் புகழ் பரப்பி இப்போது கைலாசவாசியாயிருக்கும் மதுரையும் ஈழமும் கொண்ட பராந்தக சக்கரவர்த்திகூடத் தாம் வசிப்பதற்குப் பொன் மாளிகை கட்டிக் கொள்ளவில்லை. தில்லைச் சிற்றம்பலத்துக்குத்தான் பொன் கூரை வேய்ந்தார். ஆனால் இளவரசர் ஆதித்த கரிகாலர் தாம் வசிப்பதற்குக் காஞ்சிபுரத்தில் பொன் மாளிகை கட்டுகிறார்! பல்லவ சக்கரவர்த்திகள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து ராஜ்ய பாரம் புரிந்த அரண்மனைகள் இவருடைய அந்தஸ்துக்குப் போதவில்லையாம். பொன்னிழைத்த அரண்மனை கட்டுகிறார். ரத்தினங்களையும் வைடூரியங்களையும் அப்பொன் மாளிகைச் சுவர்களில் பதிக்கிறார். கங்கபாடி, நுளம்பபாடி, குடகு முதலிய நாடுகளில் வெற்றியடைந்து கைப்பற்றிக் கொண்டு வந்த பொருளில் ஒரு செப்புக் காசாவது தலைநகரிலுள்ள பொக்கிஷ சாலைக்கு அவர் இதுவரை அனுப்பவில்லை....''



''பொன் மாளிகை கட்டி முடிந்து விட்டதா?''

''ஆம், முடிந்து விட்டது என்று என்னுடைய அந்தரங்க ஒற்றர்கள் மூலம் அறிந்தேன். அத்துடன் சுந்தர சோழ மகாராஜாவுக்கு அவருடைய அருமை மூத்த புதல்வரிடமிருந்து கடிதங்களும் வந்தன, புதிதாக நிர்மாணித்திருக்கும் பொன் மாளிகையில் வந்து சுந்தர சோழ மகாராஜா சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்று.''

'' மகாராஜா காஞ்சிக்குப் போகப் போகிறாரா?'' என்று ஒருவர் கவலை ததும்பிய குரலில் கேட்டார்.

'' அத்தகைய கவலை உங்களுக்கு வேண்டாம். அப்படி ஒன்றும் நேராமல் பார்த்துக் கொள்ள நான் இருக்கிறேன்; தஞ்சைக் கோட்டைக் காவலனாகிய என் சகோதரனும் இருக்கிறான். சின்னப் பழுவேட்டரையன் அனுமதி இல்லாமல் யாரும் தஞ்சைக் கோட்டைக்குள் புக முடியாது. என்னையறியாமல் யாரும் மகாராஜாவைப் பேட்டி காணவும் முடியாது; ஓலை கொடுக்கவும் முடியாது. இதுவரையில் இரண்டு மூன்று தடவை வந்த ஓலைகளை நிறுத்தி விட்டேன்.''

''வாழ்க, பழுவேட்டரையர்!'' ''வாழ்க பழுவூர் மன்னரின் சாணக்ய தந்திரம்!'' ''வாழ்க, அவர் வீரம்!'' என்னும் கோஷங்கள் எழுந்தன.

''இன்னும் கேளுங்கள். பட்டத்து இளவரசர் செய்யும் காரியங்களைக் காட்டிலும் ஈழத்தில் போர் நடத்தச் சென்றிருக்கும் இளவரசர் அருள்மொழிவர்மரின் காரியங்கள் மிக மிக விசித்திரமாயிருக்கின்றன. யுத்த தர்மத்தைப் பற்றி நாம் அறிந்திருப்பதென்ன? பரம்பரையாகப் பல நூறு ஆண்டுகளாக நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்திருப்பதென்ன? நம் நாட்டுப் படைகள் வேறு நாடுகளின் மீது படையெடுத்துச் சென்றால், நம் படைகளுக்கு வேண்டிய உணவுகளை அந்த வேற்று நாடுகளிலேயே சம்பாதித்துக் கொள்ள வேண்டும். அந்த நாடுகளில் கைப்பற்றும் பொருளைக் கொண்டே வீரர்களுக்கு ஊதியமும் கொடுக்க வேண்டும். மிகுந்த பொருளைத் தலைநகரிலுள்ள அரசாங்க பொக்கிஷத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் இளவரசர் அருள்மொழிவர்மர் என்ன செய்கிறார் தெரியுமா? ஈழ நாட்டிலுள்ள நம் போர் வீரர்களுக்கெல்லாம் இங்கிருந்து கப்பல்களில் உணவு அனுப்பி வைக்க வேண்டுமாம்! ஒரு வருஷ காலமாக நானும் பத்துத் தடவை பல கப்பல்களில்

உணவு ஏற்றி அனுப்பி வந்திருக்கிறேன்....''

''விந்தை! விந்தை!'' ''இந்த அநியாயத்தைப் பொறுக்க முடியாது!'' ''இப்படிக் கேட்டதே இல்லை!'' என்ற குரல்கள் எழுந்தன.

''இந்த அதிசயமான காரியத்துக்கு இளவரசர் அருள்மொழி வர்மர் கூறும் காரணத்தையும் கேட்டு வையுங்கள். படை எடுத்துச் சென்ற நாட்டில் நம் வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருளைச் சம்பாதிப்பது என்றால், அங்குள்ள குடிமக்களின் அதிருப்திக்கு உள்ளாக நேரிடுமாம். ஈழத்து அரச குலத்தாரோடு நமக்குச் சண்டையே தவிர ஈழத்து மக்களோடு எவ்விதச் சண்டையும் இல்லையாம். ஆகையால் அவர்களை எவ்விதத்திலும் கஷ்டப்படுத்தக் கூடாதாம்! அரச குலத்தாருடன் போராடி வென்ற பிறகு மக்களின் மனமார்ந்த விருப்பத்துடன் ஆட்சி நடத்த வேண்டுமாம். ஆகையால் பணமும் உணவும் இங்கிருந்து அனுப்ப வேண்டுமாம்!''

இச் சமயம் கூட்டத்தில் ஒருவர், ''படையெடுத்துச் சென்ற நாடுகளில் உள்ள ஜனங்களிடம் ஒன்றுமே கேட்கக் கூடாது; அவர்களின் காலில் விழுந்து கும்பிட வேண்டும் என்ற யுத்த தர்மத்தை இதுவரை நாங்கள் கேட்டதே கிடையாது!'' என்றார்.

''அதனால் விளையும் விபரீதத்தையும் கேளுங்கள். இரண்டு இளவரசர்களும் சேர்ந்து செய்யும் காரியங்களினால் தஞ்சை அரண்மனைத் தன பொக்கிஷமும் தானிய பண்டாரமும் அடிக்கடி மிகக் குறைந்து போகின்றன. உங்களுக்கெல்லாம் அதிக வரி போட்டு வசூலிக்கும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்படுகிறது. இதற்காகத்தான் என்னை இறை அதிகாரியாக நியமித்திருக்கிறார்கள். சோழநாட்டின் மேன்மையே முக்கியம் என்று நான் கருதியிராவிட்டால், எப்பொழுதோ இப்பதவியை விட்டுத் தொலைத்திருப்பேன்.''

''ஆ! கூடவே கூடாது! தாங்கள் பதவியிலிருப்பதுதான் எங்களுக்கெல்லாம் பெரிய பாதுகாப்பு. இந்த முறைகேடான காரியங்களைப் பற்றித் தாங்கள் மகாராஜாவிடம் சொல்லிப் பார்க்கவில்லையா!''

''சொல்லாமல் என்ன! பல தடவை சொல்லியாகி விட்டது. ஒவ்வொரு தடவையும் 'பெரிய பிராட்டியிடம் கேளுங்கள்! இளைய பிராட்டியிடம் கேளுங்கள்!' என்ற மறுமொழிதான் கிடைக்கிறது. முன்னமேதான் சொன்னேனே, மகாராஜாவுக்குச் சுயமாகச் சிந்தனை செய்யும் சக்தியே இப்போது இல்லாமல் போய்விட்டது. முக்கியமான காரியங்களில் நம்முடைய யோசனைகளைக் கேட்பதும் இல்லை. அவருடைய பெரியன்னை செம்பியன்மாதேவியின் வாக்குத்தான் அவருக்கு வேத வாக்கு; அடுத்தபடியாக அவருடைய செல்வக் குமாரி குந்தவைப் பிராட்டியிடம் யோசனை கேட்கச் சொல்லுகிறார். இராஜ்ய சேவையில் தலை நரைத்துப் போன நானும் மற்ற அமைச்சர்களும் அந்தச் சின்னஞ் சிறு பெண்ணிடம்—கொள்ளிடத்துக்கு வடக்கேயும் குடமுருட்டிக்குத் தெற்கேயும் சென்றறியாத பெண்ணிடம்—யோசனை கேட்பதற்குப் போய் நிற்க வேண்டும். எப்படி இருக்கிறது கதை! இந்தச் சோழ ராஜ்யம் ஆரம்பமான காலத்திலிருந்து இப்படி ராஜ்ய காரியங்களில் பெண்கள் தலையிட்டதாக நாம் கேள்விப்பட்டதில்லை. இத்தகைய அவமானத்தை எத்தனை நாள் நாம் பொறுத்திருக்க முடியும்? அல்லது நீங்கள் எல்லோரும் ஒருமுகமாகச் சொன்னால், நான் இந்த ராஜாங்கப் பொறுப்பையும், வரி விதித்துப் பொக்கிஷத்தை நிரப்பும் தொல்லையையும் விட்டு விட்டு என் சொந்த ஊரோடு இருந்து விடுகிறேன்...''

''கூடாது, கூடாது! பழுவூர்த்தேவர் அப்படி எங்களைக் கைவிட்டுவிடக் கூடாது. அரும் பாடுபட்டு ஆயிரமாயிரம் வீரர்கள் நாலு தலை முறைகளாகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தி ஸ்தாபித்த சோழ சாம்ராஜ்யம் ஒரு நொடியில் சின்ன பின்னமாய்ப் போய் விடும்'' என்றார் சம்புவரையர்.

''அப்படியானால் இந்த நிலைமையில் என்ன செய்வது என்று நீங்கள்தான் எனக்கு யோசனை சொல்ல வேண்டும். அல்லி ராஜ்யத்தை விடக் கேவலமாகி விட்ட இந்தப் பெண்ணரசுக்குப் பரிகாரம் என்னவென்று நீங்கள்தான் சொல்ல வேண்டும்'' என்றார் பழுவூர் மன்னர்.

எட்டாம் அத்தியாயம்

பல்லக்கில் யார்?

சற்று நேரம் அந்தக் கூட்டத்தில் ஒருவருக்கொருவர் ஏதோ பேசி விவாதித்துக்கொண்டிருந்தார்கள். பல குரல்கள் ஒருங்கே கலந்து ஒலித்தபடியால் வந்தியத் தேவன் காதில் ஒன்றும் தெளிவாக விழவில்லை.

கப்பித்தான் அணிந்த ஆடவன்



கப்பித்தான் சட்டை

- கழுத்தின் வடிவத்துக்குப் பொருந்தும்படியான காலர்
- கச்சிதமாகப் பொருந்தக்கூடிய தோள்பாகம், கைப்பாகம்
- உடலுக்கு அழகாக அமையும்படியான நடுப்பாகம்
- பிதுங்கி மேலே வராத வண்ணம் சட்டையின் நீண்ட கீழ்ப்பாகம்
- ஸ்பெஷலாக உறுதியுடன் 'கிராஸ் ஸ்டிச்' போடப்பட்ட பித்தான்கள்
- இஸ்திரி மிகக் குறைவே தேவை

கோல்ட் ஸ்டார்
'டெரீன்'/காட்டன். இஸ்திரி தேவையில்லை
சில்வர் ஸ்டார்
2x2, சுத்திகரிக்கப்பட்ட சூபர்ஃபைன் பருத்தியாலானது. இஸ்திரி மிகக் குறைவே போதும்
ப்ரான்ஸ் ஸ்டார்
100 சதவிகிதமும் பருத்தியாலானது
தேர்ந்தெடுக்க ஒயிட், ஐவரி, க்ரே, ப்ளூ, ஃபான் ஆகிய கவர்ச்சியான வண்ணங்கள்,மற்றும் கட்டங்களும் கோடுகளும் போடப்பட்ட பகட்டான ரகங்கள் உள்ளன

பாம்பே டையிங்

BD-7434 TAM


சம்புவரையர் உரத்த குரலில், ''பழுவூர் மன்னர் கேட்டதற்கு நாம் மறுமொழி சொல்லவேண்டாமா? தலைக்குத் தலை பேசிக் கொண்டிருந்தால் என்ன ஆகிறது? இரவு மூன்றாம் ஜாமம் ஆரம்பமாகிவிட்டது. அதோ சந்திரனும் வந்து விட்டது'' என்றார்.

''எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. என்னைப் போல் இன்னும் சிலரது மனத்திலும் அது இருக்கலாம். பழுவூர்த் தேவர் கோபித்துக் கொள்வதில்லையென்றால், அதைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன்!'' என்று முன்னால் ஒரு தடவை பேசிய கம்மல் குரல் சொல்லிற்று.

''இப்போது பேசுகிறது வணங்காமுடியார்தானே? எழுந்து நன்றாக வெளிச்சத்துக்கு வரட்டும்!'' என்றார் பழுவேட்டரையர்.

''ஆமாம்; நான்தான்; இதோ வெளிச்சத்துக்கு வந்து விட்டேன்.''

''என்னுடைய கோபத்தையெல்லாம் நான் போர்க்களத்தில் காட்டுவதுதான் வழக்கம்; பகைவர்களிடம் காட்டுவது வழக்கம். என் சிநேகிதர்களிடம் காட்ட மாட்டேன். ஆகையால் எது வேண்டுமானாலும் மனம் விட்டுத் தாராளமாகக் கேட்கலாம்.''



''அப்படியானால் கேட்கிறேன். சுந்தர சோழ மகாராஜாவின் பேரில் பழுவேட்டரையர் என்ன குற்றம் சொல்கிறாரோ, அதே குற்றத்தைப் பழுவேட்டரையர் மீதும் சிலர் சுமத்துகிறார்கள்! அதை நான் நம்பாவிட்டாலும் இந்தச் சமயத்தில் கேட்டுத் தெளிய விரும்புகிறேன்'' என்றார் வணங்காமுடியார்.

''அது என்ன? எப்படி? விவரம் சொல்ல வேணும்.''

''பழுவூர்த் தேவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெண்ணை மணம் புரிந்து கொண்டது நம் எல்லோருக்கும் தெரியும்....''

இச்சமயம், சம்புவரையரின் குரல் கோபத் தொனியில், ''வணங்காமுடியார் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம். நம் மாபெருந் தலைவரை, நமது பிரதம விருந்தாளியை, இவ்விதம் அசந்தர்ப்பமான கேள்வி கேட்பது சிறிதும் தகாத காரியம்...'' என்றார்.

''சம்புவரையரைப் பொறுமையாயிருக்கும்படி நான் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன். வணங்காமுடியார் கேட்க விரும்புவதைத் தாராளமாகக் கேட்கட்டும். மனத்தில் ஒன்றை வைத்துக் கொண்டிருப்பதை விடக் கேட்டு விடுவதே நல்லது. ஐம்பத்தைந்து பிராயத்துக்கு மேல் நான் ஒரு பெண்ணை மணந்து கொண்டது உண்மைதான். அதைத் தாராளமாக ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நான்தான் கலியுக ராமாவதாரம் என்று எப்போதும் சொல்லிக் கொண்டதில்லை. ஏகபத்தினி விரதம் கொண்டவன் என்றும் சொல்லிக்கொண்டதில்லை. அந்தப் பெண்ணை நான் காதலித்தேன்; அவளும் என்னைக் காதலித்தாள். பழந் தமிழ் நாட்டு முறைப்படி இஷ்டப்பட்டு மணந்து கொண்டோம். இதில் என்ன தவறு?''

''ஒரு தவறும் இல்லை'' என்று பல குரல்கள் எழுந்தன.

''மணம் புரிந்து கொண்டது தவறு என்று நானும் சொல்லவில்லை. நம்மில் யார்தான் ஒரு தார விரதம் கொண்டவர்கள்? ஆனால்... ஆனால்...''

''ஆனால் என்ன? தயங்காமல் மனத்தைத் திறந்து கேட்டு விடுங்கள்!''

''புது மணம் புரிந்து கொண்ட இளைய ராணியின் சொல்லை எல்லாக் காரியங்களிலும் பழுவேட்டரையர் கேட்டு நடப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். இராஜரீகக் காரியங்களில் கூட இளையராணியின் யோசனையைக் கேட்பதாகச் சொல்லுகிறார்கள். தாம் போகும் இடங்களுக்கெல்லாம் இளைய ராணியையும் அழைத்துப் போவதாகச் சொல்கிறார்கள்.''

இப்போது கூட்டத்தில் ஒரு சிரிப்புச் சத்தம் எழுந்தது.

சம்புவரையர் குதித்து எழுந்து, ''சிரித்தது யார்? உடனே முன் வந்து சிரித்ததற்குக் காரணம் சொல்லட்டும்!'' என்று கர்ஜித்துக் கத்தியை உறையிலிருந்து உருவினார்.

''நான்தான் சிரித்தேன்! பதறவேண்டாம் சம்புவரையரே!'' என்றார் பழுவேட்டரையர். பிறகு, ''வணங்காமுடியாரே! தாலி கட்டி மணந்த மனைவியை நான் போகும் இடத்துக்கெல்லாம் அழைத்துப் போவது குற்றமா? அவ்விதம் நான் பல இடங்களுக்கு அழைத்துப் போவது உண்மைதான்.. ஆனால் ராஜரீக காரியங்களில் இளைய ராணியின் யோசனையைக் கேட்கிறேன் என்று சொல்வது மட்டும் பிசகு. அவ்விதம் நான் ஒருநாளும் செய்வதில்லை.''

''அப்படியானால், இன்னும் ஒரே ஒரு சந்தேகத்தை மட்டும் நிவர்த்தி செய்யும்படி பழுவூர்த் தேவரை வேண்டிக் கொள்கிறேன். அந்தப்புரத்தில் இருந்திருக்க வேண்டிய பல்லக்கு இங்கே

நாம் அந்தரங்க யோசனை செய்யும் இடத்துக்கு ஏன் வந்திருக்கிறது? பல்லக்கிற்குள்ளே யாராவது இருக்கிறார்களா, இல்லையா? இல்லை யென்றால் சற்று முன்பு கேட்ட கனைப்புச் சத்தமும், வளையல் குலுங்கும் சத்தமும் எங்கிருந்து வந்தன?''

இவ்விதம் வணங்காமுடியார் கேட்டதும் அந்தக் கூட்டத்தில் ஒரு விசித்திரமான நிசப்தம் நிலவிற்று. பலருடைய மனத்திலும் இதே வித எண்ணமும் கேள்வியும் தோன்றி யிருந்தபடியால்



வணங்காமுடியாரை எதிர்த்துப் பேச யாருக்கும் உடனே துணிவு ஏற்படவில்லை. சம்புவரையரின் உதடுகள் ஏதோ முணு முணுத்தன. ஆனால் அவர் வாயிலிருந்தும் வார்த்தை ஒன்றும் கேட்கவில்லை.

அந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு பழுவேட்டரையர் கணீர் என்று கூறினார்: ''சரியான கேள்வி; மறுமொழி சொல்ல நான் கடமைப் பட்டவன். இந்தக் கூட்டம் கலைவதற்கு முன்னால் உங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கிறேன். இன்னும் அரை நாழிகை பொறுத்திருக்கலாம் அல்லவா? அவ்வளவு நம்பிக்கை என்னிடம் உங்களுக்கு இருக்கிறது அல்லவா?''

''இருக்கிறது, இருக்கிறது. பழுவேட்டரையரிடம் எங்களுக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது!'' என்று பல குரல்கள் கூவின.

''மற்றவர்களைக் காட்டிலும் பழுவேட்டரையரிடம் எனக்குப் பக்தியும் மரியாதையும் குறைவு என்று யாரும் எண்ணி விட வேண்டாம். அவர் மனத்தைத் திறந்து கேட்கச் சொன்னபடியால் கேட்டேன். மற்றபடி அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறேன். இந்தக் கணத்தில் என் உயிரைக் கொடுக்கச் சொன்னாலும் கொடுக்கச் சித்தம்!'' என்றார் வணங்காமுடி முனையரையர்.

''வணங்காமுடியாரின் மனத்தை நான் அறிவேன். நீங்கள் எல்லோரும் என்னிடம் வைத்துள்ள நம்பிக்கையையும் அறிவேன். ஆகையால் இன்று எதற்காகக் கூடினோமோ, அதைப் பற்றி முதலில் முடிவு கொள்வோம். சுந்தர சோழ மகாராஜா நீடூழி இவ்வுலகில் வாழ்ந்து இந்தச் சோழ சாம்ராஜ்யத்தை ஆளட்டும். ஆனால் ஒரு வேளை ஏதாவது அவருக்கு நேர்ந்து விட்டால், வைத்தியர்களுடைய வாக்குப் பலித்துவிட்டால், சில நாட்களாகத் தோன்றி வரும் தூமகேது முதலிய உற்பாதங்கள் பலித்து விட்டால், அடுத்தபடி இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்துக்கு உரியவர் யார் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.''

''அது விஷயமாகத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கும்படி கோருகிறோம். தங்களுடைய கருத்துக்கு மாறாகச் சொல்லக் கூடியவர் இந்தக் கூட்டத்தில் யாரும் இல்லை.''

''அது சரியல்ல. ஒவ்வொருவரும் சிந்தித்துத் தங்கள் கருத்தை வெளியிடவேண்டும். சில பழைய செய்திகளை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மகா வீரரும் மகா ஞானியும் புண்ணிய புருஷருமான கண்டராதித்த தேவர் யாரும் எதிர்பாராத வண்ணம் இருபத்து நாலு ஆண்டுகளுக்கு முன்னால் காலமானார். அச்சமயம் அவருடைய புதல்வர் மதுராந்தகத் தேவர் ஒரு வயதுக் குழந்தை. ஆகவே தமது தம்பி அரிஞ்சய தேவர் பட்டத்துக்கு வரவேண்டும் என்று திருவாய்மலர்ந்து விட்டுப் போனார். இதை அவருடைய தர்மபத்தினியும் பட்டமகிஷியுமான செம்பியன்மாதேவிதான் நமக்கு அறிவித்தார்கள். அந்தப்படியே அரிஞ்சய

சோழருக்கு முடிசூட்டிச் சக்கரவர்த்தி பீடத்தில் அமர்த்தினோம். ஆனால் விதி வசமாக அரிஞ்சய சக்கரவர்த்தி சோழ சிம்மாசனத்தில் ஒரு ஆண்டுக்கு மேல் அமர்ந்திருக்கவில்லை. அரிஞ்சய சோழருடைய மூத்த புதல்வர் **பராந்தக சுந்தர சோழர்** இருபது வயது இளங்காளைப் பருவம் எய்தியிருந்தார். எனவே, ராஜ்யத்தின் நன்மையை முன்னிட்டு மந்திரிகளும் சாமந்தர்களும் குறுநில மன்னர்களும் நகரத் தலைவர்களும் கூற்றத் தலைவர்களும் சேர்ந்து யோசித்துப் பராந்தக சுந்தர சோழருக்கு முடி சூட்டினோம். அதைக் குறித்து யாரும் வருத்தப்பட இடமில்லை. ஏனெனில், சுந்தர சோழ மகாராஜா இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வரையில் நெறி தவறாமல் நாட்டைப் பரிபாலித்து வந்தார். நம்மையெல்லாம் நன்கு மதித்து யோசனை கேட்டு ராஜ்ய பாரம் நடத்தினார். இதனால் சோழ ராஜ்யம் மேலும் விஸ்தரித்துச் செழித்தது. இப்போது சுந்தர சோழ மகாராஜாவின் உடல் நிலை கவலைக்கிடமாகியிருக்கிறது. இந்த நிலையில் அடுத்தபடி பட்டத்துக்கு உரியவர் யார்? கண்டராதித்த தேவரின் திருக் குமாரர் **மதுராந்தகர்** இப்போது பிராயம் வந்து ராஜ்ய பரிபாலனம் செய்யக் கூடியவராய் இருக்கிறார். அறிவினாலும் கல்வியினாலும் குணத்தினாலும் பக்தி சிரத்தையினாலும் எல்லா விதத்திலும் பட்டத்துக்குத் தகுந்தவராயிருக்கிறார். அவரிலும் ஒரு வயது இளையவரான **ஆதித்த கரிகாலர்** — சுந்தர சோழரின் புதல்வர்— காஞ்சியில் வட திசைப் படையின் சேனாதிபதியாக இருந்து வருகிறார். இந்த இருவரில் யார் பட்டத்துக்கு வருவது நியாயம்? குல முறை என்ன? மனு நீதி என்ன? தமிழகத்தின் பழைமையான மரபு என்ன? மூத்தவரின் புதல்வர் மதுராந்தகர் பட்டத்துக்கு வருவது நியாயமா? அல்லது இளையவரின் பேரர் பட்டத்துக்கு வருவது முறைமையா? நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கருத்தை மனம் விட்டுச் சொல்ல வேண்டும்.''

''மூத்தவராகிய கண்டராதித்த தேவரின் புதல்வர் மதுராந்தகர்தான் பட்டத்துக்கு உரியவர். அதுதான் நியாயம், தர்மம், முறைமை'' என்றார் சம்புவரையர்.

''என் அபிப்பிராயமும் அதுவே'', ''என் கருத்தும் அதுவே'' என்று அக்கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் சொல்லி வந்தார்கள்.

''உங்கள் அபிப்பிராயம்தான் என் அபிப்பிராயமும், மதுராந்தகருக்குத்தான் பட்டம் உரியது. ஆனால் அந்த உரிமையை நிலைநாட்டுவதற்காக நாம் ஒவ்வொருவரும் பிரயத்தனம் செய்யச் சித்தமாயிருக்கிறோமா? உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்து போராடச் சித்தமாயிருக்கிறோமா? இந்த நிமிஷத்தில் துர்க்கா தேவியின் பாதத்தில் ஆணையிட்டு அவ்விதம் சபதம் செய்வதற்குச் சித்தமாயிருக்கிறோமா?'' என்று பழுவேட்டரையர் கேட்டபோது அவர் குரலில் அதுவரையில் இல்லாத ஆவேசம் தொனித்தது.

கூட்டத்தில் சிறிது நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. பிறகு சம்புவரையர், ''அவ்விதமே தெய்வ சாட்சியாகச் சபதம் கூறச் சித்தமாயிருக்கிறோம். ஆனால் சபதம் எடுத்துக் கொள்வதற்கு முன்னால் ஒரு விஷயத்தைத் தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும். இளவரசர் மதுராந்தகரின் கருத்து என்ன? அவர் சிங்காதனம் ஏறி ராஜ்ய பாரத்தை ஏற்கச் சித்தமாயிருக்



கிறாரா? கண்டராதித்தரின் தவப் புதல்வர் உலக வாழ்க்கையை வெறுத்து சிவபக்தியில் பூரணமாக ஈடுபட்டுள்ளார் என்று கேள்விப்படுகிறோம். ராஜ்யத்தில் அவருக்கு விருப்பமில்லை என்று பலர் சொல்லவும் கேட்டிருக்கிறோம். அவருடைய அன்னையார் செம்பியன் மாதேவியார் தமது புதல்வர் பட்டத்துக்கு வருவதற்கு முற்றும் விரோதமாயிருக்கிறார் என்றும் கேட்டிருக்கிறோம். தங்களிடமிருந்து இதைப் பற்றிய உண்மையை அறிய விரும்புகிறோம்.''

''சரியான கேள்வி; தக்க சமயத்தில் கேட்டீர்கள். இதைத் தெளிவுபடுத்தும் கடமையும் எனக்கு உண்டு. முன்னமே சொல்லியிருக்க வேண்டும், சொல்லத் தவறியதற்காக மன்னியுங்கள்'' என்று பீடிகை போட்டுக்கொண்டு பழுவேட்டரையர் கூறத் தொடங்கினார்: ''செம்பியன்மாதேவி தமது ஏகப் புதல்வரை இராஜ்ய பார ஆசையிலிருந்து திருப்பிச் சிவ பக்தி



மார்க்கத்தில் செலுத்துவதற்குப் பிரயத்தனப்பட்டு வந்தது நாடு அறிந்த விஷயம். ஆனால் இதன் காரணம் என்ன என்பதை நாடும் அறியாது; நாட்டு மக்களும் அறியார்கள். மதுராந்தகருக்கு இராஜ்யமாளும் விருப்பம் இருப்பதாகத் தெரிந்தால் அவருடைய உயிருக்கே ஆபத்து வரலாம் என்று பெரிய பிராட்டியார் பயந்ததுதான் காரணம்...''

''ஆஹா!'' ''அப்படியா''' என்ற குரல்கள் கூட்டத்தில் எழுந்தன.

''ஆம்; பெற்ற தாய்க்கு, தன் ஏக புதல்வன் சிம்மாதனம் ஏற வேண்டும் என்னும் ஆசையைக் காட்டிலும் பிள்ளை உயிரோடு இருக்க வேண்டும் என்ற ஆசைதானே அதிகமாக இருக்கும்? அன்னையின் வாக்கே தெய்வத்தின் வாக்கு என்று மதித்து வந்த மதுராந்தகரும் மனத்தை விரக்தி மார்க்கத்தில் செலுத்தி யிருந்தார். சிவ பக்தியில் முழுதும் ஈடுபட்டிருந்தார். ஆனால் சில காலமாக அவருடைய மனம் சிறிது சிறிதாக மாறி வந்திருக்கிறது. இந்தச் சோழ சாம்ராஜ்யம் தமக்கு உரியது; அதைப் பராமரிப்பது தம்முடைய கடமை என்ற எண்ணம் அவருடைய மனத்தில் வேரூன்றி வளர்ந்திருக்கிறது. நீங்கள் எல்லாம் அவரை ஆதரிப்பதாகத் தெரிந்தால், தக்க சமயத்தில் பகிரங்கமாக முன் வந்து சொல்லவும் சித்தமா யிருக்கிறார்...''

''இதற்கு அத்தாட்சி என்ன?''

''உங்களுக்கெல்லாம் திருப்தி தரக் கூடிய அத்தாட்சியை இப்போதே அளிக்கிறேன். அளித்தால் அனைவரும் பிரமாணம் செய்யச் சித்தமா யிருக்கிறீர்களா?''

பல குரல்கள் ''இருக்கிறோம்! இருக்கிறோம்!'' என்று ஒலித்தன.

''யாருடைய மனத்திலும் வேறு எவ்வித சந்தேகமும் இல்லையே?''

''இல்லை! இல்லை!''

''அப்படியானால் இதோ அத்தாட்சி கொண்டு வருகிறேன். வணங்காமுடி முனையரையரின் சந்தேகத்தையும் இப்போதே தீர்த்து வைக்கிறேன்!'' என்று கூறிக் கொண்டே பழுவேட்டரையர் எழுந்தார். கம்பீரமாக நடந்து அங்கே சமீபத்தில் வைக்கப்பட்டிருந்த மூடு பல்லக்கின் அருகில் சென்றார்.

''இளவரசே! பல்லக்கின் திரையை விலக்கிக்கொண்டு வெளியே எழுந்தருள வேண்டும். தங்களுக்காக உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்யச் சித்தமான இந்த வீராதி வீரர்களுக்குத் தங்கள் முக தரிசனத்தைத் தந்தருள வேண்டும்!'' என்று மிகவும் பணிவான குரலில் கூறினார்.

மேல மாடத்தில் தூண் மறைவில் உட்கார்ந்து ஒரு வார்த்தை கூட விடாமல் அடங்கா ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத் தேவன் இப்போது ஜாக்கிரதையாகக் கீழே பார்த்தான். பல்லக்கின் திரையை முன் போலவே ஒரு கரம் விலக்கிற்று. அது பொன் வண்ணமான கரம். முன்னே ஒரு முறை அவன் பார்த்த அதே செக்கச் சிவந்த கரந்தான். ஆனால் அவன் முன்னம் வளையல் என்று நினைத்தது உண்மையில் அரச குமாரர் அணியும் கங்கணம் என்பதை இப்போது கண்டான். அடுத்த கணம் பூரண சந்திரனை யொத்த அந்தப் பொன் முகமும் தெரிந்தது. மன்மதனை யொத்த ஓர் அழகிய உருவம் பல்லக்கிலிருந்து வெளியே வந்து புன்னகை புரிந்து நின்றது. ஆகா! கண்டராதித்த தேவரின் புதல்வரான இளவரசர் மதுராந்தகரா இவர்? பல்லக்கினுள் இருந்தபடியால் பெண்ணாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் அல்லவா அந்தத் தவற்றைச் செய்து விட்டோம்? தன்னைப் போல அதே தவற்றைச் செய்த ஆழ்வார்க்கடியான் நம்பி சுவர் மேல் தலையை நீட்டிக் கொண்டிருக்கிறானா என்று வந்தியத் தேவன் பார்த்தான். அந்த இடத்தில் மர நிழல் விழுந்து இருள் சூழ்ந்திருந்தது. ஆகையினால் அங்கு ஒன்றும் தெரியவில்லை.

இதற்குள் கீழே, ''மதுராந்தகத் தேவர் வாழ்க! பட்டத்து இளவரசர் வாழ்க! வெற்றி வேல்! வீர வேல்!'' என்ற ஆவேசமான முழக்கங்கள் கிளம்பின. கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லாரும் எழுந்து நின்று வாளையும் வேலையும் உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவ்விதம் கோஷமிட்டதை வந்தியத்தேவன் கண்டான். இனிமேல் அங்கிருப்பது அபாயகரமாக முடியலாம் என்று எண்ணித் தான் படுத்திருந்த இடத்துக்கு விரைந்து சென்று படுத்துக் கொண்டான்.

(தொடரும்)



[வடமொழி விற்பன்னரும், கலையபிமானியுமான டாக்டர் வெ. ராகவன் அவர்களுக்கு மணி விழா நடப்பதை யொட்டி, அவரது உருவத்தை இவ்விதழ் அட்டையில் வெளியிடுகிறோம். டாக்டர் ராகவன் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள காளிதாஸனின் சாகுந்தலக் காட்சி ஒன்றினையும் பின்னணியில் தருகிறார் ஓவியர் வினு. மணிவிழா காணும் டாக்டர் ராகவனுக்கு நமது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை அளிக்கிறோம். — ஆசிரியர்]

பேராசிரியரின் பெரும்பணி

கி. சந்திரசேகரன்

டாக்டர் வெ. ராகவன் இன்று ஸம்ஸ்கிருத மூதறிவாளராகவும், அகராதி இலக்கணங்களில் வல்லுநராயுமிருப்பதுடன், சங்கீதம், சாகித்யம், நாட்டியம், நாடகம் இவைகளிலும் மிக்க ஆற்றல் படைத்தவராயிருப்பதன் ரகசியம் இவருடைய தனிப்பட்ட ஸம்ஸ்கிருதப் பயிற்சியினால் என்றால் தவறாகாது. முக்கியமான நான்கு சாஸ்திரங்களில் கை தேர்ந்தவரான மகா மகோபாத்தியாய குப்புஸ்வாமி சாஸ்திரிகளின் பேரன்புக்குப் பாத்திரமான சீடர்களில் இவர் ஒருவராயிருந்தார்.

திருவாரூரில் 1908ம் ஆண்டில், ஆகஸ்டு 22ம் தேதி புனர்வசு நட்சத்திரத்தில் பிறந்த இவர், இன்று அறுபது ஆண்டுகளாய் ஸம்ஸ்கிருதக் கல்விக்குப் பணியாற்றி வந்திருப்பது ஒரு தனிச் சிறப்பு. நல்ல வைதிக குலத்தில் இவர் தோன்றியுள்ளார். இவர் எப்படித் தமது சிறு வயதிலிருந்தே இவ்வளவு உழைப்பும் ஊக்கமும் காட்டி ஸம்ஸ்கிருதப் படிப்பை வளர்த்துக் கொண்டுள்ளார் என்பதை நினைக்கையில் புறத்திலிருந்து பெறக்கூடிய பண்பல்ல இது; தம்மிடமே வளர்ந்த பூர்வ ஜன்ம வாசனை என்றுதான் கொள்ளத் தோன்றும். ஆங்கிலமும், தமிழும் கூடவே பயின்றவராயினும், ஸம்ஸ்கிருத மொழியில் ஏற்பட்ட சுயமான ஆர்வம் பிற மொழிகளில் இருந்ததை விட அதிகம். குப்புஸ்வாமி சாஸ்திரிகளைக் குருவாகக் கொண்டு இவர் பாடம் கேட்க நேர்ந்தது இவரது பேரதிர்ஷ்டமாகும்.

டாக்டர் பட்டம் ராகவனுக்கு ஏதோ குருவின் உதவியால் கிடைத்து விட்டதோ எனச் சந்தேகிப்பவர்கள், ராகவன் எழுதிய வியாஸத்தைப் பரிசீலனை செய்த பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியர் ஸில்வான் லெவி (Sylvain Levi) டாக்டர் தாமஸ் (Doctor Thomas) ஏ. பி. கித் (A. B. Keith) இம்மூவரும் புடம் போட்டுப் பார்த்த ஆராய்ச்சி நிபுணர்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். இவர் வியாஸத்துக்கு விஷயமாய் எடுத்துக்கொண்ட பொருள் போஜனுடைய 'ச்ருங்காரப் பிரகாசம்' என்ற நூல். அந்நூல் அச்சில் ஏறாத காலம் அச்சமயம். அதைத் தமது மாணவர் ஆராய்ச்சிக்கு உகந்ததாய்ப் பொறுக்கியதையே மகா மகோபாத்யாய குப்புஸ்வாமி சாஸ்திரிகள் போற்றியுள்ளார். பிற்பாடு பரீட்சகர்கள் குறித்திருந்த நற்சாட்சிகளையும் கண்டு மனப் பூரிப்புடன் அன்றே தமது சிஷ்யனுக்கு ஆசிகளை வாயாரச் சொன்னதுடன், மனமாரவும் வழங்கினார். ராகவனுடைய மண மகோற்சவத்தின்போது சாஸ்திரிகள் தாமே இரண்டு அடிகள் கொண்ட சுலோகமொன்றையும் எழுதி வாழ்த்தியது குறிப்பிடத் தக்கது. குருவின் அன்பும் அறிவும் இவரிடம் நன்கு நிறைவெய்தியிருப்பது இவர் செய்துள்ள பெரும் பாக்கியம்.

சாஸ்திரிகளிடம் சென்னை மாநிலக் கல்லூரியில் ஆனர்ஸ் (Honours) வகுப்பில், ஸம்ஸ்கிருத பாடம் பயின்ற பின், பரீட்சைகளிலும் பல தங்கப் பதக்கங்கள் பெற்று, தஞ்சை சரஸ்வதி மகால் புத்தகசாலையில் சிறிது காலம் வேலை பார்த்தார். பிற்பாடு சென்னை சர்வ கலாசாலையில் ஒரு பகுதியான ஸம்ஸ்கிருத ஆராய்ச்சி நிலையத்தில் படிப்படியாய் உரையாசிரியர் பதவியிலிருந்து மேல் நிலைக்கு வந்து 1955ல் முக்கிய ஆசிரியர் ஸ்தானத்தில் அமர்ந்து விட்டார். காடலாகம் காடலாகோரம் (Catalogum Catalogoram) என்ற மிகவும் பாரமான அகராதித் தொகுப்பு வேலையில் முனைந்தார். இன்று அதன் மூன்று நான்கு பாகங்கள் வெளியாகி உள்ளன. இப்பெரிய சாதனையை இவ்வளவு சிறப்பாகவும் தரமாயும் வேறு யாருமே நிறைவேற்றி யிருக்க மாட்டார்கள்.

ஆராய்ச்சி என்பதை ஏதோ மேலெழுந்த வாரியாகக் கொண்டு கடன் தீர்ப்பதைப் போல் வேலையை ஒருவிதமாய் முடித்துத் திருப்திப்படுபவரல்ல டாக்டர் ராகவன். அவர் ஆராய்ச்சி புரிகையில் ஒவ்வொரு துறையிலும் உள்ள புத்தகங்களை நுணுக்கமாய்ப் பார்வை யிடுவார். சங்கீதம், நாட்டியம்,

டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் பரிசு பெறுகிறார்.



நாடகம், நாடகத் தயாரிப்பு போன்ற விதம் விதமான துறைகளிலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. இன்று சென்னை சங்கீத வித்வத் சபை, சங்கீத நாடக சங்கம், நாட்டிய சங்கம், ஸம்ஸ்கிருதரங்கம் இன்னும் இம்மாதிரியான கலைகளைப் பாதுகாக்கும் நிர்வாகங்களில் சலியாது டாக்டர் ராகவன் அவர்கள் உழைப்பதைக் காண்கிறோம்.

பல அரிய புத்தகங்களைப் பிரகரிப்பது ஒரு புறமிருக்க, தாமே எழுதிய ஸம்ஸ்கிருதப் புத்தகங்களும், ஆங்கிலப் புத்தகங்களும் இவருடைய அறிவுத் திறனையும், எழுதும் ஆற்றலையும் பரிமளிக்கச் செய்துள்ளன.

இவருடைய 'ஸ்ருங்காரப் பிரகாசம்' என்ற ஆராய்ச்சி நாலின் இரண்டாவது பதிப்புக்கு இந்திய சாகித்திய அகாடமி ஐயாயிரம் ரூபாய் பரிசை 1966ம் ஆண்டில் வழங்கினார்கள். இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டாலும் ஆங்காங்கே தகுந்த மேற்கோள்களை ஸம்ஸ்கிருதத்திலேயே எடுத்துக் காட்டியுள்ளார். இன்னும் காலஞ்சென்ற சி. ராமானுஜாச்சாரியார் சேகரித்த தியாகையர் கிருதி நூலில் தியாகராஜ சுவாமிகளுடைய இசை சம்பத்தை விளக்கி இவர் எழுதியுள்ள முகவுரையை மிகவும் பயனுள்ளதாய்க் கருதுவர் சங்கீத அறிஞர்கள். நவரசங்கள் எவ்வளவு துல்லியமாய் இந்தக் கீர்த்தனங்களில் வெளியாகின்றன என்பதை மனத்தில் படும்படி விளக்கியிருப்பது மிகவும் சுவையூட்டுவதாய் இருக்கிறது.

ஸ்ரீமதி பாலசரஸ்வதியுடன் இவர் உருவாக்கிய பரத நாட்டிய நூல் பரத சாஸ்திரத்தில் இவருக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறது. வேண்டிய அளவு நாட்டிய உத்திகளின் விளக்கங்களை இந்தத் தமிழ் நூலில் காணலாம். எளிமையாயும், புரியக்கூடிய முறையிலும் அப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

ஆங்கிலத்தில் இவர் உழைப்பின் விளைவால் வெளிவந்த அரிய கட்டுரைகள் பல. முக்கியமாய் The Indian Heritage என்ற தொகுப்பில் இவர் தந்துள்ள ஸம்ஸ்கிருத இலக்கியத்திலிருந்து திரட்டிய செல்வங்கள் விலைமதிக்க இயலாதவை. மொழிபெயர்ப்பும் எவ்வளவு தூரம் மூலத்தைக் குறைவுபடுத்தாத விதமிருக்க வேண்டுமோ அவ்வளவு அக்கறையுடன் செய்யப்பட்டுள்ளது. இவருடைய 'அலங்கார சாஸ்திரத்தின் சில அம்சங்கள்' என்ற தலைப்பிலுள்ள நூலைச் சென்னை பிரம்ம சமாஜத்தார் வெளியிட்டார்கள். கிட்டத்தட்ட சிறியதும் பெரியதுமாக இவரால் எழுபது நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இதனுடன் பல பத்திரிகைகளுக்கு இவர் வழங்கிய கட்டுரைகள் குறைந்தது எழுநூறு இருக்கும்.

குப்புசாமி சாஸ்திரி ஆராய்ச்சி நிலையத்தின் பத்திரிகையில் இவருக்குள்ள அக்கறையும், அதற்காக இவர் செய்துள்ள உழைப்பும் சாமான்யமல்ல. தமது குருவின் ஞாபகத்தை என்றும் பசுமையாகவே கருதுவதற்கு அத்தாட்சி போல் அந்த நிலையத்தின் காரியங்களை நன்கு பார்த்து வருவதுடன், அதன் பத்திரிகையிலும் அருமையான ஆராய்ச்சி முடிவுகளை அவ்வப்போது தாமும் இதரர்களுமாய்ச் சேர்ந்து பதிப்பித்து வருகிறார்.

வந்தவர்: ஒரு மைசூர்பாகு -- இரண்டாகம் பண்ணிக் கொண்டு வாங்கோ. ஒரு மசால் தோசை - ஒன் பை டு ஒரு கப் காப்பி - அதுவும் அப்படியேதான்!



ஸர்வர்: பில்லை முழுசாகவே கொடுத்துடலாமா?

-- கலோர்

இன்னும் ஸம்ஸ்கிருதத்திலேயே சாகித்திய அகாடமி தொடங்கியுள்ள 'ஸம்ஸ்கிருத பிரதிபா' என்ற பத்திரிகையும் இவரால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

சென்னை சங்கீத வித்வத் சபையின் பத்திரிகை ஒன்று பல ஆண்டுகளாய் வெளி வருகிறது. சங்கீத கலாநிதி டி. வி. சுப்பராவ் அவர்கள் அதன் ஆசிரியராய்ச் சிறிது காலம் இருந்தார். அவருக்குப் பின் டாக்டர் ராகவனே அதனை வெளியிட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

ஸம்ஸ்கிருதத்தில் இவர் முத்துஸ்வாமி தீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றைச் செய்யுள் வடிவத்தில் செய்திருக்கிறார். முடிவடையாத காவியமாயினும் அதன் அருமையை உணர்ந்த காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அதனைப் பாராட்டி டாக்டர் ராகவனை 'கவி கோகிலம்' என்று பாராட்டினார். ஆசாரிய சுவாமிகள் வருஷா வருஷம் நடத்தும் ஆகம சிற்ப சதஸ் காரியங்களில் இவருக்குள்ள ஈடுபாட்டையும் அச்சமயம் பல வெளி நாட்டு அறிஞர்களுடன் தொடர்பு இருப்பதால் அவர்களுடைய ஒத்துழைப்பை இச்சதஸுக்குப் பயன்படுத்தும் பணியில் இவர் முனைவதையும் கௌரவிக்க காமகோடி பீடாதிபதிகள் 'சகல கலா கலாப' என்ற விருதையும் இளையாத்தங்குடியில் சதஸ் முடிவெய்தியதும் இவருக்கு வழங்கிப் பெருமைப்படுத்தினர். சிறியதும் பெரியதுமான நாடகங்களையும், ஹாஸ்ய நாடகங்களையும் எழுதியதுமல்லாமல், ஸம்ஸ்கிருதரங்கத்தில் அவைகளைத் தாமே தயாரித்து, தமது சக உறுப்பினர்களைக் கொண்டு நடித்தும் காட்டியிருக்கிறார். இவருடைய சேவையைப் பாராட்டி இந்திய அரசாங்கம் 1962ம் ஆண்டில் 'பத்ம பூஷணம்' என்ற விருதை இவருக்கு வழங்கியது. சென்னை சங்கீத வித்வத் சபை முதலிய நிறுவனங்களில் இவருடைய சேவைக்காகவும் இவருடைய கலை சம்பந்தமான நூல்களுக்காகவும் இந்திய சங்கீத நாடக அகாடமியின் நிரந்தர 'ஃபெல்லோ' (Fellow) என்ற அக்குழுவின் உயர்ந்த சன்மானம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவருடைய பழமை நூல் ஆராய்ச்சிப் பணிக்காக அரியதொரு பாராட்டான 'The Noble Order of St Martin' என்ற பெருமதிப்பைக் காட்டும் சின்னத்தை இவருக்கு ஆஸ்திரிய தேசத்திலுள்ள அறிஞர்கள் வழங்கினர்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பதக்கங்களும் பரிசுகளும் பெற்ற பின்னும் துளியும் தமது அன்றாட உழைப்பைக் குறைத்துக் கொள்ளாமல் பல தொண்டு

களில் ஈடுபட்டிருப்பது இவருடைய புத்தியின் சிறப்பை விளம்பரம் செய்கிறது.

ஸம்ஸ்கிருத ஆராய்ச்சிநூல் நிலையங்களையும் அவைகளிலுள்ள பிரசுரிக்கப்படாத சுவடி முதலியவைகளையும் பரிசீலனை செய்வதில் மிகவும் முனைந்த உள்ளம் ராகவனுடையது. அது காரணமாகவே வெளி நாடுகளுக்குச் சென்று அங்குள்ள நூல்களை யெல்லாம் புத்தகசாலைகளிலும் இதர இடங்களிலும் கண்டு கணக்கெடுக்கும் பணியில் இவர் இறங்கினார். 1953ம் ஆண்டில் இங்கிலாந்து, ஜெர்மனி, முதலிய நாடுகளுக்குச் சென்று, 20,000 நூல்களின் அட்டவணையைத் தயாரித்தார். பிற்பாடு சோவியத் ருஷ்யாவுக்கும் 1958ல் சென்றார். 1964ல் அமெரிக்காவுக்கும், திரும்புகையில் ஜப்பான் முதலிய ஆசிய நாடுகளுக்கும் சென்று தமது ஆராய்ச்சி ஆர்வத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார். நேபாளம், உஜ்ஜெயினி முதலிய இடங்களிலும் இந்தியப் பண்பாட்டுக்கு உகந்ததான பற்பல காரியங்களில் ஈடுபட்டுள்ளார்.

எழுதலாம், உழைக்கலாம், பரிசுகள் பெறலாம், பலருடன் பழகலாம், இன்னும் அறிவாளிகளின் மத்தியில் நல்ல பெயர் எடுக்கலாம். ஆயினும், தன்னால் இனி ஒன்றும் செய்ய இயலாது என்ற மனக் குறை இப்படிப்பட்டவர்களுக்கும் ஏற்படுவதுண்டு. டாக்டர் ராகவனிடமோ இம் மனக் குறை ஒரு சமயமும் வெளியானது கிடையாது. மறதி என்பதே இவருடைய புத்தியை நெருங்க முடியாது. டாக்டர் ராகவன் தம்முடன் உழைப்பவர்களை என்றுமே மறப்பவரில்லை. தமக்கு அநுசரணையாக எந்தத் துறையில் வேலை செய்தவர்களையும் சமயமறிந்து பாராட்டுவதிலும் அவர்களுக்கு உகந்த விதம் உதவிகளை வழங்குவதிலும் தம்முடைய நல்லெண்ணத்தை வடிவு கொள்ளச் செய்திருக்கிறார்.

புனிதமான மொழி ஸம்ஸ்கிருதம். அதன் எல்லையற்ற செல்வங்களைத் தமதாக்கிக் கொண்ட ஒருவருக்கு விருதுகளும் பாராட்டுக்களும் ஓரளவே இனிக்கும். டாக்டர் ராகவன் என்ற பெயர் நிரந்தரமாக நிலைக்கும் வகையில் அரிய அறிவுத் துறை சேவைகளில் ஈடுபட்டுள்ள இவருடன் நாம் சகஜமாய்ப் பழகும் பேறு பெற்றிருப்பதை, ஒரு முறையல்ல பலமுறைகள் நினைந்து, உவகையில் மூழ்கி எழுகிறோம். இன்று ஸம்ஸ்கிருத உலகில், இங்கு மட்டுமல்ல, பிற தேசங்களிலும் சரி, இந்திய நாட்டின் பிரதிநிதியாக யாரையாவது சுட்டிக் காட்ட வேண்டுமானால் அவர் டாக்டர் ராகவனாகவே இருப்பார்.



ராதிகா நடனம்

மூன்றாண்டுப் பயிற்சிக்குப் பின் லலிதா சுப்பிரமணியம் பரத நாட்டியப் பள்ளியின் முதல் மாணவியாக அரங்கம் ஏறிய குமாரி ராதிகாவின் பரதநாட்டியம் அவளுக்கும், பள்ளிக்கும், ஆசிரியர்களுக்கும் நல்ல பெயரை வாங்கிக் கொடுத்திருக்கிறது.

டாக்டர் செந்தில்நாதன் புதல்வி குமாரி ராதிகா. பந்தநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளையிடமும், அவருக்குப் பின் திரு சுப்ரமணிய பிள்ளையிடமும் நாட்டியக் கலையைப் பயின்றதன் முத்திரை குமாரி ராதிகாவின் அடைவுகளிலும் கச்சிதமான தீர்மானங்களிலும் நிருத்தங்களிலும் வெளிப்பட்டது. ''தாயே யசோதா'', ''தெருவில் வாராஹே'' என்பன போன்ற உருப்படிகளின் பாவங்கள் ஒன்பது வயதுச் சிறுமியின் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டதென்றாலும் அபிநயங்களும் முக பாவங்களும் பொருத்தமாகவே அமைந்திருந்தன. பதம் பாடிய ஸ்ரீமதி ஸௌமனா சுந்தரத்தின் இசை சிறப்பாக இருந்தது.

வசதியும் உற்சாகமும் ஒருங்கே கூடியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவளாதலால் குமாரி ராதிகாவின் பரதக்கலை அபிவிருத்தியடைய வாய்ப்பு உள்ளது.



அரங்கேற்ற விழாவுக்குத் தலைமை வகித்த கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் ''நாட்டிய கலாபூஷணி'' என்ற சான்றிதழைக் குமாரி ராதிகாவுக்கு வழங்கி, ஒரு வெள்ளித் தட்டையும் அன்பளிப்பாக வழங்கினார்.

சிறுவர் விருந்து

தயாரிப்பு: வாண்டுமாமா



கிளி மரம்!

தமிழ்முடி

கிளியைப் போல உள்ள மரத்தைக்
கண்டு கேட்ட துண்டுமோ ?
கிளியைப் போல உள்ள மரமே
கிளைகள் உள்ள ஆலமரம் !

ஆலின் இலையே கிளியின் இறகாம்
ஆலின் பழமே கிளியின் மூக்காம்!
ஆலின் விழுதே கிளியின் காலாம் !
ஆல மரமே அதனால் கிளியாம் !

அதனால் நாமும் ஆலமரத்தை
அழைப்போம் கிளியின் மரமென்றே!


வேறு

தாடி வளர்க்கும் முனிவர்போலத்
தாடி வளர்க்கும் மரமுண்டு !
ஆடி அசைந்து விழுதுதொங்கும்
ஆல மரமே ''தாடிமரம்!''

இயற்கை விநோதம்

உலகின் மிகப் பழைமையான மிருகம்

எது தெரியுமா? ஆமைதான். நம் புராணங்களில்கூட ஆமை தான் இந்த உலகத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாக ஓர் ஐதீகக் கதை உண்டு. ஆகவே, ஆமை அந்தளவு பழைமையானது. இன்றைய மிருகங்களில் பல, காலத்தின் போக்கில் எத்தனையோ மாறுதல்களுக்குட்பட்டு இன்றைய உருவை அடைந்திருக்கின்றன. ஆனால் ஆமையிடம் அதிக மாறுதல் ஏற்படவில்லை என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். கவச மோட்டாரைத் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் மனிதனுக்கு (Armoured Tank) தோன்றியதே ஆமையைக் கண்டுதான். இதன் பாதுகாப்பான ஓடுதான் இதன் நீண்டகால வாழ்வுக்குக் காரணம். ஆமைக்கு அதன் ஓடு பாதுகாப்பாக இருக்கும். அதே நேரத்தில் அதன் இயக்கத்துக்கும் உதவுகிறது. ஆமையின் வேகம் நமக்கெல்லாம் தெரியும். இதன் அவசரமற்ற தன்மையே இதன் நீண்ட ஆயுளுக்குக் காரணம் என்றால் வியப்பாக இல்லை? அதிகமாக இயங்கும் இயந்திரத்தின் பாகங்கள் சீக்கிரம் தேய்ந்து விடுவதில்லையா? மற்ற மிருகங்களின் சுறுசுறுப்பான ஆட்ட ஓட்டம் அவைகளின் ஆயுளைக் குறைத்துவிடுகின்றன. வேகமே இல்லாத ஆமையின் உடல் உறுப்புகளில் தேய்மானம் மிகக் குறைவாகவே இருக்கிறது. இதுவே ஆமையை அதிக காலம் வாழவும் வைக்கிறது. பதற்றமில்லாமலிருந்தால் பல காலம் வாழலாம் போலிருக்கிறது !




பதில் தெரியுமா ?


ஐந்து கேள்விகள் :

- இங்கிலாந்தின் தலை நகரம் இப்போது லண்டன். அதற்கு முன்பு எந்த நகரம் இந்தச் சிறப்பைப் பெற்றிருந்தது தெரியுமா?
- இங்கிலாந்தின் முதல் அரசர் யார்?
- ஆமைகள் தங்கள் முட்டையை எப்படி அடை காக்கின்றன ?
- குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மம்மல்களின் கழுத்து ஏழு எலும்புகளால் இணைக்கப்பட்டிருக்கும். ஒட்டைச் சிவிங்கிக்கோ?
- நீங்கள் சவாரி செய்யும் காரில் கந்தகோமிலம் பயன்படுத் தப் பட்டிருக்கிறது. எங்கே தெரியுமா?

டடடடா, டடடடா, டட்டடா, டட்டடா...!




பக்கத்தில் உள்ள படத்தில் மூன்று பட்டைகளுக்கு இடையில் உள்ள இரண்டு வெள்ளைப் பகுதிகளை உற்றுப் பாருங்கள். மேலேயுள்ள வெள்ளைப் பகுதியின் இரு முனைகளும் அகலமாக இருப்பதாயும் கீழேயுள்ள வெள்ளைப் பகுதியின் நடு மையம் உப்பி இருப்பதாகவும் தோன்றும். ஆனால் கண்ணால் காண்பது பொய்! இரண்டுமே சர்வ சமமாக உள்ள பகுதிகள்தான்.




முத்துக்கள்

மேலே பன்னிரண்டு முத்துக்கள் இருக்கின்றன. அவைகளை இங்குள்ள காலிக் கட்டங்களில் ஏதோ ஒரு முறைப் படி வைக்க வேண்டும். அப்படி அமைப்பது மேலிருந்து கீழாகவோ, இடமிருந்து வலயாகவோ மூலைக்கு மூலையோ எப்படிப்பார்த்தாலும் வரிசைக்கு இரண்டு முத்துக்கள்தான் இருக்க வேண்டும். முடியுமா? முத்துங்கள், முத்துக்களை அமைக்க.



: விடை



அதோ துரத்தி வருகிறது பூனை... பயந்து பாய்ந்தோடுகின்றன இந்த எலிகள். ஆனால் பொல்லாததாயிற்றே பூனை. எலிகளால் தப்பி விடமுடியுமா? ! மேலேயுள்ள கறுப்புப் பட்டைதான் அவைகளின் வளை. பூனையிடம் சிக்காமல் வளைக்குள் செல்ல அவைகளுக்கு வழி காட்டுவீர்களா?



கஜமுகன்: நான் இனி மேல் பள்ளிக்கூடம் போக மாட்டேம்மா.

தாயார்: ஏன், என்ன விஷயம்?

கஜமுகன்: திங்கட்கிழமை வாத்தியார் நாலும் நாலும் எட்டுன்னார். செவ்வாய்க்கிழமை ஆறும் ரெண்டும் எட்டுன்னார். இன்னிக்கு ஏழும் ஒண்ணும் எட்டுங்கறார். இன்னும் அடுத்த நாள் என்ன சொல்லப் போகிறாரோ! அவர் ஒரு முடிவுக்கு வரவரைக்கும் நான் ஸ்கூலுக்குப் போகமாட்டேம்மா.

ஐந்து கேள்விகள் விடைகள் :

1. வின்செஸ்டர்
2. எக்பர்ட்
3. அடைகாப்பதில்லை. சூடான மணலில் முட்டைகளை இடுகின்றன. அந்தச் சூட்டிலேயே அவை பொரிந்து குஞ்சுகள் வெளிவருகின்றன.
4. அதற்கும் ஏழு எலும்புகள்தான்.
5. பாட்டரியில்.



இளமையின் எழில் ததும்பும் வதனம் பூவிலும் மென்மையான சருமம் பெறுங்கள்!

...அதற்கு உங்கள் சருமத்தின் இயற்கையான ஈரத் தன்மை மாறாமல் பாதுகாப்பது அவசியம்


பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமிலுள்ள பிரத்தியேகக் கலவை 'ஹ்யுமெக்டன்ட்' சருமத்தின் இயற்கையான ஈரத்தை உலராமல் காக்கிறது. இதனால் பருவகால மாறுதல்களாலோ, தூசு முதலியவற்றாலோ, சருமம் வறட்சியடையாமல் மிருதுவாக இருக்கிறது. துல்லிய வெண்பனி போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் வதனத்திற்கு இளமை எழிலையும், மென்மை சோபையையும் அளிக்கும். பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாகப் பூசிக் கொண்டாலே உங்கள் முகம் பொலிவுடன் விளங்கும். அல்லது முகத்தில் முதலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தடவி அதன் மேல் பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் ஒரே சீராகப் படிந்து முகம் மாசு மறுவில்லாமல் திகழும்!



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—உலகத்து அழகிகளின் வதனத்தில் மிளிர்வது

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப்பட்டது)

P-6790



ராஜாஜி

47. பிரதிக்ஞை முடிந்தது

தனஞ்சயனுடைய போர்த் தேர் பூமி அதிர முன் சென்றது. காண்டிபத்தின் நாண் ஒலியைக் கேட்ட கௌரவப் படையில் உள்ள வீரர்களுக்கு நெஞ்சு பதைத்தது.

''சேனையை நன்றாக அணிவகுத்துக் கொண்டு ஒன்று கூடிக் கவனமாகப் போர் புரிய வேண்டும். அருச்சுனன் வந்து விட்டான்'' என்றார் துரோணர்.

துரோணருடைய கவலையும் மனக் கலக்கமும் துரியோதனனுக்குப் பிடிக்கவில்லை. ''ஆட்டத்தில் தோல்வியடைந்த பாண்டவர்கள் காட்டில் பன்னிரண்டு வருஷமும் அதற்கு மேல் ஒரு வருஷம் யாராலும் அறியப்படாமலும் வசித்து முடிக்கவேண்டும் என்பது பிரதிக்ஞை. பதின்மூன்றாவது வருஷம் இன்னும் முடியவில்லை. அதற்கு முன்னதாகவே அருச்சுனன் அறியப்பட்டான். ஆதலால் நமக்கு என்ன பயம்? பாண்டவர்கள் எப்படியும் மறுபடியும் பன்னிரண்டு வருஷங்கள் வனவாசம் செய்யப் போக வேண்டும். துரோணர் வீணாகப் பயப்பட்டுச் சாகிறார். இது பண்டிதர்களுடைய சுபாவம். பிறருடைய குற்றங்களைத் தேடி எடுத்துக் காட்டுவதிலேயே அவர்கள் எப்போதும் தங்கள் திறமையைக் காட்டுவார்கள். இவர்களைப் பின்புறத்தில் நிறுத்திவிட்டு நாம் முன் நின்று போரை நடத்துவோம்'' என்று கர்ணனைப் பார்த்துச் சொன்னான்.

கர்ணனும் துரியோதனனுடன் சேர்ந்து, ''இந்தச் சேனையில் உள்ள போர்வீரர்கள் போரில் மனத்தைச் செலுத்தாமல் பயத்தால் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்மை நோக்கி வரும் தேரில் வில்லைப் பிடித்து நிற்பவன் அருச்சுனன் என்கிறீர்கள். அவன் பரசுராமனேயானாலும் நமக்கு என்ன பயம்? நான் ஒருவனே இவனைத் தடுப்பேன். துரியோதனனுக்கு நான் அந்தக் காலத்தில் செய்த பிரதிக்ஞையை

இப்போது தீர்க்கப் போகிறேன். கௌரவ சேனையும் எல்லா வீரர்களும் சும்மா நின்றாலும் நிற்கட்டும். அல்லது, அவர்கள் மத்ஸ்ய ராஜனுடைய பசுக்களை ஓட்டிக் கொண்டு போகட்டும். நான் மட்டும் நின்று இந்தப் பார்த்தனை எதிர்ப்பேன்'' என்று வீரியம் பேசினான்.

கிருபாசாரியார் கர்ணன் பேசியதைக் கேட்டு, ''இது சுத்த மடத்தனம்'' என்றார். ''பார்த்தனை நாம் எல்லோரும் சேர்ந்து எதிர்த்துப் போர் புரிய வேண்டும். நாம் அறுவரும் அவனை நான்கு புறத்திலும் சூழ்ந்து கொண்டால்தான் தப்புவோம். நீ தனியாகச் சாகசம் செய்யாதே'' என்றார்.

கர்ணனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''ஆசாரியாருக்கு அருச்சுனனைப் புகழ்வதில் எப்போதும் சந்தோஷம். அவனுடைய பலத்தை அதிகப்படுத்திச் சொல்லுவதே இவருடைய பழக்கம். இது பயத்தினால் உண்டானதா அல்லது சத்துருவினிடத்தில் அவருக்கு இருக்கும் அதிக அன்பினாலா என்பது எனக்குத் தெரியாது. பயந்தவர்கள் போர் புரிய வேண்டியதில்லை. சும்மா இருக்கலாம். எஜமானன் சோற்றை உண்ட பெரி



யோர்கள் அவர்களுடைய இஷ்டப்படி திரும்பிப் போகலாம். நான் இங்கே நின்று போர் செய்வேன். வேதமோதுகிறவர்களுக்கும் விரோதியைப்பாராட்டுகிறவர்களுக்கும் இங்கே என்ன வேலை?'' என்றான்.

இவ்வாறு தகாத முறையில் ஆசாரியரைப் பரிகசிப்பதைக் கேட்ட அசுவத்தாமனுக்குப் பொறுக்கவில்லை. அசுவத்தாமன் கிருபனுடைய சகோதரி குமாரன். ''கர்ணனே! நாம் இன்னும் பசுக்களைக்கூடப் பிடித்து ஹஸ்தினாபுரம் போய்ச் சேர்ப்பிக்கவில்லை. ஒரு காரியமும் செய்து முடிக்காமலேயே வீணாக தற்புகழ்ச்சி பேசிக் கொண்டிருக்கிறீர்கள்; நாங்கள் க்ஷத்திரியர்களல்ல; வேதம் ஓதுகிறவர்கள்தான்; சாஸ்திரம் படிக்கிறவர்கள்தான். அரசர்களைச் சூதாட்டத்தில் ஜயித்து ராஜ்யம் அடையலாம் என்பதாக நான் படித்த எந்த சாஸ்திரத்திலும் சொல்லப்படவில்லை. போர் செய்து வெற்றி பெற்று ராஜ்யங்களை அடைந்தவர்களும் கூடத் தங்களைப் புகழ்ந்து கொள்ளுகிறதில்லை. நீங்கள் என்ன காரியம் சாதித்துவிட்டு இவ்வளவு பேசுகிறீர்கள்? நெருப்பு ஒன்றும் பேசாமல் பதார்த்தங்களை மௌனமாகப் பக்குவம் செய்கிறது. சூரியன் பேசாமலே பிரகாசிக்கிறான்.

பூமியானது தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசாமலேயே சகல சராசரங்களையும் தாங்குகிறது. சூதாட்டத்தில் ராஜ்யத்தைப் பெற்ற ஒரு க்ஷத்திரியனுக்கு என்ன புகழுரிமை? பறவைகளை மோசம் செய்து வலையில் பிடிக்கிற வேடனைப் போல் பாண்டவர்களுடைய ராஜ்யத்தைக் கவர்ந்தவர்கள் தற்புகழ்ச்சியில் இறங்காமலாவது இருக்க வேண்டும். துரியோதனனே! ஏ, கர்ணனே, நீங்கள் எந்த யுத்தத்தில் பாண்டவர்களை வென்றீர்கள்? ஒற்றை ஆடை உடுத்தியிருந்த துரௌபதியைச் சபைக்கு இழுத்து வந்தீர்கள். அவளை எந்த யுத்தத்தில் நீங்கள் ஜெயித்தீர்கள்? மூடர்களே! வாசனையை விரும்பிப் பெரிய சந்தன மரத்தை வெட்டுகிற பாமரனைப் போல் கௌரவ குலத்தை வெட்டித் தள்ளினீர்கள். அன்று சூதாட்டத்தில் தாயக் கட்டையை வீசி இந்திரப்பிரஸ்தத்தைக் கவர்ந்ததுபோல் இப்போது பார்த்தனுடன் யுத்தம் செய்ய முடியாது. காண்டீபமானது கூரிய அம்புகளை எறியும். 'நாலு இரண்டு' என்று பாய்ச்சிகைகளை எறியாது. அகம்பாவம் கொண்ட மூடர்களே! சகுனியுடன் சதி செய்து சூதாடினதுபோல் யுத்தத்தில் நடக்காது'' என்றான்.

கௌரவ சேனைத் தலைவர்கள் பொறுமை இழந்து, மாறுபட்டு இவ்வாறு வாதாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த குலத் தலைவர் பீஷ்மர் வருத்தத்துடன் பேசலானார்:

''அறிவுள்ள மனிதன் ஆசாரியனை அவமதிக்க மாட்டான். தேச காலங்களை நன்றாக ஆலோசித்து யுத்தம் செய்ய வேண்டும். அறிந்தோர்களும் தம்முடைய காரியங்களில் புத்தி தடுமாறுகிறார்கள். மகா புத்திசாலியான துரியோதனனும் தன் முன் நிற்பது தனஞ்சயன் என்று தெரிந்து கொள்ளவில்லை. கோபத்தினால் புத்தி தடுமாறுகிறான். அசுவத்தாமரே! கர்ணன் சொன்னது ஆசாரியனுடைய ஆத்திரத்தை வளர்ப்பதற்காகவே என்று கொள்ள வேண்டும். நீங்கள் அவன் பேச்சைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். விரோதங்கள் பாராட்டுவதற்கு இது காலமல்ல. துரோணரும், கிருபரும் அசுவத்தாமரும் பொறுத்துக் கொள்ள வேண்டும். கௌரவ வீரர்களுக்கு ஆசாரியரான துரோணரையும் அவருடைய புத்திரர் அசுவத்தாமரையும் விட உலகத்தில் வேறு யாரிடத்தில் நான்கு வேதங்களும் க்ஷத்திரிய தேஜஸும் சேர்ந்தாற்போல் காண முடியும்? துரோணருக்குச் சமமாகச் சொல்லக் கூடியவர் பரசுராமரைத் தவிர வேறு யாரைப் பற்றியும் நாம் கேட்டதில்லை. ஆசாரிய புத்திரர் பொறுத்துக்கொள்ள வேண்டும். உள் கலகத்துக்கு இது சமயமல்ல. பார்த்தனை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தே வெல்ல முடியும். இனி நாம் ஆகவேண்டிய காரியத்தை யோசிப்போம். நமக்குள் கலகம் உண்டானால் தனஞ்சயனை எதிர்க்க முடியாது.''

இவ்வாறு கௌரவப் பிதாமகரான பீஷ்மர் துரியோதனனையும் கர்ணனையும் கண்டித்துப் பேசியதும் கலகம் அடங்கிற்று.

பீஷ்மர் துரியோதனனைப் பார்த்து மறுபடியும் பேசலானார். ''ராஜேந்திரனே! தனஞ்சயன் வந்துவிட்டான். நேற்றைக்கே பதின்மூன்று வருஷ காலமும் முடிந்து விட்டது. உங்கள் கணக்குப் பிசகு. வருஷம், மாதம், பட்சம் முதலிய பிரிவினைகளையும் கால கதியையும் நன்றாக அறிந்த ஜோதிடர்கள் இதை விளக்குவார்கள். அதிக நாட்களைக் கணக்கிட்டுக் கொண்டு ஏமாந்திருக்கிறீர்கள். இப்போது காண்டீபத்தை அருச்சுனன் ஒலிக்கச் செய்தபோது பிரதிக்ஞையின் காலம் பூர்த்தியாகிவிட்டது என்பது எனக்குத் தெரியும். போர் தொடங்குவதற்கு முன்னால் மனத்தைச் சோதனை செய்து நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். துரியோதனனே! நீ பாண்டவர்களோடு சமாதானத்தை விரும்புவாயாகில் அவ்வாறே தீர்த்துக் கொள்ளுவதற்கு இதுவே சமயம். தருமத்துடன் கூடிய சமாதானமா, போரா, எது உனக்கு விருப்பம்? முடிவாக யோசித்துச்சொல்'' என்றார்.

துரியோதனன், ''பிரபுவே! நான் சமாதானத்தை விரும்பவில்லை. ஒரு கிராமத்தையும் கூடப் பாண்டவர்களுக்குக் கொடுக்க மாட்டேன். போருக்கான காரியங்களை அனுஷ்டிக்கலாம்'' என்றான்.

அதன் மேல் துரோணர் உத்தரவிட்டார்: ''படையில் நாலில் ஒரு பாகத்தை அரசனான துரியோதனன் தனக்குக் காப்பாகக் கூட்டிக் கொண்டு விரைவாக ஹஸ்தினபுரம் நோக்கிச் செல்ல வேண்டியது. மற்றொரு கால் பாகச் சைன்யம் பசுக்களை வளைத்துக் கொண்டு ஓட்டிப் போகட்டும். பசுக்களை ஓட்டாமல் விட்டு விட்டால் தோல்வியை ஒப்புக்கொண்டபடியாகும். மீதிப் பாதிப் படையுடன் நாங்கள் ஐவரும் நின்று அருச்சுனனை எதிர்ப்போம். இவ்வாறு செய்வதே

அரசனுக்கு க்ஷேமம் ஆகும்'' என்று சொன்னார்.

கௌரவ வீரர்கள் துரியோதனனைக் காப்பாற்ற அவ்வண்ணம் அணிவகுத்துக்கொண்டார்கள்.

அருச்சுனன், ''உத்தரனே! அதோ காணப்படும் சத்துருப் படையில் துரியோதனனுடைய தேரைக் காணவில்லை. பீஷ்மர் கவசமணிந்து நிற்கிறார். துரியோதனனைக் காணவில்லை. இவர்களை விட்டு விலக்கித் துரியோதனன் இருக்கும் இடத்துக்குத் தேரைச் செலுத்து. பசுக்களை ஓட்டிக்கொண்டு முன்னால் போகிறான் என்று எண்ணுகிறேன்'' என்று சொல்லி அருச்சுனன் கௌரவ சேனையை விட்டு விலகிப் பசுக்களையும் துரியோதனனையும் நோக்கி நேராகச் சென்றான். போகும்போது காண்டீபத்தை இழுத்து ஆசாரியர், பிதாமகர் இவர்கள் கால்களண்டை அம்புகள் மரியாதையாக விழும்படி செய்தான். அவர்களுக்கு அவ்வாறு வீர நமஸ்காரம் செய்துவிட்டுத் துரியோதனனை நோக்கிச் சென்றான்.

அருச்சுனன் பசுக் கூட்டம் நின்ற இடத்தை அடைந்து சுற்றியிருந்த படைகளைச் சிதற அடித்து விட்டு இடையர்களை நோக்கி, ''பசுக்களை உங்கள் இடைச் சேரிகளுக்குத் திருப்பி ஓட்டிக்கொண்டு போங்கள்'' என்றான். இவ்வாறு சொல்லி விட்டுத் துரியோதனனைத் துரத்திக் கொண்டு போனான். இடையர்கள் களியாட்டத்தோடு பசுக்களைத் திருப்பி ஓட்டிச் சென்றார்கள்.

அருச்சுனன் துரியோதனனை நோக்கிச் செல்வதைக் கண்ட பீஷ்மரும் மற்ற கௌரவ வீரர்களும் அவனைப் பின்தொடர்ந்து சென்று சூழ்ந்து கொண்டு அவன் மேல் அம்புகளை வருஷித்தார்கள். அருச்சுனன் அற்புதப் போர் நடத்தினான். முதலில் கர்ணனை எதிர்த்து அவனை யுத்த களம் விட்டு ஓடச் செய்தான். பிறகு துரோணரைத் தாக்கினான். அவரும் தோற்றார். அவர் பலம் இழந்து நிற்பதைக் கண்ட அசுவத்தாமன் புகுந்து அருச்சுனனை எதிர்த்தான். அப்போது அருச்சுனன் துரோணர் விலகிப் போவதற்கு மெதுவாக இடம் கொடுத்தான். அவரும் அதை அறிந்து விரைவாக விலகித் தப்பினார். அருச்சுனன் பிறகு அசுவத்தாமனுடன் கடும் போர் புரிந்தான். அசுவத்தாமனும் களைத்துப் போன பின் கிருபர் வந்து எதிர்த்தார். அவரும் தோல்வி யடைந்தார். சேனை முழுதும் சிதறடிக்கப்பட்டுப் பயந்து ஓடியது.

இதைக் கண்ட பீஷ்மர், துரோணருக்கும் மற்றவர்களுக்கும் சொல்லி எல்லோரும் ஒன்று சேர்ந்து மறுபடியும் அருச்சுனனைத் தாக்க ஏற்பாடு செய்தார். தன்னைச் சுற்றிப் பாணங்களை எறிந்து மலையைப் பனி மூடுவது போல் செய்து கொண்டு அருச்சுனன் அவர்கள் அனைவரையும் பலமாகத் தாக்கினான். பீஷ்மரும் அருச்சுனனும் போர் செய்த காலத்தில் அதைப் பார்ப்பதற்குத் தேவர்களும் வந்து விட்டார்களாம்.

துரியோதனனையே நோக்கிச் செல்லும் அருச்சுனனை ஐந்து மகாரதர்களும் ஒன்று சேர்ந்து நிறுத்தப் பார்த்தும் முடியவில்லை. அருச்சுனன் துரியோதனனை அடைந்து அவனைப் பலமாகத் தாக்கினான். துரியோதனன் தோல்வியடைந்து யுத்த களம் விட்டு ஓட ஆரம்பித்தான்.

''பெயரையும் புகழையும் இழந்து ஏன் ஓடுகிறாய்?'' என்று அருச்சுனன் சொல்ல மறுபடியும் துரியோதனன் சர்ப்பத்தைப் போல் சீறிக் கொண்டு திரும்பினான். பீஷ்மரும் மற்றவர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டு காத்துக்கொண்டேயிருந்தனர். அருச்சுனன் அவர்களோடு நெடு நேரம் போர் புரிந்து முடிவில் மோகனாஸ்திரத்தைப் பிரயோகம் செய்து அவர்கள் அனைவரையும் வீழ்த்தி அவர்களுடைய வஸ்திரங்களை யெல்லாம் கவர்ந்து கொண்டான். வஸ்திரங்களைப் பறிப்பதே அக்காலத்தில் முடிவான வெற்றியின் குறி.

மயக்கமடைந்து வீழ்ந்த துரியோதனனுக்கு நினைவு வந்ததும் பீஷ்மர் அவனை ஊருக்குத் திரும்பச் சொன்னார். சேனை முழுவதும் தோல்வி யடைந்து ஹஸ்தினபுரம் திரும்பியது.

''உத்தரனே! குதிரைகளைத் திருப்பு. உன்னுடைய பசுக்கள் மீட்கப்பட்டன. பகைவர்களும் ஓடிவிட்டனர். ராஜகுமாரனே! சந்தனமும் புஷ்பமும் அணிந்து கொண்டு உன்னுடைய நகரத்துக்குள் புகுவாய்'' என்றான் அருச்சுனன்.

போகும் வழியில் வன்னி மரத்தில் ஆயுதங்களையும் துவஜங்களையும் முன் போல் வைத்துவிட்டு அருச்சுனன் மறுபடியும் பிருகன்னளை வேஷம் தரித்துக் கொண்டான். குதிரைகளைத் தானே ஓட்டி உத்தரனைத் தேரில் உட்காரச் செய்தான். உத்தரன் ஜயித்தான் என்று நகரத்துக்குப் போய்க் கோஷிக்கும்படி தூதர்களை முன்னால் அனுப்பினான்.

(தொடரும்)

தொழில் தந்தையின் வழித்தோன்றல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மறு நாள் காலை, ''அப்பா, நீங்கள் காரை எடுத்துக் கொண்டு உங்கள் காரியங்களைக் கவனியுங்கள். நான் பஸ்ஸில் போய்க்கொள்கிறேன்'' என்றார் மகன்.

அனந்தராமகிருஷ்ணன் இம்மியளவும் அசைந்துகொடுக்கவில்லை. ''அது உன்னுடைய கார்'' என்று ஒரே போடாகப் போட்டார்.

''சரி, அப்பா! உங்களை என் காரிலேயே அழைத்துக் கொண்டு போய் விட்டு விட்டுப் போகிறேன்'' என்றார் சிவசைலம். ஆனால் அவர் உடை அணிந்துகொண்டு வருவதற்கு முன்பே அப்பா கிளம்பிப் போய்விட்டிருந்தார். சிவசைலம் ஏமாற்றத்துடன் கிளம்பினார். சற்றுத் தூரம் போனதும் தகப்பனார் ஒரு பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்துவிட்டார். ''என்னப்பா இப்படிச் செய்தீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''அம்பி! எனக்கு என்னவோ இப்படி 'ஃபீரியா' பஸ்ஸிலே போக ஓர் ஆசை. சென்னையிலே என்னாலே இப்படிச் செய்ய முடியாது பாரு. இங்கே என்னை ஒருவரும் அடையாளம் கண்டுகொள்ள மாட்டார்களல்லவா?'' என்று சொல்லிச் சிரித்தார். கடைசியில் சிவசைலத்தின் வற்புறுத்தலுக்கு இணங்கிக் காரில் ஏறிக் கொண்டார்.


மாலை பசியாற அவர்கள் ஓர் உணவு விடுதிக்குச் சென்றார்கள். புலால் கலப்பில்லாத உணவைக் கொண்டு வரச் சொல்லிவிட்டு மகனைப் பார்த்தார் அனந்தராமகிருஷ்ணன். ''உனக்கு வேறு ஏதாவது வேணுமானால், சொல்லிக் கொள், யோசிக்காதே'' என்றார்.


'வேறு ஏதாவது' என்று அவர் கூறியதன் உட்பொருள் சிவசைலத்துக்குப் புரிந்தது. முன்பு அவர் மகனை விட்டுப் பிரிந்து இந்தியா திரும்பியபோது சொன்னவை நினைவுக்கு வந்தன. இங்குள்ள குளிர் சூழ்நிலை காரணமாக உன் பழக்க வழக்கங்களில் ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அதைப் புலால் அருந்துவதோடு நிறுத்திக் கொள்; மது, மங்கை இவற்றை நினைத்தும் பார்க்காதே'' என்று சொல்லியிருந்தார் அனந்தராமகிருஷ்ணன்.

''அப்பா! புலால் உண்ணும் சலுகைகூட வேண்டாம் என்று அன்றைக்கே சொன்னேன். இன்றைக்கும் அதையே கூறுகிறேன்'' என்றார் சிவசைலம் இப்போது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஓர் ஆங்கிலேயர் அனந்தராமகிருஷ்ணனிடம் ''உங்கள் மகன் உங்களைப் போலவேதான் இருக்கிறான். நேற்று பார்ட்டியின்போது மதுவை மரியாதைக் குறைவென்று மறுதளிக்காமல் இருந்துவிட்டான். ஆனால் அதைத் தொட்டுப் பார்க்கக் கூட இல்லை. நானும் கவனித்துக்கொண்டே இருந்தேன்'' என்றார்.

இதை யெல்லாம் கேட்கக் கேட்க அனந்தராமகிருஷ்ணனுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்கும்! வாழ்நாள் முழுதும் ஒழுக்கம் ஒழுக்கம் என்று ஜபித்துக் கொண்டிருந்தவரல்லவா அவர்! யாராவது ஒருவரைப் பற்றி திரு அனந்த





ராமகிருஷ்ணன் ''எல்லாம் சரி, கெட்டிக்காரன்தான்; ஆனால் 'கேரக்டர்' இல்லை'' என்று கூறிவிட்டாரானால் அவர் மதிப்பில் அந்த மனிதன் எதற்கும் லாயக்கற்றவன் என்றல்லவா அர்த்தம்!

''நீ குடிப்பது மில்லை, சிகரெட் பிடிப்பது மில்லை, பெண் நண்பர்களை ஏற்படுத்திக்கொண்டு அவர்களுடன் கிளப்புகளில் நடனமாடுவது மில்லை. ஆக, பொழுது போக்குக்கு நீ என்னதான் செய்கிறாய்?'' என்று பிரிட்டனில் நண்பர்கள் சிவசைலத்தைக் கேட்பார்கள்.

''நான் பொழுதுபோக்காக என் பெயரைச் சொல்லி மற்றவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவேன்! எங்கே, என் பெயரை உச்சரியுங்கள் பார்க்கலாம்'' என்று கூறுவார் சிவசைலம். தொடர்ந்து, ''அனந்தராம கிருஷ்ணன் சிவசைலம்'' என்ற தமது முழுப் பெயரையும் நிதானமாகச் சொல்லி அவர்களைத் திணற அடிப்பார்.

''போதும்; 'அம்பி' என்று உன்னை நாங்கள் அழைத்தாலே போதும் '' என்பார்கள் அவர்கள்.

தமிழ்ப் பெயரை உச்சரிக்க அவர்கள் சிரமப்பட்ட அதே நேரத்தில் ஆங்கிலத்தைச் சிவசைலம் சரளமாக, லகுவாகக் கையாண்டதைக் கண்டு வியந்தார்கள்; மரியாதையும் கொடுத்தார்கள்.

தந்தை இந்தியாவிலும் மகன் லண்டனிலும் இருந்தாலும் அனந்தராமகிருஷ்ணனிடமிருந்து மகனுக்குக் கைப்பட எழுதிய கடிதங்கள் பறந்து கொண்டேயிருக்கும். ஒவ்வொரு கடிதத்திலும் நாட்டு நிலவரம், பொருளாதாரச் சூழ்நிலை இவற்றை வர்ணிப்பார். அனந்தராமகிருஷ்ணன் வேகமாகப் பொருளாதார ரீதியில் வளர்ந்து கொண்டிருந்த சமயம் அது. புதிய கம்பெனிகளைத் தொடங்குவதோ வாங்குவதோ நடைபெற்றால் அவை பற்றிய முழு விவரங்களையும் மகனுக்கு எழுதி, ''நான் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை சரியானதுதானா?'' என்று அபிப்பிராயம் கேட்பார் !

இவ்வாறு பின்னால் ஏற்க வேண்டிய பொறுப்புக்களுக்குத் தயார்ப்படுத்தப்பட்ட சிவசைலம் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டிய காலம் வந்தது. தாம் பெற்ற பயிற்சியை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டிய சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருந்த அவரை அடிஸன் கம்பெனியில் முதன் முதலில் ஸ்ரீ ராவ் என்பவருக்குக் கீழே பணியாற்ற அனுப்பி வைத்தார் அனந்தராமகிருஷ்ணன்.

அங்கு நடைமுறையில் இருந்து வந்த ஒரு பழக்கத்தினால் காலமும் பணமும் விரயமாவதைக் கண்டார் சிவசைலம். இந்த நடைமுறையை மாற்றி நவீன பாணியில் செயலாற்ற விரும்பினார். இது பற்றி திரு அனந்தராமகிஷ்ணனிடம் நேரடியாகத் தெரிவிக்க அவர் முற்படவில்லை. 'ராவ் மூலமாகத்தான் இவ்விஷயம் என்னிடம் வரவேண்டும்' என்று அவர் சொல்லிவிடுவார் என்று சிவசைலத்துக்குத் தெரியும். ஆகவே, ராவையும் உடன் அழைத்துப் போனார். ராவ் அவர்கள் இம்முறையைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்று அபிப்பிராயம் தெரிவிக்கவே அனந்தராமகிருஷ்ணன் சம்மதமளித்தார். கூடவே 'இதில் தோல்வி அடைந்தால் நீ வேலையைவிட்டே விலகிக் கொள்ள நேரிடும் தெரியுமல்லவா?' என்றும் சிவசைலத்தை எச்சரித்து வைத்தார்.

இந்தச் சவாலை ஏற்றுக் கொண்ட சிவசைலம் இரவும் பகலும் அதே சிந்தனையாக உழைத்தார். சில வாரங்களுக்குப் பிறகு ஸ்ரீ ராவ் அனந்தராமகிருஷ்ணனிடம் இப்புதிய நடைமுறையினால் கம்பெனிக்குப் பெருமளவு பணம் மிச்சமாகியுள்ளது என்று 'ரிப்போர்ட்' சமர்ப்பித்தார்.

அப்போது அனந்தராமகிருஷ்ணன் சிவசைலத்திடம், ''நீ தோல்வி அடைந்தால் என்ன நேரும் என்று சொன்னேனே ஒழிய வெற்றிபெற்றால் என்ன நிகழும் எ று சொல்லவில்லையே நான்!'' என்றார் மகிழ்ச்சியோடு.

'' இதோ நீங்கள் சந்தோஷப்படுகிறீர்களே, அதுவே போதும்'' என்று கூறி அங்கிருந்து நழுவிவிட்டார் சிவசைலம்.

சிறிது காலத்துக்குப் பிறகு டாஃபே என்று குறிப்பிடப்படும் டிராக்டர் தயாரிப்புத் தொழிற்சாலையின் நிர்வாகப் பொறுப்பைச் சிவசைலம் ஏற்றுக் கொண்டார்.

விவசாய டிராக்டர்கள் தயாரிக்கப்பட்டு விற்பனையான முதல் மாதத்திலேயே பதி





படங்கள் :

(இடது பக்கம்) ஷாட்லோ தொழிலகத்தின் இரண்டு தோற்றங்கள்.

★

(இந்தப் பக்கத்தில்) ஹிகின்பாதம்ஸ் புத்தக விற்பனை நிலையம். விவேகானந்தா கல்லூரியில் ஹிகின்பாதம்ஸ் ஸ்தாபனத்தினர் நடத்திய புத்தகக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார் திரு சிவசைலம்.

னெட்டு லட்ச ரூபாய் அளவுக்கு வியாபாரம் பெருகி விட்டது. சிவசைலத்துக்கு ஒரே மகிழ்ச்சி.

இதைப் பெருமிதத்துடன் தந்தையிடம் தெரிவித்துக் கொள்ள விரும்பினார். நிச்சயம் ஒரு சபாஷ் போட்டுப் பாராட்டுவார் என்று மனப்பூர்வமாக நம்பினார். ஆனால் அவரோ "இன்றையிலிருந்து இன்னும் நான்கு வருஷங்களில் இந்த 'டர்ன்ஓவர்' ஐம்பது லட்சத்தை எட்டும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். பத்து ஆண்டுகளில் ஒரு கோடியை எட்டுவதற்கு இந்தியாவில் வாய்ப்பிருக்கிறது" என்றார்.

அனந்தராமகிருஷ்ணனின் மனம் எதிர் காலத்தைப் பற்றியே எண்ணியது. அவர் தீர்க்க தரிசனத்துடன் பேசினார். அவர் வார்த்தைகள் பொய்க்கவில்லை.

இந்த டாஃபே ஸ்தாபனத்திலும் சிவசைலம் சில புதுமைகளைப் புகுத்த முற்பட்டார். அயல் நாடுகளிலிருந்து டிராக்டர் பாகங்களைத் தருவித்து அவற்றை இங்கே இணைத்து டிராக்டர்களை உருவாக்குவது; படிப்படியாக டிராக்டருக்குத் தேவையான எல்லாப் பாகங்களையும் இங்கேயே தயாரிக்கத் தொடங்குவது என்பது திட்டம். இதிலே சிவசைலம் புகுத்திய புதுமை என்னவெனில், ஆரம்ப கட்டத்தில் அயல்நாடுகளிலிருந்து தருவிக்கும் டிராக்டர் பாகங்களுக்குப் பணமாகத் தராமல் நாளடைவில் இங்கு தயாரிக்கப்படவிருக்கும் அந்தப் பாகங்களையே திருப்பித் தந்துவிடுவது என்பதுதான். இதனால் அந்நியச் செலாவணி எவ்வளவு மிச்சமாகும்! இந்த யோசனை புதுமையானதாக இருந்தது மட்டுமல்ல, இப்படியும் நடக்க முடியுமா என்ற சந்தேகத்தைச் சம்பந்தப்பட்ட பலரிடம் ஏற்படுத்தி விட்டது. ஆனால் சிவசைலம் திறமையான முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தவே அவரது யோசனை மறு பேச்சின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது!

இந்த விதமான பேச்சு வார்த்தைகளின் போதெல்லாம் திரு அனந்தராமகிருஷ்ணன் உடனிருந்தாலும் கூட அவர் பேசும்போது, "சிவசைலம் இப்படி நினைக்கிறார்" என்றோ "மற்றொருவர் இவ்வாறு கருதுகிறார்" என்றோதான் பேசுவது வழக்கம். இந்த விதமாக அவர்களை முன்னுக்குத் தள்ளி நேரடியாக விஷயத்தில் இழுத்து விட்டு ஈடுபாடு கொள்ளச் செய்து விடுவார்; உற்சாகம் அடையச் செய்வார்.

டாஃபே ஸ்தாபனத்தில் தயாரிக்கப்படும் மாஸே பெர்குஸன் டிராக்டர்கள் ஒரு பிரிட்டிஷ் – கனேடியக் கம்பெனியின் கூட்டுறவுடன் உருவாக்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் - கனேடியக் கம்பெனியானாலும் கம்யூனிஸ யூகோஸ்லேவியாவிலேயே அரசாங்கம் அந் நாட்டில் டிராக்டர் தயாரிப்புத் தொழிலகத்தை நிறுவ மாஸே பெர்குஸனைத்தான் உதவிக்கு அழைத்தது என்றால் இந்தக் கம்பெனியின் மதிப்பை ஒருவாறு உணரலாம். 'வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி' என்பது போல் மாஸே பெர்குஸன் ஸ்தாபனத்தை குருஷேவே புகழ்ந்து பேசியிருக்கிறார்.

இந்தியாவில் டிராக்டர்களுக்குத் தேவை ஏராளம். டிராக்டர்களைப் பெறப் பலர் 'கியூ' வில் நிற்கிறார்கள். அப்படி இருந்தும் தரத்தில் அலட்சியம் காட்டக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறவர் சிவசைலம்.

ஃ ஃ ஃ

நம் ஸ்தாபனங்களின் ஊழியர்களோடு நெருங்கி அன்யோன்யமாகப் பழகுவதில் திரு அனந்தராமகிருஷ்ணனுக்கு ஆர்வம் மிகுதியுண்டு. "என்னப்பா ராமசாமி! உன் பெண்ணுக்கு இந்த வருஷமாவது கல்யாணம் பண்ண முயற்சி செய்ய வேண்டாமா?" என்றோ, "என்ன கிருஷ்ணமூர்த்தி, நீ இன்னும் சொந்தத்தில் ஒரு வீடு கட்டிக்கொள்ளாமல் இருக்கிறாயே?" என்றோ கேட்டு ஊக்கி வைப்பதில் அவர் மன்னர்!

ஒரு சமயம், தொழிலாளர் தலைவர் என்ற முறையில் அனந்தராமகிருஷ்ணனைச் சந்தித்துப் பேசிவிட்டுத் திரும்பிய திரு குருமூர்த்தியை வெளியே காத்திருந்தவர்கள் கேட்டார்கள்: "போனஸுக்கு என்ன சொன்னார் சேர்மன்?" இப்படிக் கொஞ்சம் வீம்பாகக் கேட்டவர்கள் "ஆறு மாசம் தர்றேன்னார்" என்ற பதிலைக் கேட்டு அதிர்ச்சியுற்று அசந்து போய் உட்காராமல் வேறு என்ன செய்ய?

இவ்வாறு தொழிலாளர், ஊழியர் நலனில் அளப்பரிய அக்கறை கொண்டிருந்த அதே அனந்தராமகிருஷ்ணன் பந்த பாசம், நிர்வாக விஷயத்தில் குறுக்கிடாமல் காத்துக் கொள்வதிலும் நிபுணராயிருந்தார்!

காரியாலயத்தில் அப்பாவும் பிள்ளையும் சந்தித்துக் கொள்ளும்போது சிவசைலம் நிற்கத்தான் வேண்டும். உட்கார முடியாது! "மிஸ்டர் சிவசைலம்!" என்றுதான் தந்தை மகனை அழைப்பாரே தவிர, உறவு முறையோ, அபிமானமோ தலை காட்டாது.

காரியாலய நேரம் முடிந்து வீடு திரும்பும் போது அவர் நேராகப் போய்த் தம் காரில் ஏறிக் கொள்வார். மகனும் கூட வரட்டுமே என்று காத்திருக்க மாட்டார். பின்னால் சிவசைலம் வீட்டுக்கு வந்து சேருவார். அப்போது காரியாலய உடைகளைக் கழற்றிவிட்டு ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் தகப்பனார், வாய் நிறைய "அம்பி! காப்பி சாப்பிடு" என்பார்.

உறவும் பாசமும் அந்த வீட்டு ஊஞ்சலில் உட்கார்ந்த பிறகு பெருக்கெடுத்தோடும். காரியாலயத்தில் அவர் தலைவர். மகன் சிப்பந்தி.

தங்கள் மதிப்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமான அனந்தராமகிருஷ்ணன் உடல் நலமில்லாமல் வீட்டில் படுத்திருக்கிறார் என்று கேள்விப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து, அவரைத் தரிசிக்கவேண்டுமென்று அவருடைய மாளிகை முன் கூடினார்கள். அவர்கள் வேண்டியதெல்லாம் மாடி பால்கனியில் இரண்டு நிமிடங்கள் அவர் வந்து நின்று தங்களைப் பார்க்க வேண்டும் என்பதுதான்.


இந்த வேண்டுகோள் அதிபரின் செவிக்கு எட்டியது. "நான் என்ன மகாராஜாவா உப்பரிகையில் நின்று தரிசனம் கொடுக்க! நான் அந்த ஊழியர்களின் நடுவே இருக்க வேண்டியவன். சீக்கிரமே உடம்பு சரியாகி அவர்களிடம் வருகிறேன் என்று சொல்லி விடு" என்றார் அவர்.


அப்பாவுக்கு கண்ணுக்கினிய குளுமையான வெளிச்சம் தேவை

அப்பாவுக்கு வேலை அதிகம். இரவில் வெகு நேரம் வரையில் அவர் ஆபீஸ் வேலையை வீட்டிலும் செய்கிறார். "இப்படி ஓயாமல் வேலை செய்தால், கண்கள் சோர்வடைந்து கெட்டுப் போகுமே!" என்று அம்மா கவலைப்படுகிறாள். ஆனால் அப்பாவோ, "கண்கள் சோர்வடையாது; ஃபிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்பு வெளிச்சத்தில் அல்லவா வேலை செய்கிறேன் என்று தெம்புடன் பதிலளிக்கிறார்." ஃபிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகளில் ஒரு விசேஷமான வெள்ளைப்பூச்சு பூசப்பட்டிருக்கிறது. அதன் நன்மைகள்:

☐ கண் கூசாது ☐ இருண்ட நிழல் படியாது ☐ ஒரே சீரான வெளிச்சம் பரவும்

அப்பாவுக்கு மட்டுமே அல்லாமல், எங்கள் குடும்பத்திலுள்ள அனைவருக்குமே ஃபிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகள் குளுமையான வெளிச்சம் தந்து, கண்களுக்கு இதமளிக்கின்றன. ஃபிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகள் 40,60 மற்றும் 100 வாட்களில் கிடைக்கின்றன. ஃபிலிப்ஸ் கம்பெனியார் ஆர்ஜண்டாவைத் தவிர, பூச்சு தடவாத சாதாரண மாதிரி பல்புகள், பல்வேறு உபயோகத்துக்கான நானாவித பல்புகள், ஃப்ளுரஸண்ட் ட்யூப்கள் மற்றும் மெர்குரி வேபர் லாம்புகள் தயாரிக்கிறார்கள்.





ஃபிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

ஃபிலிப்ஸ் ஆர்ஜண்டா

PHILIPS

இதமான ஒளி தருவதில் இணையற்றது


நரைமயிர் கருநிறமடைய ...
முதுமையிலும்
இளமையுடன்
விளங்க...
தூய கேசக்கருமைச் சாதனமாகிய
வாஸ்மால்
உபயோகியுங்கள்
நரைமயிர் வயதை அதிகரித்துக் காட்டுகிறது...தூய கேசக் கருமை சாதனமாகிய வாஸ்மால் உபயோகித்து நரையின் சுவடே இல்லாதபடி செய்துவிடுங்கள். தினந்தோறும் வாஸ்மால் உபயோகித்து வந்தால் உங்கள் கேசம் மீண்டும் பழையபடி பளபளக்கும் கருநிறத்துடன் திகழும்...நீங்கள் மிகவும் இளமைத் தோற்றத்தையும், இளமை உணர்ச்சியையும் பெறுவீர்கள்!
உங்களுக்கு எத்தனை வயதானபோதிலும் வாஸ்மால் உபயோகித்து கேசத்தைக் கருமையாக வைத்துக்கொள்ளுங்கள்!
ஹைஜீனிக் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட், த. பெ. 1192, பம்பாய்-1
வாஸ்மால் கேசத்தைக் கருமையாக்கும் சாதனம் மட்டுமல்ல, ஒரு உன்னதமான கேசப் பராமரிப்புச் சாதனமுமாகும்... அது உங்கள் கேசத்தை, பரவசமூட்டும் நறுமணத்துடனும், எடுப்பாகவும் திகழச் செய்கிறது...நாள் முழுவதும் உங்களைக் குளுமையுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது.
140 மற்றும் 450 கிராம் பாட்டில்களில் வாஸ்மால் எமல்ஸிஃபைட் ஹேர் ஆயில் ரூபத்திலும் ஸ்டாண்டார்டு பேக்கிங்கில் வாஸ்மால் போமேடு ரூபத்திலும் கிடைக்கிறது.
HRI.V.GJ TAM

உடல் நலம் குறைந்து அவர் காரியாலயம் போவதை நிறுத்தி விட்டில் இருந்தபோது சில சமயங்களில் மாலை நேரத்தில் கடற்கரை ரோட்டில் காரில் போய்த் திரும்பு வார். அப்போதெல்லாம் சிவசைலம்தான் காரை ஓட்டி வருவார். ஒரு நாள் அவர் சிம்சன் கம்பெனியைப் பார்த்தாற் போல் இருக்கட்டும் என்ற எண்ணத்தில் காரை மௌண்ட்ரோடை நோக்கித் திருப்பினார் சிவசைலம். சிம்சன் கம்பெனிக் கட்டிடம் பார்வையில் பட்டதும் ''காரை உள்ளே கொண்டு போ'' என்றார் தந்தை.

அதிபர் வந்திருக்கிறார் என்ற செய்தி காட்டுத் தீபோல் பரவியது. அத்தனை தொழிலாளர்களும் ஓடி வந்து விட்டார்கள். அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. அவரது அலுவலக அறைக் கதவைக் கூட அவசரம் அவசரமாகத் திறந்து விட்டார்கள். ஆனால் காரை விட்டு இறங்குகிற நிலையில் இல்லை அவர். ஆயினும் '' 'காஸ்டிங்'களெல்லாம் வெளியே கிடக்கே! கெட்டுப் போய் விடாதோ'' என்று கேட்க அவர் தவறவில்லை!

அவர் கம்பெனிக் கட்டிடத்துக்கு வந்து போனது அதுவே கடைசித் தடவையாக அமைந்து விட்டது. தினம் இரண்டு தடவை சிம்சன் கம்பெனி தொழிற்சாலையை நடந்து சென்று மேற்பார்வையிடுவதன் மூலமே மூன்று மைலுக்கு மேல் நடந்து விடுவார் அனந்தராமகிருஷ்ணன். அப்படிப்பட்டவரின் பாதம் இனி சிம்ஸன் கம்பெனி தொழிலகத்தில் பதியாது என்பது உறுதியாயிற்று.

திரு அனந்தராமகிருஷ்ணன் காலமான பிறகு அந்த ஸ்தாபனத்தில் முப்பது ஆண்டு காலம் அவருக்கு வலக் கரம் போல் விளங்கி வந்த திரு எம்.வி. வேங்கட்ராமன் 'அமால்கமேஷன்ஸ்'ஸின் தலைமைப் பதவி ஏற்றார். இந்த ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று அவர் ஓய்வு பெற்றபோது திரு சிவசைலம் அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

இன்று 'அமால்கமேஷன்ஸ்' நிறுவனத்தின் மேல்பார்வையில் இருபத்தி எட்டு ஸ்தாபனங்கள் இயங்குகின்றன. மோட்டார் எஞ்சின்கள், டிராக்டர்கள், சைக்கிள் ரிம்கள், பெயிண்ட் வகைகள், மின்சார பாட்டரிகள் தயாரிக்கும் தனித்தனி ஸ்தாபனங்கள், ஹிகின்பாதம்ஸ் புத்தக விற்பனை, மெயில் பத்திரிகை, அஸோஸியேடட் பிரஸ் போன்ற நிறுவனங்கள் எல்லாமே இந்த 'அமால்கமேஷன்'ஸுக்குள் அடக்கம். இதை ஒரு தொழில் சாம்ராஜ்யம் என்றே சொல்லலாம்.

இன்று இதை நிர்வகிக்கும் பொறுப்பேற்றிருக்கும் திரு சிவசைலத்துக்குப் பொழுது போக்கு என்று தனியாக ஒன்றும் கிடையாது. பொழுது ஏதும் மிச்சமிருந்தால் அல்லவா அதைப் போக்க வழி தேட! அவ்வப்போது கிடைக்கும் குறுகிய கால அவகாசங்களில் நிறையப் படிக்கிறார். நாவல்களையோ நவீனங்களையோ அல்ல; பெரியோர்களின் வாழ்க்கைச் சரித்திர நூல்களை.

ஆழ்வார்குறிச்சி அனந்தராமகிருஷ்ணனின் சொந்த ஊர். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்த அவர் ஆழ்வார்குறிச்சியில் 'உயர் கல்விக்கும் வந்தனை செய்வோம்' என்ற வகையில் பரமகல்யாணி கல்லூரியை நிறுவினார். ''பள்ளிக்கூடம் ஒன்று கட்ட வேண்டும் என்று நினைக்கிறேன்'' என்றார் அனந்தராமகிருஷ்ணன் தம் மகனிடம் ஒரு நாள். அப்போது பரீட்சைகளெல்லாம் முடிந்த சமயம். ''அதற்கென்ன, திட்டங்கள் தயாரித்து அடுத்த ஆண்டு ஆரம்பித்து விடுவோம்'' என்றார் சிவசைலம். ''இல்லை, இல்லை! இந்த ஆண்டே பள்ளி உருவாகிவிட வேண்டும்'' என்றார் தந்தை. ''இன்னும் இரண்டு மாதம்தானே இருக்கிறது?'' என்ற சந்தேகத்தைச் சிவசைலம் எழுப்பியபோது, ''அதனால்தானே உன்னிடம் சொல்கிறேன்'' என்று பதில் கிடைத்தது. பிறகு கேட்க வேண்டுமா? இரண்டே மாதங்களில் பள்ளிக் கட்டிடம் உருவாகி, பள்ளி ஆண்டுத் தொடக்கத்தில் இயங்கவும் ஆரம்பித்து விட்டது.

இம்மாதிரி பள்ளி, கல்லூரி, ஹாஸ்டல், ஆஸ்பத்திரி என்று ஆழ்வார்குறிச்சியில் ஒன்றன் பின் ஒன்றாகப் பொதுநலப் பணிகள் நடந்தன. முன்பு, பத்து இருபது என்று ரூபாய் கொடுத்தால்தான் பட்டணத்துக்குக் குடியேறிவிட்டவர்களின் வீடுகளைக் கிராமத்தில் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் இன்று இந்தப் பொதுநலப் பணிகள் காரணமாக ஜனத் தொகையும் மிகுதி, பணப் புழக்கமும் அதிகம். வாடகைக்கு வீடு அகப்படுவதே சிரமம் என்ற சூழ்நிலை!

அடக்கமும், தன்னம்பிக்கையும், ஊக்கமும் உறுதியும், சிவசைலம் அவர்களிடம் நிறைய இருக்கின்ற காரணத்தினால் தந்தை காட்டிய வழியில் தயங்காமல், தடங்கலில்லாமல் நடக்கக்கூடிய தகுதி பெற்றிருக்கிறார்.

கச்சிதமாக உடை அணிந்து கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கும் அவர், உரக்கப் பேசுவதில்லை, அனாவசியமாக வார்த்தைகளை உதிர விடுவதில்லை. இதனாலேயே அவரைக் கூச்சம் மிகுந்தவர் என்று பலர் தவறாக எண்ணிவிடுகிறார்கள். வீண் வார்த்தைகளில் மதிப்பு வைக்காத அவர், தம் தகப்பனாரைப் பற்றி மணிக் கணக்காகப் பேச என்றும் தயார் என்றால் அவரது பித்ரு பக்தியைப் புரிந்து கொள்ளலாம். அப்படிப் பேசும்போது அவர் கண்கள் ஓர் அசாதாரண ஒளியுடன் மினிர்வதையும் பார்க்கலாம்.

கரண்டிபிடித்த கை 'இன்ஷக்ஷ'னும் போடும்!

1. நீங்கள் தென் இந்தியரா? வட இந்தியரா ?
2. தேங்காய் பர்பி தயாரிக்கத் தெரியுமா உங்களுக்கு?
3. வத்தல் குழம்பு செய்வது எப்படி?



தமிழக மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கு வந்த மாணவர்களிடம் இன்டர்வ்யூவில் இம் மாதிரி கேள்விகள் கேட்கப்பட்டதாக ஒருவர் மெயில் பத்திரிகையில் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதியில் எழுதி இருக்கிறார்.

- கே. ராஜாமணி

எழுத்தில் புதுமை







காடு கொடுத்த ஏடு

இன்று நகரங்களில் பல மாடிக் கட்டிடங்களிலும் நாகரிகப் புறநகர் பகுதி விஸ்தரிப்புகளிலும் நிம்மதியாக இரவைக் கழிக்கிறோம் நாம். ஆனால் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மரமடர்ந்த, விலங்கினம் நிறைந்த காடுகளில்தான் நம்முடைய மூதாதையர் வசித்து வந்தார்கள். காடு என்றாலே நம் மனத்தில் ஒரு பயமும், பக்தியும் ஏற்படுகிறது. மனிதன் நாகரிகமடைந்ததே காடுகளில்தான்! அவன் கட்டிய முதல் வீடு காட்டில்! வெட்டிய முதல் காட்டில்தான் விவசாயம் செய்தான்! மரத்தின் அடியில்தான் வேதம் ஓதி, உபநிஷதங்களை எழுதினான்! அவனுடைய கற்பனையான இதிகாச புராணங்களில் காடுகள் இடம் பெறாத நாலே இல்லை! அவனுடைய ஆதி ஸ்நேகிதர்கள் சிங்கம், புலி, கரடி, யானை, மான், குரங்கு போன்றவையே!

நாகரிக வாழ்க்கையின் சின்னங்களாகிய மனிதர்களோடு பழகி, அவர்களுடைய ஆசாபாசங்களையும், நல்வினை தீவினைகளையும் பற்றியே எழுதும் எழுத்தாளர்கள் நடுவில், காடுகளைப் பற்றியும், மலைவாழ் ஆதிவாசிகளைப் பற்றியும், அங்கெல்லாம் வசிக்கும் விலங்கினங்கள், பறவைகள் பற்றியும், எழுதும் திரு பிலோ இருதயநாத் அபூர்வ எழுத்தாளர். சாதாரண எழுத்தாளர்கள் கதாநாயகர்களை மிருகங்களாக்கும்போது, இந்த அசாதாரண எழுத்தாளர் மிருகங்களுக்குக் கதாநாயகர் அந்தஸ்தை அளிக்கிறார்!

''காடு கொடுத்த ஏடு'' என்ற இந்த நூலைப் படிப்பவர்கள் உயர்ந்த மலைகளும் பரந்த காடுகளும் தங்கள் காலடியில் விரிந்து கிடப்பதைக் காண்பார்கள். அத்துடன், 'ஓடும் பெண்ணைக் கைப்பிடித்தால் அவள் மனைவியாவது எப்படி?' 'பெரிய புலியைக் குரங்குகள் கொன்றது எப்படி?' 'காட்டில் ஒளி தரும் மரம் எங்கே இருக்கிறது?' 'யானையால் வாழ்ந்து, யானையால் இறப்பவர்கள் யார்?' 'காட்டெருமை—புலி சண்டையில் யாருக்கு வெற்றி?' 'தாத்தா பல்லுக்குப் பேரன் பலியானது எவ்விதம்?' 'சீதோஷ்ண நிலையைக் காட்டும் மர வீடு எது?' 'கத்தியால் மர வேரைக் குத்தினால் ரத்தம் வந்தது எப்படி?' என்பன போன்ற மர்மமான கேள்விகளுக்குப் பதில் வேண்டுமானாலும் இந்த நூலைப் படித்தால் விளங்கும்.

திறமைமிக்க ஒரு சிறுகதை ஆசிரியன் தன் கைப்பட்ட பாத்திரங்களை எப்படி அக்கறையோடு போஷிப்பானே, அப்படியே இவர்

படம்: ஆதிவாசிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட விநோதப் பொருள்களுக்கிடையில் பிலோ இருதயநாத் குடும்பம்

ஆதிவாசிகளையும், வன விலங்குகளையும் வைத்துக் கொண்டே சிறு கதைகளை விட சுவாரசியமான கட்டுரைகளைப் படைத்து விடுகிறார். ஆதிவாசிகளின் அநாகரிகமான சில பழக்க வழக்கங்களை இவர் விவரிக்கும் போது நமக்கு வெறுப்பு ஏற்படுவதில்லை. அநுதாபம் பிறக்கிறது. இதற்கு ஆசிரியரின் சாமர்த்தியமே காரணம்.

இவர் விவரிக்கும் பல சம்பவங்கள் நம்ப முடியாதவைபோலத் தோன்றினாலும் நூலாசிரியர் நம் இருதயத்தோடு கலந்து பேசும் நம்பிக்கையின் தொனி நம்முடைய சந்தேகங்களைப் புலிக்கு முன் மான் கூட்டம் போலச் சிதறடித்து விடுகிறது!

1916ல் பிறந்து 1950ல் திருமணமாகி ஆசைக்கொரு பெண்ணை மட்டும் பெற்றுள்ளவரும், 52வது வயதில் நடை போடுகிறவருமான திரு பிலோ இருதயநாத், மாணவர்களுக்கு அறிவூட்டும் உபாத்திமையைத் தொழிலாகக் கொண்டவர்.

குருவிக்காரி ஒருத்தி இவர் தலையிலிருந்த சிறு சொட்டை குணமாக மருந்து கொடுத்த பிறகு இவர் ஊதியமாகத் தந்த பணத்தை வாங்க மறுத்ததைக் கண்டு அந்தக் கூட்டத்தினரிடம் ஏற்பட்ட மதிப்பு, இவருக்குக் குருவிக்காரர்களைப் பற்றியும், அதன் பின்னர் ஆதிவாசிகள் பற்றியும் ஆராய்ந்து எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்கியது. இவருக்குத் தோதுவர், செஞ்சுலு, குருவிக்காரர்கள், குறவர்கள், படகர்கள், லம்பாடிகள் போன்றவர்களின் பாஷையைப் போல மொத்தம் 16 பாஷைகள் பேசத் தெரியும். (அந்த மொழிகளில் எழுத்துக்கள் கிடையா.) கன்னடம், மலையாளம், தெலுங்கு, உருது, மராட்டி போன்ற மொழிகளிலும் போதுமான ஞானம் உண்டு. "என் மனம் போலவே மலை நிறைந்த உதக மண்டலத்தில் மலையாளியான மனைவி கிடைத்தாள்" என்று பெருமிதமாகப் பேசும் இவருக்கு அதனால்தானோ என்னவோ எல்லா மலைகளும் காடுகளும் மாமனார் வீடுபோல் இன்ப லோகமாக இருக்கின்றன.

ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் 23 நூல்களையும் எழுதியுள்ள திரு பிலோ இருதயநாத் அவர்கள் ஒரு சாரணர். அத்துடன் ஸெயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் படையைச் சேர்ந்தவரும் கூட. யுத்த காலத்தில் ஏ. ஆர். பி. யிலும், செஞ்சிலுவைச் சங்கத்திலும் சேர்ந்து பணியாற்றிய அனுபவம் பெற்றவர். காஞ்சி காமகோடி பீடாதிபதிகளால் நடு சதஸில் பாராட்டப்பட்ட பெருமையும் இவருக்குண்டு. வேடந்தாங்கல் ஏரியில் அயல் நாடுகளிலிருந்து பறவைகள் வந்து தங்கும் அதிசயத்தை முதன் முதலில் கண்டுபிடித்து 1956லேயே சுதேசமித்திரனில் கட்டுரை எழுதிப் பிரபலப்படுத்திய பிலோ இருதயநாத் இவர்தான். 1968ல் சென்னை கவர்னரிடமிருந்து அரசினரின் விருது பெற்ற மானிட நூல் கலைஞர்.


காடு கொடுத்த ஏடு பற்றி நூலாசிரியரைச் சந்தித்தபோது அவர் முதலில் சொன்ன வார்த்தைகள் இவைதான்: "நான் எழுதியிருப்பது அத்தனையும் உண்மை. பல நம்பத் தகாதவை போலத் தோன்றலாம். ஆனால் நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும்!"

"உங்கள் பிரயாண ஏற்பாடுகள் பற்றிச் சொல்ல முடியுமா?"

"1936ல் வாங்கிய இந்தப் பழைய ஹெர்குலிஸ் சைக்கிள்தான் என் வாகனம். எட்டு மணிக்குப் புறப்பட்டால் மறு நாள் காலை ஏழு மணிக்கு விழுப்புரம் போய்ச் சேர்ந்து விடுவேன்! எந்த இடத்துக்குப் போகிறேனோ அந்த இடத்தின் வரை படமும், புகைப்படக் கருவியும் கையில் இல்லாமல் புறப்பட மாட்டேன்."

"ஆதி வாசிகளிடமிருந்தும், மிருகங்களிடமிருந்தும் நீங்கள் என்ன கற்றிருக்கிறீர்கள்?"





"அவர்கள் பேசும் மொழிகள் பல கற்றிருக்கிறேன். அவர்கள் பாடும் பாடல்களில் ஒரு பதினைந்து இருபது எனக்குத் தெரியும். அவர்களுடைய நடனங்கள் சில நானும் ஆடுவேன். மிருகங்கள் நம்மை மோப்பம் பிடித்துத் தெரிந்து கொள்வதைப்போல் சில மிருகங்கள் தொலைவில் இருந்தாலும் மோப்பம் பிடிக்க எனக்குத் தெரியும்" என்றார் அதிசய மனிதர் பிலோ.


"காட்டில் மொத்தம் எத்தனை காலம் கழித்திருப்பீர்கள்?"

"இதுவரையில் நான் காடுகளில் கழித்த நாட்களை எண்ணிப் பார்த்தால் பதினாறு வருடங்கள் கணக்கு வரும்."

"நல்ல காலம் இந்தப் பேட்டி உம்முடைய 'நாடோறு மாத' காலத்தில் எனக்குக் கிடைத்தது. இல்லாவிட்டால் எந்தத் திக்குத் தெரியாத காட்டில் உம்மைத் தேடி அலைய நேரிட்டிருக்குமோ?" என்றேன்.

— மகரம்

கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், சென்னை—4; விலை: ரூ. 1.50.



21. உயிர்த் துடிப்பு

"சீலியா! உன் மொழிகள் எனக்குச் சரிவரப் புரியவில்லையே!...சற்று விளக்க மாகக் கூறக் கூடாதா?'' என்று மீண்டும் கேட்டான் வசந்தன்.

''என்னை மறந்து விடுங்கள்! இப்போதைக்கு இவ்வளவுதான் என்னுல் கூற முடியும்!'' விம்மலும் வெடிப்புமாக எப்படியோ முடித்தாள் சீலியா.

சட்டென வசந்தன் வாய் விட்டுச் சிரித்தான். அவள் அவனை விந்தையான கலக்கத்தோடு பார்த்தாள்.

''நீ என்னை மறந்து விட்டாயா, சீலியா?''

''என்னை மன்னித்து விடுங்கள். நான் மன்னிக்க முடியாத குற்றம் செய்கிறேன். நடந்ததை மறந்து விடுங்கள்.''

''நான் மறப்பது இருக்கட்டும். உன்னுல் முடியுமா சீலியா?''

''இது வெறும் காவியப் பேச்சு; நடைமுறைக்கு உதவாத பேச்சு!''

''விளையாடுகிருயா சீலியா?''

''விளையாடவில்லை. சூழ்நிலை அப்படி...'' சீலியா முடிக்க முடியாமல் தவித்தாள்.

வசந்தனும் ஏற்க முடியாமல் தவித்தான். அவள் விழி வட்டத்துக்கு எட்டாத தொலைவில் அப்படி என்ன

தான் நடந்திருக்கும்? 'சூழ்நிலை' என்று அவள் கூறுவது எதைக் குறிக்கிறது?

''சீலியா! நீ இப்படி முடிவில்லாமல் பேசுவது எனக்குப் புரியவில்லை. புரியும்படியாகப் பேசு. எத்தனை நேரமாயினும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!''

வினயம் அவன் வார்த்தைகளில் தோய்ந்திருந்தது.

''பேச்சின் தொடர்பை நான் அறுக்க முயலும்போதெல்லாம் நீங்கள் இப்படி வளர்த்துகிறீர்களே. சுருக்கமாகத்தான் சொல்லி விட்டேனே. நீங்கள் இப்போதைக்கு இந்த இடத்தை விட்டு நீங்க வேண்டும்.'' இதைக் கூறும் பாவனையில் கடுமையின் ஏற்றமே இல்லை. மாறுகத் தன்னையே மறைத்துக்கொள்ள முயலும் போலித்தனம் தெறித்தது.

''அதற்கு உன் உள்ளத்தை விட்டல்லவோ நான் நீங்க வேண்டும்?'' —வசந்தன் சிரிக்க முயன்றான்.

''நீக்க முயல்கிறேன். கடவுள் வெற்றி யளிக்கட்டும்.'' தன் தோல்வியை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டுவிட்ட அவதியில் விழிகள் நீரைக் குளமாகத் தேக்கின.

அவன் அவளை வெறித்து நோக்கினான். அவன் சீலியா அவளைக் கோபிக்க முடியுமா? தன் மனத்தில் அவனுக்கு இடமில்லை என்கிறாளே, அதைத்தான் நம்ப முடியுமா? ஆனால் இப்போது அவள் கூறுவதெல்லாம் உண்மைதானா?

''இந்தச் சீலியாவைப் புரிந்து கொள்வதே கஷ்டமா யிருக்கிறதே!''


வசந்தனுக்கு ஒரே குழப்பம்; ஒரே தவிப்பு. திடமும், தெம்புமாக அவனுடன் பழகிய ஒரு பெண் கடைசியில் பலவீனம் படைத்த ஒரு சாதாரண, சாமானியப் பெண் ஆகிவிட்டாளே! அப்படியானால் மற்றப் பெண்களுக்கும் இவளுக்கும் என்ன வித்தியாசம்? திடுதிப்பென்று ஏன் இப்படி மாறிவிட்டாள்? 'ஏன், என்ன?' என்ற இரு கேள்விச் சொற்களும் அவனை இரவு முழுதும் கண் கொட்ட விடவில்லை.

காலையில் வார்டில் சந்திக்கும் போது அவள் சிரிப்பு அவனுக்கு எல்லாவற்றையும் விளக்கிவிடாதா? 'எனக்கு நடிப்பு வராது என்றான் என் தோழி. என் நடிப்பு எப்படி? பாவம், உங்களை ரொம்ப வருத்தி விட்டேன்' என்று சொல்வாளோ? அல்லது 'ஜஸ்ட், ஒரு வேடிக்கை செய்தேன். என்னைத் தப்பாகத் தானே நினைத்து விட்டீர்கள்? மன்னித்து விடுங்கள்' என்பாளோ? இந்த இரண்டில் ஒன்றைச் சீலியா கூறி விட்டாளானால் அவனுக்குச் சொர்க்கம் என்பது மேலுலகில் இல்லை!

புதிய நம்பிக்கையின் துளிர்கள் இதயத்தின் திகிலைச் சமனப்படுத்திக் கொஞ்சம் உற்சாகத்தைக் கொடுத்தன. கருக்கல் இருட்டிலேயே எழுந்து குளித்துவிட்டுத் தலையை வாரிக் கொண்டான். வார்டை அடையும் வரை கூட அவனிடம் நம்பிக்கை குறுகுறுத்துக் கொண்டுதான் இருந்தது. ஆனால் அவளைக் கண்டதும் அவள் பார்வை கீழே கவிந்து கொண்டதைக் கண்டபின் அவனால் அவளைப் பார்க்கவே முடியவில்லை.

அவளைச் சந்தித்த பின் ஏற்பட்ட ஒவ்வொரு புது அறிமுகமும் ஒரு புதிய இன்பமாக இன்றுவரை வளர்ந்து வந்தது. ஆனால் இன்று எதற்குமே அர்த்தமில்லாமல் போய் விட்டது.

ஓ. பி. முடிந்ததும் அவசரமாக விலக முயன்ற சீலியாவைத் தொடர்ந்தான் வசந்தன். முன் வாயிலை அவள் கடக்கு முன் அவளை மறிப்பதுபோல் முன்னே போய் நின்



இனிக்கும் நினைவுகள்

கோமகள்



இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-V.19-140 TM

றான். அவள் தயங்கினாள். 'என்ன?' என்பதுபோல் நிமிர்ந்தாள். அவளது உயிரற்ற பார்வையை அவனால் தாங்கவே முடியவில்லை. அவள் எதற்கோ கட்டாயப் படுத்தப்பட்டிருப்பதாகத் தோன்றியது.

''நேற்று...நேற்றுக் கூறியதெல்லாம் பொய்தானே?''

எல்லாம் பொய்யாக இருக்க வேண்டும் என்பது போலக் கேட்டான்.

அவளது குறுகுறுத்த விழிகள் திண்டாடின.

''இனி உயிர்க்கச் சக்தி இல்லாதவைகளை எண்ணிப் பயனென்ன?''

குரல் அவளைக் காட்டிக் கொடுத்தாலும், அதை அவள் மறைக்க முயன்றாள்.

''அப்படி நான் கருதவில்லையே!''

''நான் கருதி முடிவு கட்டிவிட்டேன்!'' அவள் குரலில் நிராகரிப்பின் அழுத்தம் தொனித்தது. ''கரைந்து நீராகிவிட்ட நினைவுகள் கிளைத்துத் தழைப்பதில்லை.''

அவள் விலகி நடந்தாள். அவன் உட்பதற்றம் மிகுந்தான். ஒவ்வொன்றுக்கும் ஒரு முடிவு உண்டல்லவா? இப்போது இதோடு இதற்குச் 'சீல்' வைத்தாகி விட்டது. திடீரென அவனைச் சுற்றியிருந்த ஆரவாரங்களெல்லாம் குறைந்து போய், அந்த ஆஸ்பத்திரியே இருளடைந்தது போலிருந்தது.

நெற்றி மேட்டில் உள்ளங் கையை அழுத்தியவாறே உட்கார்ந்து கொண்டு ஓடும் மின் வண்டிக்கு வெளியே வெறித்துக் கிடந்த வெளி உலகைப் பார்த்தான் அவன். மின்வண்டியின் ஓட்ட அசைவில் அவன் உடம்பு நளினமாக அசைந்து கொண்டிருந்தது. பழகிய சித்திரங்களாக விரிந்தோடிய காட்சிகள் எல்லாம் அவலம் சுமந்தாற் போல் தெரிந்தது. எப்போதும் காணும் சென்னை நகரம்தானா இது? இதன் சந்தியா காலக் கலகலப்பும், ஆரவாரமும் எங்கு ஓடி ஒளிந்தன? அவன் உள்ளத்துக்கு ஏற்பட்ட விபத்து அந்த நகரத்துக்கும் ஏற்பட்டு விட்டதா? இந்த மின் வண்டிக்குத்தான் என்ன வந்தது? இப்படி நத்தையாக ஊர்கிறதே? கோட்டையிலிருந்து தாம்பரம் செல்ல இத்தனை நேரமா?

நிலையத்திலிருந்து பிரியும் பாதை வழியே அவன் வேகமாக நடந்தான். விழிகள் விரிய அவனை மௌனமாகவே வரவேற்றாள் செல்லம்மா. வசந்தனின் முகத்தில் எப்போதும் ஊடாடும் புன்னகையும் பரிவும் துயரச் சாயலில் மூழ்கித் தவித்தன. கொஞ்ச நேரம்



''நேற்று உன்னை ராமு நாலு அடி பிரம்பால் அடிச்சதுக்கு, இன்று நீ, அவனை எட்டு அடி அடிச்சுட்டியாமே? அதென்ன கணக்கு?''

''அவன் என்னை அடிச்ச பிரம்பின் நீளம் இரண்டடி. நான் அவனை அடிச்ச பிரம்பின் நீளம் ஒரு அடிதானே டீச்சர்!''

எதுவும் பேச முடியாத திணறலில் அவன் தவித்தான்.

''ஏனடா வசந்த்! நேற்றே வரவில்லையே ஏன்?'' அவள் குரலில் அன்பு கலந்து, கொஞ்சம் கடுமை கலந்திருந்தாற் போலிருந்தது.

அவனிடம் சொல்ல முடியாத திகில் ஒன்று உருவாகியது. பேசவே இடந்தரவில்லை மனம். ''வந்தும்மா....'' அதற்கு மேல் தொடருவது சாத்தியமாக இருக்கவில்லை.

''வந்தும்மா.... என்ன .... வந்து? நேற்று மாலை நீ வருவாய் என்று மீனாட்சி சுந்தரம் வந்து காத்திருந்தார்!''

மீனாட்சிசுந்தரம் வந்து காத்திருந்தாரா? ஏன், என்பது போல் அவன் அன்னை முகம் நோக்கினான்.

எந்த முகாந்திரம் கொண்டாவது அவன் மறுத்து விடுவானோ என்று அந்த அன்னைக்குப் பயம் இருந்து கொண்டுதானிருந்தது. தனக்குரிய மதிப்பளிக்கத் தவறாதவன் என்றாலும் அவன் மனம் விண்டு எதையாவது கூறி யாசிக்க ஆரம்பித்து விட்டால்...?

''நேற்று நீ வந்திருக்க வேண்டும். அப்போது உனக்கு எல்லாம் புரிந்திருக்கும்...''

''நான் பரிசுத் தொகை ரூபாய் எழுநூறுக்கான செக்கை அவரிடம் நானே சென்று தந்துவிடலாம் என நினைக்கிறேன்.'' இப்படி அவன் வாய் சொல்

விக் கொண்டிருக்கும் போதே மனம் பரிசு பெறக் காரணமாகி நின்றவனை வாழ்த்த முயன்று திடுக்கிட்டு நின்றது.

''அதை நீ திருப்ப வேண்டிய அவசியமே இல்லை.''

''ஏனம்மா அப்படி? அப்பா அனுப்புகிறாரா என்ன?''

''இல்லேடா வசந்த்! அப்பாவும், சீதாவும் கூட அங்கே, அவர்கள் வீட்டிலேயேதான் தங்கப் போகிறார்கள். இன்னும் நான்கு தினங்களில் அவர்கள் வந்து விடுவார்கள்.''

''பாவம், அவர் நமக்கு இப்படி அடுக்கடுக்காக உதவிக் கொண்டேவருகிறார்.''

''உனக்கு ஒன்றுமே புரியவில்லையடா, வசந்த்! இதைப் புரிந்து கொள்ளக்கூட உனக்குச் சாமர்த்திய மில்லையா? இந்த வயசிலே உன்னிடம் அவர் பழகுகிற விதம் புரியவில்லையா?''

''அம்மா...'' விம்முவது போல் வெடித்தது வசந்தனின் குரல். அந்த அன்னையின் குரல் கனிவிலேயே அவனுக்குக் கொஞ்சம் புரிந்த மாதிரியும் எவ்வளவோ புரியாத மாதிரியும் இருந்தன. எவ்வளவோ குழப்பங்களுக்கு விடையும் கிடைத்தது. இது வரை தெளிவாகத் தெரிந்தவைகளும் குழப்ப மூட்டம் போட்டுக் கொண்டன. மொத்தத்தில் இதோ இந்தப் பிரச்னை என்னும் அரங்கத்தின் பின்னே வெறும் நிழலாக நின்று சீலியா விம்முவதும் தெரிகிறது. இந்த மற்றவர்களின் மொத்தமான கூட்டுக் குதூகலிப்பில் பலியாகிவிட்ட சீலியாவின் நலிவும்தெரிகிறது.

இப்போது தெரியும் சீலியாவின் உரு கண்ணியத்தின் உச்சியாகவே நிற்கிறது. அவள் ஒரு சாமானியப் பெண்ணல்ல. தன்னைத்தானே கொன்று கொள்ளும் தியாக சிகரம். தன்னையே மறைத்துக் கொள்ளும் தெய்வம். தாயின் சொற்களுக்குப் பதிலளிக்க வேண்டுமே என்ற தயக்கத்துடன் சொற்களுக்காகத் தூரப் பார்த்தான் வசந்தன்.


''என்னடா வசந்த்! இப்படித் திக்பிரமை அடைந்து விட்டாய்? நீ மீனாட்சி சுந்தரத்தின் பெண்ணைப் பார்த்தாயல்லவா? உன் குணத்துக்கு இப்படி வாய்க்கும் என்று தெரியும். அப்பா கூடச் சம்மதமளித்து விட்டார்...''

''அம்மா!...'' பிரவாகத்தில் மிதக்கும் மரக் கொம்பாக அலைக்கழிப்பு. ''ஏனம்மா, என்னைக் கேட்கத் தோன்றவில்லை உனக்கு?'' என்று நொந்து கொண்டான் அவன்.

'திக்'கென்றது செல்லம்மாவுக்கு. ஆனாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமலேயே சமாளித்துக் கொண்டு விட்டாள். ''ஏன்டா, வசந்த்! அன்றொரு நாள் ஆயிரம் ரூபாய் தருவதானால் உன் தங்கை சீதாவின் நாத்தியைக்கூட மணந்து கொள்கிறேன் என்றாயே! என் பொருட்டுத்தானே அப்படி முன் வந்தாய்? இப்போது நீ நினைத்தபோது உனக்கு உதவியதோடு தன் செல்வத்தோடு மகளையும் உனக்குக் கொடுக்க அவர் வரும் போது அதை உதைத்துத் தள்ளாதே. உனக்கு நான் நல்லதுதானே செய்வேன்? எனக்கு உன் வாழ்வில் எத்தனை அக்கறையுண்டு, எதிர்காலத்தில் எத்தனை நம்பிக்கையுண்டு என்று உனக்குத் தெரியாதா என்ன?''

''நீ...முடிவு செய்து விட்டாயா அம்மா? முடிவு சொல்லி விட்டாயா அம்மா...?''

கிருஷ்ண ஜயந்தியில் ராமர்கள்!



பம்பாயில் வீட்டு வேலை செய்யும் நபர்களை ராமன்மார்கள் என்றுதான் அழைப்பார்கள். கிருஷ்ண ஜயந்தியன்று உறியடிக்கும் பழக்கம் இந்த ராமன்மார்களுக்கு உண்டு. நாலைந்து கட்டிடங்களில் வசிப்பவர்களிடம் பணம் சேகரித்து ரூபாய் நோட்டுக்களை உயரே தோரணம் போல் கட்டிவிடுவார்கள். வெள்ளரிக்காய், பழங்கள் முதலிய வற்றையும் கோப்பது உண்டு. உயரமான கம்பத்தின் உச்சியில் பானையில் நீர் நிரப்பிக் கட்டி வைப்பார்கள். போட்டியில் பங்கு கொள்பவர் எல்லோரும் கும்பலாக ஓடிவந்து ஒருவர் மீது ஒருவராக ஏறி உறி அடிப்பார்கள். பானையை உடைப்பதில் வெற்றி பெற்ற வனுடைய கோஷ்டிக்குப் பணம் சொந்தமாகும். -ராஜலக்ஷ்மி சங்கரன்


சென்னை:
கெயிட்டி · பிராட்வே
ராக்ஸி · நூர்ஜஹான்
மற்றும் தென்னடெங்கும்
கமால் பிரதர்ஸ்
அளிக்கும்
நிமிர்ந்து நில்
டைரக்ஷன் : தேவன்
இசை : M.S. விஸ்வநாதன்
ஸ்டுடியோ : கோல்டன்
G.H.RAO
ELEGANT

"ஏன் இந்தத் தயக்கமும், திகிலும்? உன்னை நாடி அஷ்ட ஐசுவரியமும் வரும் போது அதை நான் மறுப்பேனா? சம்மதம் கொடுத்து விட்டேன். நீ என்னடா சொல்ல வருகிறாய்?"

அவன் என்ன சொல்ல வரப் போகிறான்? சீலியாவின் எந்தப் போக்கை நம்பி அன்னை மனத்தை விண்டு விடுவான்? அவளோ நத்தையாக, ஆமையாக முடங்கிக் கொள்கிறாள். இங்கே வந்தால் அம்மா ஆரம்பிக்கும் புதிய பிரச்னைக்கும் சீலியாவுக்கும் ஒரு படுமுடிச்சு விழுந்து இறுகி வருவது தெரிகிறது. இரண்டு பிரச்னைகள்! அன்னையிடம் மறுத்துவிடவும் முடியாது. அவள் மறுக்க விடமாட்டாள். சீலியாவும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சீலியாவிடமும் ஏற்கக் கூறும் காரணம் வெற்றி பெறப் போவதில்லை. அவள் ஏற்றாலும் அந்த முடிவை ஏற்க அம்மா விடப் போவதில்லை. இரண்டும் இரு வேறு வினைகள். ஒன்றுதான் தீர முடியும். உறவின் பலத்தைப் பெற்றுவிட்ட இரண்டாவது சூழ்நிலை. இதற்கு வசந்தன் எவ்வித பதிலும் சொல்லாமல் இருப்பதே உத்தமம். எல்லோரும் கைவிட்டுவிட்ட அவதி. எல்லோருமே உதாசீனப்படுத்தும் வேதனை. எந்தத் திசையிலும் போக முடியாத வெறுமை. எந்த உணர்வும் இணைக்க முடியாத சூன்யம். எந்தப் பொருளும் ஆறுதல் அளிக்க முடியாத ஏக்கம். இதில் மீள வழி ஏது?



"உப்புச் சத்தியாக்கிரகம் என்ன ஆச்சு?... காந்தி, மற்ற தலைவர்களெல்லாம் விடுதலையாகிட்டாங்களா?... ஒவ்வொண்ணாச் சொல்லுங்க..."

அவன் தன்னைத் தானே அடக்கிக் கொண்டான். அவனது உள்ளோலம் கணத்துக்குக் கணம் பெருகிப் பெருகிக் காட்டாறாகப் பிரவகித்தது. உள் மழையில் தெப்பமாக நனைந்து போன நினைவுகள் ஆற்றல் இழந்து வீழ்ந்தன. மனத்தின் பலமெல்லாம் சிறு நடுக்கங்களாக நடுங்கி நழுவி உதிர்ந்துவிட்டது போன்ற படபடப்பு ஏற்பட்டது. காற்றில் தீபம் ஆடிக் கொண்டே அணையாமல் இருப்பதைப் போன்ற மரணவஸ்தை.

"என்னடா, வசந்த்! ஏன் இப்படி பிரமை பிடித்துப் போய் உட்கார்ந்திருக்கிறாய்?"

"ஒன்றுமில்லையம்மா....!"

"நீ ஏதோ என் மீது கோபப்படுகிறாயடா?"

"உன்னை.... உன்னை என்னால் கோபிக்க முடியுமா, அம்மா?"

"பின்னே என்னடா, ஏதோ சொல்ல வருகிறாய், தயங்குகிறாயே?"

மனத்தின் தள்ளாட்டத்தை அவன் மறைத்துக் கொண்டான். "ஒன்றுமில்லையம்மா!" என்றான்.


கொஞ்ச நேரம் ஆச்சரியமான மௌனம் சூழ்ந்திருந்தது. ஸானடோரியத்தின் மாலை மலைக் காற்று உடலைத் தழுவி உள்ளத்தின் சூட்டையும் ஒத்தி எடுத்து விடுவது போல் ஊடுருவியது. வருபவர்களும், போகிறவர்களுமாகக் கலகலப்பு கூடுவதும், குறைவதுமாக இருந்தது.

"அந்தப் பெண் குழலியும், அவள் அம்மாவும் நேற்று இங்கு வந்திருந்தார்களடா?"

"அப்படியா?" அன்னையின் குதூகலம் எல்லாம் அவன் ஆசைத் தீயில் பிடிபிடியாக மண்ணை யள்ளி மூடிக் கொண்டிருந்தது.

"அவளை உனக்குப் பிடித்திருக்கிறதா?" இதை அவள் கேட்கும் ஆவலிலேயே அவனுக்குப் பிடித்துவிட வேண்டும் என்னும் பேராசை. "அவள் நன்றாகத்தான் இருக்கிறாள், அதோடு படித்தவள். இல்லையாடா வசந்த்?"

"பெண் என்ற உருவத்தையே நான் நன்றாக இல்லை என்று கருதியதில்லையம்மா. அவர்கள் அன்னையின் சொரூபங்கள்" என்று பொதுப்படையாகவே சொல்ல முயன்றான் அவன்.



''எங்க லேடீஸ் கிளப் நாடகத்திலே எனக்கு ஆண் வேஷம்!''

''அப்படியா, எங்க ஆபீஸ் கிளப் நாடகத்திலே எனக்குப் பெண் வேஷம்!''

''அதெல்லாம் வேஷமில்லேடா! இங்கே ஆணாக இருக்கிறயே அதுதான் வேஷம்!''

''எனக்கு அதுதான் வேண்டியது. எனக்குத் தெரியும், உனக்கு அவளைப் பிடிக்குமென்று. என் சொல்லையும் நீ தட்டமாட்டாய் என்று தெரியும்...'' தனக்குள் மகிழ்ந்து போனாள் செல்லம்மா.

அன்னையின் பரந்த தியாகத்துக்கும், உயர்ந்த உள்ளத்துக்கும் இப்படிப் பட்ட சின்னஞ்சிறு ஆசைகள்கூட இத மூட்டுவதுண்டா? இனிமை பயப்ப துண்டா? உலகின் வெகு சாதாரணப் பெண்ணைப் போல் இதற்குப் போய் மகிழ்கிறாளே! கடைசியில் தம் மக் களின் மேன்மைக்குத் தலை வணங்கும் ஒரு தாய்தானே அவள்!

''வசந்த்! கல்யாணத்தைச் சீக் கிரமே நடத்திவிடலாம் அல்லவா?'' பூமியே காலடியிலிருந்து அதல பாதா ளத்துக்கு நழுவுவது போல் இருந்தது.

''என்னம்மா.... இப்போது என்ன அவசரம்? வேலைக்கு....''

''அதனால் என்னடா? படிப்புத்தான் எப்போதோ முடிந்து விட்டதே. இன்னும் மூன்றே மாதம். ஹவுஸ் ஸர்ஜன் முடித்துவிடப் போகிறாய்..... அவரே டிஸ்பென்சரி வைத்துத் தரப் போகிறாராம்.''

''அம்மா! இதெல்லாம் என்ன பிதற்றல் அம்மா? நான் டிஸ்பென்சரி வைக்க வேண்டும் என்றே நினைக்க வில்லை. நான் கிராமத்துக்குச் செல்லப் போகிறேன். அங்குதான் டாக்டர்கள் கிடைப்பது கஷ்டம். யாரும் போகத் தயங்குகிறார்கள்.''

''மகராஜனாகப் போய் அங்கேயே இரேன். ஆனால் நல்ல காரியம் ஒன்று கூடி வரும் போது அது சீக்கிரம் முடியட் டும். அதைத் தடைப்படுத்தாதே....''

பாசத் தொடர்பு கொண்ட இரு வரில், வயதேற்றம் கொண்டுள்ளவர் வயதின் சலுகையால், மரியாதையின் சலுகையால் பேச்சில் வெற்றி பெற்று விடுவதுண்டு. அதே போல்தான் வசந்த னிடமிருந்து கிளம்பும் எதிர்ப்பையெல் லாம் சமாதான, சம்பிரதாயக் கணை களாலேயே சமாளித்துக் கொண்டாள் அன்னை. ஆனாலும் வசந்தன் திருமண ஏற்பாட்டுக்கு அத்தனை சுலபமாக ஒப்புக் கொள்ளவில்லை.

''இதோ, பார்! நீ இப்படி உணர்ச்சி வசப்படக் கூடாது. தெளி வான சாதாரண நிலையில் இருக்க வேண்டும். பேசாமல் நிம்மதி யாக இரம்மா....!''

''எனக்கு நீ புத்தி சொல்கிறு யாடா?''

''எனக்குத்தானேம்மா, உன் உடம் பைப் பற்றித் தெரியும்.''

''மனத்தைப் பற்றி....?''

''அம்மா!''

''வீண் பேச்சு ஏன்?''


''நானே யோசித்துச் சொல்கிறேன் அம்மா!'' என்ற வசந்தன் புறப்பட எழுந்து கொண்டான்.

''டேய், வசந்த்! இப்படி நீ ஒரு நாளும் எனக்கு எதிராகப் பேசமாட் டாயே. இன்று ஏண்டா அப்படி? உன் திருமணத்தை நானும் கண் குளிரக் காண ஆசைப்பட்டேன். அது நடக் காது போல் இருக்கிறது. எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? நீ கொஞ்ச நேரமாவது உட்காரு....'' என்றாள் தாயார்.

''இல்லை, நான் புறப்படுகிறேன், அம்மா....!''

வசந்தன் வெளியே நடந்தான். செல்லம்மாவின் கண்களில் நீர் குபீ ரெனக் கப்பியது. கண்களின் பார்வை யில் கலங்கல். அடிவயிற்றினின்றும் பீறிட்ட குமுறலில் 'ஓ'வென்ற பயங் கரக் கூச்சல். உடம்பெல்லாம் நடுங்க உடைப்பு ஆறாகப் பெருகியது. அந்த அன்னையின் உடல் படுக்கையில் சாய்ந் தது. வசந்தன் தூரப் போய்க் கொண் டிருந்தான்!

(தொடரும்)


NEROLAC
1 HOUR PLASTIC
EMULSION PAINT
WHITE

கனிமரம்

ஊருக்குச் சென்றிருந்த நாயகன் மனை திரும்பும் நேரமென்று இல்லம் இருத்தித் தானும் மகிழ்ச்சியுடன் புதுமை பூணும் இல்லத் தலைவியைப் போன்று, பழுப்பும் சருகுமாக நின்ற மரம் பரபரப்பும் கறுகறுப்புமாக அவற்றை உதிர்த்துப் புத்தளிர்க் கோலம் பூணுகிறது. பட்டுத் துளிர்கள் கொத்துக் கிண்ணங்களாய், நிமிர்த்தி வைத்த பசுங் குஞ்சலங்களாய், முதிர்த்த மரத்தின் அடியிலும், நுனியிலும் முண்டிலும் முடிச்சிலும் கவடறியா மனத்திலே எழும் அழகிய கனவுகளுக்கு ஒரு விளக்கம் கொடுத்தாற் போல் பூரிக்கின்றன. இந்த உயிரோட்டப் பரபரப்பில், எங்கோ புறப்பட்டு எங்கோ பின்ன வந்த நட்பாய்க் குறுக்கும் நெடுக்கும் ஓடும் கொடிகளின் இடையே பெரும் பவள அணிகளாய், கொவ்வைக் கனிகள் வெந்து தொங்குகின்றன. மேனி வண்ணமும் பசுஞ் செறிவும், உண்ணும் அலகும், உண்ணப்படும் கனியும் ஒன்றுக்கொன்று பிரிக்க இயலாத வகையில் பச்சைக் கிளிகள் அங்கே விருந்துண்ண வருவதுண்டு. முதிர்ந்து திரண்ட முடிச்சுக்களில், விளைந்த கரும் பச்சைக் கிளைகளில், கவர்ச்சியற்று மறைந்திருக்கும் பழுப்பு வண்ணக் கனிகளை அணில்கள் இங்குபோல் எங்குமே அநுபவிக்க இயலாது. கவர்ச்சியற்ற தோலின் உள்ளே தேனூறச் சாறு கனிந்தொழுகும் அந்தச் சபேடாக் கனிகளை ஏழெட்டு ஆண்டுகளாகவே யோகாம்பாள் இறக்குவதில்லை. அந்த இல்லத்துக்கு உரியவளாக அவள் வந்த புதிதில் அது இளமரமாக இருந்தது. அந்நாட்களில் மரத்தில் உள்ள கனிகள் அவர்களுக்கே. உடைமை: குளிர்பதனம் செய்த அறையில், அத்தனை உடைமைகளையும் அவளுக்கு அளித்த அந்த ஒருவனின் உடைமையாக அவள் கோடை வெய்யிலின் கடுமையைப் பற்றிய நினைவே இல்லாமல் இருந்த நேரங்களில், ''நம்ம மரத்துப் பழம் இது'' என்று அந்தக் கனியின் இனிமையை நுகர்ந்திருக்கிறாள். திரண்ட செல்வத்தைச் சேர்ப்பதிலேயே கருத்தாக நாளெல்லாம் அதைப் பற்றிய முயற்சிகளிலேயே முழுகித் தலை நரைத்து அந்தச் செல்வத்தை இன்பமாக்கி நுகராமலே பொட்டென்று கண்ணை மூடிய வறியனைப் போல் இப்போது தன்னை நினைத்துக் கொள்கிறாள். இப்போது அவள் அந்தக் கனிகளைக் கொய்யச் சொல்லி இனிமையைச் சுவைக்கக் கூடாதா? விரும்பிய இடத்துக்குச் சென்று வர, வண்டி வசதிகள் இல்லையா? ஒன்றுக்குமே குறைவில்லைதான். எனினும், ஒவ்வொரு கணமும் ஒளிரும் நன் முத்துக்களாக உருண்டோடிய நேரம் இப்போது இல்லையே? இப்போதைய கணங்களெல்லாம் நெடிய பாலையில் குவிந்த மணல் திரிகள். அவற்றை ஒவ்வொன்றாக எண்ணி எண்ணிக் கழிக்கையில் அலுப்பும் சலிப்பும் ஆழ்ந்த பெருமூச்சுக்களும்தான் மேலிடுகின்றன. நெடு நாட்கள் ஒருவனின் உடைமையாக இருந்தபின், அவனோடு அந்த வாழ்க்கை சட்டென்று ஒரு பொருளுமில்லாமலே முடிந்து போய் விட்டது.

புது மெருகழியாமல் விளங்கிய பெருமை அந்த மனைக்கு இப்போது இல்லை. கீழ்த்தளம் வாடகைக்கு விடப்பெற்ற பகுதியாய், எல்லா வகை அடிகளும் பதியும் வாயிலாய், ஒரு பாங்கியின் கிளையாக மாறிவிட்டது. மேல் தளத்தில் அவள் ஒருத்திக்கு எத்தனையோ வசதிகள் இல்லாமலில்லை. எனினும், ஓர் அறையும், ஒரு பால்கனியுமாக அவள் உலகம் முடிந்துவிடுவது போல் குறுகிவிட்டது. அவள் பார்வையில் எப்போதும் பட்டுக் கருத்தைக் கவர்ந்து இழுப்பது அந்தக் கனிமரம்தான். அன்றைய இள மரமில்லை. இன்று ஓங்கியும் பரந்தும் அது தன் ஆதிக்க எல்லைகளை விரிவாக்கிக் கொண்டு, தன்னுள்ளே ஓர் உலகைக் காணும் பெருமையில் மூழ்கியிருப்பதாகத் தோன்றுகிறது. அந்த வீட்டின் சுற்றுச் சுவர் எல்லைக்கு அப்பால் விரிந்திருக்கிறது. அடுத்த கட்டடத்துக்குரிய பள்ளியின் விளையாட்டு மைதானம். மரம், அந்த எல்லைக்குள்ளும், பெருங்குடையாய்த் தன் நீண்டு செறிந்த கிளைகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறது.

ஒரு மழையோடு நீண்ட காலம் சலனமேயில்லாமல் நிற்கும் நெடிய பொழுது. அந்த மரத்தைப் பொறுத்த வரையிலும் இல்லை. எங்கிருந்தோ ஓடி வந்து குறுக்கும் நெடுக்கும் கிளைகளைப் பின்னிச் சுற்றிக் கொண்டு பூத்துச் சிரிக்கும் கொவ்வைக் கொடி. அது கிளைகளை வீசிப் படர்ந்து உயரும் இடங்களிலெல்லாம் தானும் புகுந்து கண்ணாமூச்சி ஆடிக் கொண்டு செல்கிறது. தீங்குசெய்யவில்லை யெனினும்,



கவர்ச்சி மிகுந்த அதன் பவளக் கனிகளை உண்ண வரும் பறவைகள்தாம் எத்தனை வகைகள்! இடை இடையே செறிவுகளில் ஒளிந்திருக்கும் கனிகளின் தேன் மணம் அந்தப் பறவைகளைக் கவர்ந்து இழுக்க, அவை களும் கொட்டம் அடிக்கும் அணில்களுடன் போட்டி போட்டுக் கொண்டு மரத்தைத் திருமண வீடாக்கிக் களிக்கின்றனவே!

யோகாம்பாள் பகலுணவு கொண்டபின் சற்றே உட்புறம் தொங்கும் ஊஞ்சல் பலகையில் தலை சாய்ப்பாள். அந்த நேரங் களில் எப்போதேனும் அந்த எல்லைச் சுவருக் கப்பால் மரத்தின் நிழலில் பள்ளிச் சிறு வர்கள் பகலுணவு கொள்கிறார்கள் என்பதை அறிவிக்கும் வகையில் காற்றோடு இழையும் கலவையாய், புளியோரையின் கவை மணமோ, நல்லெண்ணெய்க் குழம்பில் ஊறிய மிளகாய்ப் பொடியின் நாவில் நீரூறும் மணமோ அவளுக்கு எட்டும். சிறுவர்கள் மறுபுறமோ, உயரக் கிளையிலோ ஒளிந்திருக் கும் தேன் கனிகளுக்காகக் கல்லெறிந்து விளை யாடுவதை அவள் அறியாள். அறிந்தாலும் அவள் பொருட்படுத்துபவளல்ல.

அன்று அவள் ஊஞ்சற்பலகைக்கு எழுந்து செல்லவில்லை. உடலெல்லாம் நீல வரி களுடன் ஓர் அழகிய பறவை, கொவ்வைக் கனி ஒன்றைக் கொத்தி உண்ணு கிறது. அருகிலேயே இரு கைக ளுக்கிடையே ஒரு சபோடாக் கனியை வைத்துக் கொண்டு ருசிக்கிறது ஓர் அணில். இந்த அழகுக் கொள்ளைகளைப் பொருட்டாகவே நினையாத தோர் ஓணான், மரப்பட்டை இடுக்கில் ஊரும் புழு பூச்சிகளை வேட்டையாடுகிறது. ஒரே கனி மரத்தில் ஒன்றுக்கொன்று தாக் கிக் கொள்ளாமல் பல்லுயிர்கள் ஆதரவாக அண்டியிருக்கும் விந்தையை எண்ணி வியந்து கொண்டிருக்கையில் கிணுகிணு வென்று வெள்ளிச் சலங்கைகள் குலுங்கும் சிரிப்பொலி கேட் கிறது. எல்லைச் சுவருக்கப்பால் செங்கற் குவியலொன்று: அதில் ஏறி நிற்கும் ஏந்திழையாளின் சிரிப்பொலிதான்.

அவள் சுவருக்கு அப்பால் இந்தப் பக்கம் யாரைப் பார்த் துச் சிரித்து மகிழ்கிறாள்?

நிலவைக் கருமேகச் செறிவு தழுவினாற்போல் செவி நுனி யின் கொத்துப் பொன் தளிரணி மட்டுமே தெரிய, கருங்கூந்தல் செவிகளையும் மூடிச் சற்றே உயர்ந்த கொண் டையாகத் திகழ்கிறது. கருங் குன்றுச் சரிவுபோல் அமைந்த கொண்டைச் சரிவில் ஒரு ரோஜா நகை புரியும் கவர்ச்சி. இளவேய்கள் போன்ற தோள்களில் ரவிக்கை இருப்பது தெரிய வில்லை. யாரோ ஒரு பெண். பள்ளி ஆசிரியை யாக இருக்கலாம். வைத்த கண் வாங்காமல் பார்க்கும்படி இப்படி அலங்கரித்துக் கொள்ள வேண்டுமா ?

''சாப்பிட்டாச்சா? ஐயோ? பழமா?''

''என்ன ஐயோ? உண்டபின் ஒரு கனி அருந்துவது என் பழக்கம்!'' என்று எவனோ ஓர் இளவட்டம் சிரிக்கிறான். குரல் கேட் கிறது. பாங்கியில் வேலை செய்யும் இளவட் டங்களில் ஒருவன்.

''மேலே.... அம்மா பார்க்கிறாங்க....''

யோகாம்பாள் சட்டென்று பின்னுக்கு நகருகிறாள். ஆனாலும் அந்தச் சிங்காரி, ''ஜன்னலில் நிற்கிறாங்க. மூக்கை அறுத்திடு வாங்க....'' என்று குறும்பாய் ஜாடை காட்டுவது தெரியாமலில்லை.

என்ன போக்கிரித்தனம்?

''இந்தப் பழத்தைத் தின்று பார்த்தால் அச்சம், நாணம் ஒன்றுமே தெரியாது.....''

''அவ்வளவு ருசியா ?''

''ஆமாம். பாதி தரட்டுமா ?''

''ஊஹூம். எனக்கு முழுசாக வேணும்.''

''நீ இந்தப் பக்கம் வா....''



ராஜம் கிருஷ்ணன்

யோகாம்பாள் தன் பல்லைக் கடித்துக் கொள்கிறாள்.

...அ...ப்....பயல்... திருட்டுப் பழம் பறித்துத் தின்னுவது போதாதென்று..... சை.....! இந்த அசட்டுப் பெண்ணுக்கு ஏன் இப்படிப் புத்தி போகிறது? அந்தக் காலத்தில் அவளுக்குப் படிப்பு பட்டம் ஒரு மண்ணும் இல்லை. எப்படியோ வலையில் சிக்கி, கழுலை விட்டு வெளியேறத் தெரியாமலே ஒரு வரிசையும் இல்லாதவளாகி விட்டாள். வயசுக் கோளாறு என்பது இதுதானா? 'அசட்டுப் பெண்ணே, வேலை வெட்டி செய்து சம்பாதிக்கிறாய், இந்த வலையில் விழாதே' என்று அவளுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும் போல் இருக்கிறது.

''அந்த மரத்திலே அணிலும் கிளியும் காக்கையும்தான் பழம் பழுக்கவிடாமல் நாசம் செய்யுது. ஏன் பழமே இறக்குவதில்லை?''

''காக்கையும் கிளியும் கொத்தித் தின்னட்டுமேன்னு தரும சிந்தையோடு விட்டு வச்சிருப்பாங்க. சுவருக்கப்பால் இருக்கும் கிளி ஒண்ணுக்கும் இந்தப் பழத்தில் இவ்வளவு ஆசைன்னு எனக்கு இவ்வளவு நாட்கள் தெரியாமப் போச்சே?''

தடியன் முகம் நீட்டி அவளோடு காதோடு காதாய்க் கேட்பது போல் பேசுகிறான். யோகாம்பாளுக்கு ஏனோ உள்ளூறப் பனிக் கட்டிச் சிலிர்ப்பாய் ஓர் அச்சம். அரும்பு மீசையும் நெளியும் கிராப்பும், சன்னச் சங்கிலியுமாக, 'உதவியாளன்' என்ற சுந்தரம் பயல். ஒரு நாள் கீழே பானை உடைந்துவிட்டதென்று தண்ணீர் கேட்க மாடியேறி வந்தான். அவள் உள்ளே சென்று தண்ணீர் கொண்டு வருமுன்னால், ரேடியோவைத் திருகிவிட்டுவிட்டு ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தான்.

''ஏம்மா, இவ்வளவு பணம் இருக்கே? ஓர் ஏர்கண்டிஷனர் வச்சிட்டுக் குளுகுளுன்னு இருக்கக் கூடாது?'' என்று கேட்டான்.

''நீ என்ன கீழே கிளார்க்கா?''

''ஷ், உதவியாளன். அதெல்லாம் பழைய பேரு'' என்றவன் அதோடு நின்றானா? ''ஏன், ஆபீசர்னா பிரிஜ்ஜிலே வச்ச தண்ணியாப் பாத்துக் குடுப்பீங்களாக்கும்!'' என்று இடக்காகக் கேட்டுவிட்டுப் போனான்; அதிகப் பிரசங்கி! இவனிடம், திருட்டுப் பழம் தின்று—அடாபிடி பேசும் நேர்மையில்லாதவனிடம் — இந்தப் பெண் முகத்தைக் காட்டிப் பேசலாமா? படித்து வேலை செய்தால்கூட, பெண்பிள்ளைப் புத்தி பின்புத்தியாகத்தான் இருக்குமா?

''ணங்''கென்று அப்போது அவள் நெற்றியில் கூரிய கல் ஒன்று வந்து பலமாகத் தாக்குகிறது.

உடலில் ஊறுபட அவள் பொறுத்ததே யில்லையே? நோவோடு சினமும் பொங்குகிறது. அந்தக் கல் வீச்சைப் போலவே குரலும் பள்ளியை நோக்கிப் பாய்கிறது:

''யார்ரா அது? கல் எறிஞ்சது யாரு?''

சுவருக்கு அப்பால் மரத்திலிருந்து புறாக் கூட்டம் கலைந்தாற்போல் சிறுவர்கள் ஓடுகிறார்கள். போகிற போக்கில், கல்லெறிந்ததோடு சில சொற்களையும் வீசிவிட்டுப் போகின்றனர்:

''மாடி ராணி டோய்! கஞ்சூஸ் டோய்! பழந்தின்னி டோய்!'' என்றெல்லாம் அவள் செவிகளில் விழுகின்றன.

''போங்க, போங்க: எல்லாம் போங்க !'' செருப்பொலிக்க, பின்னே தலைப்பு அசைய அந்தச் சிங்காரியும் சிரித்த குரலிலேயே அந்தப் படையை விரட்டிக் கொண்டு போகிறாள்.

ரோசமா, துயரமா, அவமானமா, ஆத்திரமா என்று புரியாத கிளர்ச்சி துருத்திக் கொண்டு வருகிறது.

காவற்காரக் கூர்க்கா, மாசா மாசம் பணமும், கோதுமை மாவும் வாங்கிக் கொண்டு போகிறானே? அவனைக் கூப்பிட்டு அந்த மரத்துக்குக் காவலை உறுதியாக்குகிறாள் யோகாம்பாள்.

''கல்லெறிஞ்சு காயம் பண்ணிட்டாங்க, பாரு. வால்கள். பயமுறுத்தி வை....!''

''ஹாஞ்ஜீ....!''

''மரத்துப் பழத்திலே யாரானும் கைவச்சா எங்கிட்டே சொல்லு. ஆபீசுக்கு வீடுதான் வாடகை. மரத்துக்கும் பழத்துக்குமில்லே. என்னமோ நாலு பட்சி பறவை சாப்பிட்டுப் போகட்டும்னு, கண்டவங்களும் கைவைக்கலாமா? கண்டிச்சு வை, யாரானாலும்!''

''ஹாஞ்ஜீ !....''

கண்ணாடியின் அருகில் சென்று காயத்துக்கு மெழுகு தடவிக் கொள்கிறாள். எரிச்சல் அடங்கவில்லை. நாற்பத்தெட்டு வயசுக்குத் தளதளவென்று..... புசுபுசுவென்று உப்பிப் போன முகம். கொட்டை கொட்டையாக வைர மூக்குத்திகள். பதினேழு கல் வைத்துக் கட்டிய காதணிகள். ஊரில் உள்ள பெரிய நகைக் கடையில் தனியாகச் சொல்லிக் கட்டிக் கொண்டாள். இன்னும் இளமையாக அவள் கொடி போலிருந்த நாட்களிலும் இதே நகைகளைப் போட்டுக் கொண்டு, ஏதோ, சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் கர்வத்தில் திகழ்ந்தாள். எல்லாம் வெறும் பொய் ; ஏமாற்றம்...? கனி மரம் கனிமரம்தான்.

பள்ளிக்கூடத்தில் வேலை செய்யும் பெண் எதற்கு இப்படிச் சிரித்துத் தொலைக்கிறாள் ?

இப்போதெல்லாம் ஊஞ்சல் பலகையில் யோகாம்பாள் படுப்பதே இல்லை. சிறுவர்களும் சிறுமியரும் நீலமும், வெள்ளையும், இரட்டைப் பின்னலும் ஒற்றைப் பின்னலுமாகக் கூடிக் கூடி மரத்தடியில் உணவருந்துகின்றனர். காக்கைகள் மரக் கிளைகளில் கூப்பாடு போடுகின்றன; தெரு நாய்கள் அருகருகே காத்துக் கிடக்கின்றன. மோர்ச் சோறு, குழம்புச் சோறு தோசை, உப்புமா என்று பல வகைகள்.


காவற்கார ரூப்ஸிங், அம்மாவின் உத்தரவைப் பெரிதாக மதித்துத்தான் காவல் செய்கிறான். எனினும், நீலவண்ண டெரிலின் ரோஜாப் பூக்கள் அச்சிட்ட ஃபுல்வாயில், வெள்ளைக் கைத்தறிச் சேலை என்று அவள் செங்கற்குவியலின் மேல் காட்சியளிக்கும் போது யோகாம்பாளுக்கு அமைதி கூடவில்லையே? பூசையறையில் உட்கார்ந்து தியானத்தில் மூழ்கப் பார்க்கிறாள்:

கன்னகன மூடினால் கொண்டைக்காரி வந்து நிற்கிறாள்? அல்லது அந்தச் சுந்தரம் வந்து

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைண்ட் செய்யப்படுகிறது

அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





ஒரு மாத்திரையில் உள்ள அணுக்கூறு எவ்வளவுக் கெவ்வளவு பெரியதாக உள்ளதோ அது உங்கள் உடலில் கலப்பதற்கு அவ்வளவுக் கவ்வளவு கேரமாகிறது. நீங்கள் வலியிலிருந்து நிவாரணம் பெறவும் அவ்வளவுக்கவ்வளவு காக்க வேண்டியிருக்கிறது.

மைக்ரோஃபைண்ட் ஆக இருப்பதனுல் புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன —எனவே, அது மேலும் துரிதமாக இரண்டறக் கலந்து விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி


புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.

சாப்பிடும் அளவு:

வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானுல் மீண்டும் சாப்பிடவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர்சொல்படி

A-G-28-49TM



புதிய

மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்து விடுகிறது.

நீகோலஸ் தயாரிப்பு

நிற்கிறான். கண்களைத் திறந்து கொண்டு அந்தச் சிந்தனையை உதறிக் கொண்டு மீண்டும் கண்களை மூடினால், பவளக் கனியை எங்கிருந்தோ வந்த வரிப் பறவை கொத்திக் காலில் மிதிபடப் போடுவது போல் ஒரு காட்சித் தோற்றம். கனி மரத்தில் சிறுவர்கள் கல்லெறியாமல் இருக்கத்தானே காவற்காரனை நியமிக்கலாம்? வரிப் பறவைகளுக்கும், வால் குருவிகளுக்கும் காவல் போட முடியுமா ?

கவர்ச்சியற்ற கனியே கொள்ளை போகிறது. என்ன அலங்காரம் வேண்டிக் கிடக்கிறது? டீச்சரைப் பார்த்து அந்தக இரண்டுங்கெட்டான்களும் அலங்கரித்துக் கொள்ளக் கற்றுக் கொள்ளும். பிறகு செங்கற்சுவியலில் நின்று எல்லை மீறி வம்பு பேசவும் தானே துணிவும் வராதா? பள்ளித் தலைவருக்கு அவள் சேதி சொல்லிக் கண்டிப்புச் செய்யலாமா? அவர் யாரோ ஒரு வழுக்கைத் தலையர். இப்போது அவனுக்கு என்ன மதிப்பு? தொட்டிச் செடி இனம் வேரோடிப் பழுத்தபின் தொட்டியை விட்டு எடுத்து எறிவார்கள்.

மரக் கிளைகள் சரசரவென்று அசைந்தாடும் பரபரப்புக் கேட்கிறது. கூச்சல் — ஹோய், ஹோய் அடி, வெடி என்ற அதட்டொலிகள். தொப்தொப்பென்றும் சர் சர சரவென்றும் கிளைகள் ஒடிந்துவிழும் ஓசைகள், அவனது தியானத்தைக் கலைத்துப் பனாரென்று வெளியே தள்ளி விடுகின்றன. பசுங்கிளைகள் தழைய நின்ற மரத்துக்கு இப்படி ஒரு நாசமா? அவனுக்கு உடலெல்லாம் ஆட்டு அணுக்கள் கொப்புளிக்கின்றன.

''ஏ, கூர்க்காத் தடியா? கிளை கிளையாய் மரத்தைப் பிய்த்து எறியிறாங்க, உங்கிட்ட படிச்சுப் படிச்சுச் சொன்னேனே? எங்கே போய் ஒளிஞ்சிட்டான்? ஏ... ரூப்ஸிங் ? ரொட்டி பண்ணட்டும்னு டப்பாவோடே மாவைத் தூக்கிக் கொடுத்தேனே? ரூப்ஸிங்!''

ரூப்ஸிங்கின் குரல் கேட்கவில்லை. பள்ளிக் கூடத்துப் பக்கம் ஒரே அமளி. கொத்தோடு இலைகளும் பழங்களும் அங்கேதான் விழுகின்றன. இப்படியா ஓர் அக்கிரமம் நடக்கும் ? நாதியில்லாத சொத்தா இது ?

'' ரூப்சிங்....!''

அவனுக்குப் பதில் அரும்பு மீசை மன்மதன் தான் கீழேயிருந்து அவனைப் பார்க்கிறான்.

''குரங்கு, வீட்டுக்காரம்மா குரங்கு!''

''குரங்கா...? விட்டுத் தொலையுங்களேன் பின்னே?''

நாவுலர்ந்து போகிறது. ''குரங்கா இப்படி நாசம் செய்கிறது?'' பார்த்துக் கொண்டிருக்கையிலேயே கனி குலுங்கும் கிளைகள் ஒடிந்து விழுகின்றன.

''குரங்கு இப்படிப் பார்த்துப் பார்த்தா ஒடிக்கும்? இத்தினி நாளிலே, இப்படி வந்ததில்லே....?''

''ஹட்.... ஹட்..... வெட்.....'' என்று உள்ளூறச் சிரித்துக் கொண்டு சந்தரம் எழும்பிக் குதித்துக் கை ஓங்கி விரட்டுகிறான். பாவனை செய்கிறானா? விரட்டுகிறானா?

''ரூப்சிங் எங்கே ஒழிஞ்சு போனான் ?''



திருச்சியிலிருந்து சென்னை செல்லும் ரயிலில், மூன்றும் வகுப்புப் பெட்டி ஒன்றில் ஜன்னலருகே உட்கார்ந்த வண்ணம் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். என்னை அறியாமலே கண்ணயர்ந்து விட்டேன். விழிப்பு ஏற்பட்டவுடன் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன். ஏதோ ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்று கொண்டிருந்ததை உணர்ந்தேன். போதிய வெளிச்சம் இல்லாததால் என்ன ஸ்டேஷன் என்று தெரியவில்லை.

பிளாட்பாரத்தில் ஒரு பையன் கையில் ஒரு பக்கெட், கூஜா முதலிய பாத்திரங்களுடன், ''ச...ச'' என்று சன்னமான குரலில் கத்திக் கொண்டே நடந்தான். அவன் 'காப்பி' என்றானா அல்லது 'டீ' என்றானா என்று எனக்குப் புரியவில்லை.

என்னருகில் அவன் வந்தவுடன் நான் அவனைப் பார்த்து, ''என்ன தம்பி, காப்பிதானே?'' என்று கேட்டேன்.

அவன் உடனே, ''காப்பி....காப்பி....'' என்று கத்திக் கொண்டே எனக்கு ஒரு டம்ளரில் எடுத்துக் கொடுத்தான்.

மணம், குணம், ருசி இவை ஒன்றுமில்லாத அந்தத் திரவ பதார்த்தத்தை குடித்து முடித்துச் சில்லறையைக் கொடுத்தேன். அவன் நகர்ந்தான்.

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அந்தப் பையன் கடைசியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான். முன்போலவே, ''ச.....ச....'' என்று உரக்கக் கூவிக் கொண்டே வந்தான். எனக்கு நேரே உட்கார்ந்து தூங்கிவந்த ஒருத்தர் அப்பொழுது தான் விழித்துக் கொண்டார். அந்தப் பையன் எங்கள் பெட்டியினருகில் வந்து கொண்டிருந்தான். அவன் ஜன்னலுக்கு நேராக வந்தவுடன், அந்த ஆசாமி அவனிடம், ''என்ன தம்பி அது? டீயா?'' என்று கேட்டார்.

அவன் உடனே, ''டீ....டீ'' என்று கூவிக் கொண்டே ஒரு டம்ளரில் எனக்குக் கொடுத்தது போலவே அவரிடம் கொடுத்தான். அவர் அதை ஒரே மூச்சில் குடித்து முடித்துவிட்டார். அவரிடம் காசை வாங்கிக் கொண்டு மீண்டும் அந்தப் பையன் கையில் பாத்திரங்களுடன், 'ச.......ச...'' என்று சப்தமிட்டவண்ணம் நடந்து சென்றான் !

ஒரே பாத்திரத்திலிருந்து 'காப்பி', 'டீ' -- இரண்டையும் வேறு யாரால் தர முடியும் ?

-- என். நாராயணன்

□ □ □ □ □ □ □ □ □ □ □

''அவன்தான் மரத்தின் மேலே குரங்கை ஓட்டுறான், மா ! வீசி விரட்டுறானில்ல ? 'அனுமான் தீ'ன்னு கையைப் பிசைகிறான்'' என்று கூறி விட்டுக் கையில் ஒரு குச்சியை வைத்துக் கொண்டு, ''ஹோய், ஹட், வெட்....'' என்று தட்டுகிறான். பழங்கள் சொட் சொட்டென்று பள்ளிக்கூடத்துப் பக்கம் உதிருகின்றன.

''குரங்கு தின்னு தின்னட்டும். நீ ஏண்டா பள்ளிக்கூடத்துப் பக்கம் பழத்தைத் தட்டுறே?''

''அப்ப, குரங்கை ஓட்ட வேணுமா?''

''வேணும். நீ அவனை இறக்கு முதல்ல...''



"நாகரிகம் வேண்டியதுதான்; ஆனால் கண்மூடித்தனமான நாகரிகம் எனக்குக் கட்டோடு பிடிக்காது!"

"அது சரி; அதை என்னிடம் சொல்வதாக நினைத்துக் கொண்டு ஸ்கிரீனிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாயே!"

கொத்துக் கொத்தாய்த் தளிரும் பிஞ்சுமாய் ஒடிபட்டிருக்கும் நாசம்! குரங்கா? எப்போதோ வருஷத்துக்கு ஒருமுறை இரண்டு குரங்குகள் வருவதுண்டு. இப்போது, குரங்குகளா இப்படிப் பண்ணின? ரூப்சிங் வேர்க்க விறுவிறுக்க இறங்கி வருகிறான். ஊறுகாய்ப் பானையில் வற்றிச் சுருங்கிய வடுவைப் போல் முகரையைப் பார்!

"குரங்கா வந்தது?"

"ஹாஞ்ஜீ?"

"என்ன ஹாஞ்ஜீ? குரங்கு வந்தால் நீ எதற்கு அதை ஓட்டப் போனாய்? அது நாலு பழத்தைத் தின்று விட்டுப் போகிறது. இப்படி மரத்தையே பிரளயமாடிட்டீங்களே? இதானா காவல் காக்கும் லட்சணம்?"

"ஹாஞ்ஜீ!"

"மடையன்! என்ன இழவு ஹாஞ்ஜீ! மரம் உங்களை என்ன செய்தது? பாவிகள்! தீவாளி, அது இதுன்னு வா, கால் காசு தருகிறேனா பார்!"

வயிற்றெரிச்சல் தாளவில்லை. பவள மாலை அறுந்து தொங்கினாற்போல் கொல்லைக் கொடிகள் அறுந்து தொங்குகின்றன. துயரம் மண்டி மண்டி வருகிறது. அவளிடம் வந்து கேட்டால், புத்தியும் சொல்லிக் கூடைப் பழத்தையும் தந்திருப்பாளே? என்ன காலத்துக்கு இந்தப் புத்தி?

ஆனால் யோகாம்பாள் யார்? காலஞ்சென்ற கோமகவரன் ஒருவன் என்றோ அந்த வீட்டை அவளுக்கு உடைமையாக்கி வைத்தான். அன்றே அவளுக்கு ஊர் தந்த மதிப்புக் கிடையாது. இன்று புத்தி சொன்னால் எல்லாம் சேர்ந்து சிரிக்கும்; இவள் பக்கம் சேர, கிளியும் மைனாவும் வருமா?

அந்த ஒய்யாரிதான் இந்த நாசத்துக்குத் தூண்டுகோல் போட்டிருக்கிறாள். வரட்டும். நாளை மறுநாள் இந்தக் காதல் நடக்கட்டும்! தலையில் தண்ணீரைக் கொட்டுவாள்!

ஆத்திரம் தீர எதை எதையோ நினைந்து உள்ளூறப் பழி வாங்கிக் கொண்டிருக்கையில் படியில் அடிச் சத்தங்கள் கேட்கின்றன; வளைகள் குலுங்குகின்றன.

"அம்மா.....?"

"வீட்டில் யாருமில்லே....?"

அவள்தான். வெள்ளிமணிச் சிரிப்புக்குச் சொந்தமான குரல்.

"ஏன் யாருமில்லாமே? குத்துவிளக்கைபோல் நானிருக்கையிலே மரத்தைத்தான் சூறையாடிவீங்க? வீட்டிலே ஒண்ணும் நடக்காது!"

"மன்னிச்சிக்கணும்மா....!"

ஊஞ்சற் பலகையில் உறவு கொண்டாடிக் கொண்டு அவள் உட்காருகிறாள். மினு மினுக்கும் இரு வண்ணச் சேலை. இசைந்த சோளி. நெற்றியில் அரும்பரும்பாய் வியர்வை துளிர்த்திருக்கிறது. அகன்ற கண்களில் ஒரு சோர்வு. கையில் ஒரு பிளாஸ்டிக் கூடையில் 'களவாடிய' பத்துப் பழங்கள் தெரிகின்றன. நாலைந்து வாண்டுகள் அவளுக்குத் 'துணை' வந்திருக்கின்றன.

"என்னத்தை மன்னிக்கிறது? செய்யிறதை எல்லாம் செஞ்சிட்டு மன்னிச்சிக்கிறதுன்னு ஒரு வார்த்தையைச் சொல்லிட்டால் மரத்திலே இலையும் பூவும் பழமும் குலுங்கிடுமா? போனது திரும்பி வருமான்னு கேக்கறேன் திரும்பி வருமாடி?"

"நீங்க பெரியவங்க. தாய் மாதிரி. நீங்க மன்னிச்சா, தானே வரும் வருஷம் துளிர்த்துக் குலுங்கும்...."

நெற்றித் துளிகளைக் கைக்குட்டையால் ஒத்திக் கொள்கிறாள். முகத்தில் உடுத்திருக்கும் சேலையைப் போல் ஒரு மினுமினுப்பு.

யோகாம்பாளுக்கு நெஞ்சு எரிச்சலெல்லாம் தொண்டைக்கு வருமுன் ஆவியாய்ப் புகைந்து போனாற்போல் இருக்கிறது.

"அப்ப, கலியாணம் செய்துக்கிறதா முடிவாச்சா?" பட்டுச் சிவப்பு அலைபோல் முகத்தில் விசிறியோடுகிறது அவளுக்கு.

"போன தை மாசந்தான்.... ஆய்ப் போச்சுங்க.... நீங்க மன்னிச்சிக்கணும். தெரியாம கேட்டிட்டேன். எல்லாம் ஒடிச்சுப் போட்டுட்டாரு...? நீங்க ரொம்ப இளகின மனசோடு கிளிக்கும் அணிலுக்கும் விட்டு வச்சிருந்தீங்க.... நான் அரை டஜன் எடுத்திட்டுப் பிள்ளைகளுக்குக் கொடுத்திடவான்னு கேட்டுப் போக.... இல்லே விலை போட்டுத் தரவான்னு ஹெட்மாஸ்டர் கேட்டாரு...."

வானிலே வெடிக்கப் பொறி படர்ந்த திரி பூவாணமாய்ப் போகிறது. யோகாம்பாளுக்குச் சில விநாடிகள் எதுவும் புரியவில்லை.

"சரிதான், விலை குடுக்கிறீங்களா, விலை! விலையும் வேணாம், ஒண்ணும் வேணாம், போய்ச் சேரு!" என்று சீறிவிட்டு ஏமாற்றத்தை விழுங்கிக் கொள்கிறாள்.



பிரின் ஸ்
பிளேடு
சிறகின்
மென்மைபோல்
முகச்க்ஷவரம்
செய்யும்
பிளேடு!
THE SYMBOL OF QUALITY
Prince
BLUE RAZOR BLADES
BLUE PRINCE BLADE
MADE IN INDIA
ஃப்ளூரோ கார்பன் முனை கொண்ட
பிரின்ஸ்
ப்ளூ பிளேடுகளை உபயோகியுங்கள்

வரவுக்கு மேல் செலவா?


என்னதான் அகடவிகட சாமர்த்தியம் எல்லாம் செய்தாலும் மாதக் கடைசியில் பண நெருக்கடி ஏற்பட்டு விடுகிறதே என்று நடுத்தரக் குடும்பங்களில் அங்கலாய்ப்பது தெரிந்த விஷயந்தான். பொதுவாக, நடுத்தரக் குடும்பங்களில், குடும்பத் தலைவர் ஒருவர் மட்டுமே சம்பாதிப்பார். மாதம் முந்நூறு, நானூறு ரூபாய் வந்தாலும், பதினைந்து இருபது தேதிக்குள் அவ்வளவும் போன இடம் தெரியாமல் மறைந்து விடுகிறது! அடுத்த முதல் தேதி எப்போது வரும் என்று காலண்டரை வெறிக்கப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படத்தான் செய்கிறது. கல்லூரியில் படிக்கிற பையன்களும் பெண்களும் வீட்டில் இருந்தால் கேட்க வேண்டியதேயில்லை! இந்தப் பற்றுக்குறையை ஈடு செய்ய என்னதான் வழி? கடன் வாங்கலாமா? திருப்பிக் கொடுப்பது எப்படி? அடுத்த மாதமும் இதே நிலைமை தானே? நெருக்கடியைச் சமாளிக்க இரண்டே வழிகள்தாம் உள்ளன. ஒன்று, சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது. இரண்டாவது உபரி வருமானத்துக்கு வழி தேடுவது.

குடும்பத் தலைவன் அலுவலக நேரம் போக, ஒழிந்த வேளையில் சில மாணவர்களுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுத்து வருமானத்தைப் பெருக்க முயலலாம். ஆனால், சர்க்கார் ஊழியர்களாயிருந்தால் இதற்கு வழியில்லை. எனவே, குடும்ப வருமானம் பெருக வாழ்க்கைத் துணைவிதான் கைகொடுக்க வேண்டும். எப்படி?

வீட்டில் ஒரு தையல் இயந்திரம் இருப்பது காமதேனுவுக்கு ஒப்பானது. துணி விலையில் மூன்றில் ஒரு பங்கு, தையல் கூலி கொடுக்க வேண்டியிருக்கிறதல்லவா? தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் துணியைத் தையற்காரர்களிடம் கொடுத்தால், குறித்த காலத்தில் அவர்கள் தைத்துக் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுத்தாலும் தைத்த உடை சற்று 'ஏனோதானோ' என்றே இருக்கிறது. வீட்டிலேயே ஒரு மெஷின் இருந்தால் தையல் கூலி மிச்சம். தவிர, கிழிந்துபோன புடவைகளை ஜன்னல்களுக்குத் திரையாகத் தைத்துப் போடலாம். பழைய வேஷ்டிகளைத் தலையணை உறைகளாகப் புதிய உருவம் கொடுக்கலாம். கால்சராய் பாதத்தின் அடியில் மடித்துவிடப்பட்டிருக்கும் பகுதியில் மட்டும் பிசிர், பிசிறாகத் துணி நைந்து போய் விடும். மற்ற இடங்களில் கிழிசலே இராது. கறிகாய் வாங்கவோ, சிறுமி பள்ளிக்குச் செல்லப் புத்தகங்கள் எடுத்துச் செல்லவோ ஒரு துணிப்பை வாங்க வேண்டுமானால், ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் கொடுத்தால்தான் கிடைக்கும். சற்றே கிழிந்த ஒரு கால்சராய் இரண்டு மூன்று பைகள் தைக்க உதவுமே! தையற்காரர்கள் பழைய துணிகளைத் தைக்க அவ்வளவாக விரும்புவதில்லை.

ஒழிந்த நேரத்தில் அக்கம் பக்கத்து வீடுகளுக்கும் துணிமணிகள் தைத்துக் கொடுக்கலாம். இதில் ஏதோ கௌரவக் குறைவு இருப்பதாகப் பலர் நினைக்கலாம். பழகியுள்ள ஒரு கலை அல்லது தொழிலின் மூலம் வருவாய்க்கு வழி தேடுவதில் தவறென்ன? படித்த பெண்கள் வேலைக்குப் போவது பற்றிக்கூட இப்படித்தான் எண்ணியிருந்தோம் ஒரு காலத்தில்!

அதிக நபர்கள் உள்ள குடும்பங்களில் ஒரு தையல் மெஷின் இருந்தால், அந்த மெஷினின் கிரயத்தை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் தையல் கூலிக்காகச் செலவிடக்கூடிய தொகையில் ஈடு கட்டி விடலாம். அப்புறம், தையல் இயந்திரம் இலவசமாகக் கிடைத்தது போலத்தானே?



"ஆகட்டும் முதல் தேதி பார்க்கலாம் என்று நீங்கள் எதைப் பற்றிச் சொன்னீர்களோ, அவை அத்தனையும் வாங்கிண்டு வந்துட்டேன்."

குடும்பப் பிரச்னை

சங்கீதம் பயின்றவர்கள் தங்கள் இசையறிவைப் பிறருக்குப் போதிப்பதன் மூலம் குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம். வீணை, வயலின் முதலிய இசைக் கருவிகளிலும் பயிற்சி உண்டானால் வீட்டிலேயே (சொந்த வீடாக இருந்தால் நலம்!) இசை வகுப்புக்கள் நடத்தலாம். குடும்பப் பெண்கள் சங்கீதப் பயிற்சி அளித்தால் வயது வந்த பெண்கள்கூடத் தயக்கமின்றி இசை பயில வருவார்கள்.

வீட்டைச் சுற்றிலும் காலி இடம் இருந்தால் காய்கறி வகைகள், பூச்செடிகள் பயிரிடலாம். கீரை, பறங்கி, பூசணி இவை பயிரிடுவதில் அதிக சிரமமும் இல்லை. நல்ல கறிகாய்களாகப் புசிக்கலாம். மிச்சம் இருந்தால் அக்கம்பக்கத்து வீடுகளுக்கும் விற்பனை செய்யலாம்.


இது பிளாஸ்டிக் யுகம். பிளாஸ்டிக் வயர்கள் வாங்கிக் கூடைகள், பைகள் முதலியவை பின்னிக் கடைகளுக்குக் கொடுப்பது நல்ல லாபகரமான தொழில். பொழுதுபோக்காக இதை எளிதில் செய்யலாம்.

காந்தியடிகளின் உபதேசங்கள் எல்லாவற்றையுமே பின்பற்ற முடியாவிட்டாலும் நமக்குச் சாதகமான விஷயங்களையாவது பின்பற்றிப் பயனடையலாம் அல்

லவா? பெண்மணிகளும் சிறுவர் சிறுமியரும் வீட்டில் இருந்த படியே நூல் நூற்கப் பழகலாம். ஓரளவு தேர்ச்சி பெற்றதும் இது ஒரு லாபகரமான தொழிலாக அமையும். பஞ்சு நூலாக மாறுவதற்குப் பொறுமை ஒன்றுதான் மூலதனம்.

செலவில் சிக்கனம் செய்து, தேவையற்ற ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வதன் மூலமும் குடும்ப 'பட்ஜெட்'டைச் சீராக்கிக் கொள்ள முடியும். ஆடம்பரச் செலவுகள் வீண் செலவுகள் என்று சொல்லும்போது இவை என்னென்ன என்று வரையறுத்துக் கூறுவது கடினம். இத்தகைய செலவுகள் குடும்பத்துக்குக் குடும்பம் வேறுபடும். 'எங்கள் வீட்டில் சாப்பாட்டுக்கு ஆகும் செலவை விடக் காப்பிக்கு ஆகும் செலவுதான் அதிகம், சார்!' என்று நண்பர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இதைப் பெருமையோடு சொல்லிக் கொள்பவர்களும் உண்டு. வேதனையோடு புலம்புகிறவர்களும் உண்டு. காலைவேளைக் காப்பியுடன் நிறுத்திக் கொள்வது கடினமல்ல? மன உறுதிதான் தேவை. உடம்புக்கும் நல்லது. இது முடியாது போனால் ஒரு வேளை காப்பி, ஒரு வேளை தேநீர் என்று வைத்துக் கொள்ளலாம்.

புதிதாகத் திரைக்குவரும் சினிமாப் படங்களை 'ரிலீஸ்' ஆகும் முதல் தினம் முதல் ஆட்டத்தைப் பார்க்கா விட்டால் சில ரசிகர்களுக்கு மண்டை வெடித்துவிடும். இப்படி முதல் நாளே ஐந்தாறு நபர்கள் உள்ள தம் குடும்பத்துடன் ஒருவர், கூடுதலான கட்டணம் செலுத்திப் பார்ப்பதாயிருந்தால் (தலைவலி கிடக்கட்டும்) செலவு என்ன ஆகும்? அதே படத்தை, 'இன்னும் ஒரு வாரம் மட்டுமே'



"அடுத்த வீட்டில் வருவாய்க்காக வயலின் மிருதங்கம் சங்கீதப் பள்ளியே நடத்தறா...நாள் முழுதும் என்றால் வீட்டில் இருக்க முடியவில்லை, என்ன செய்வது?"

"நீயும் போய் அதில் சேர்ந்து விடு."

என்று அறிக்கை வந்த பிறகு பார்ப்பதாயிருந்தால் செலவு குறையுமல்லவா?

வீட்டில் ஓர் இஸ்திரிப் பெட்டி இருந்தால் எவ்வளவோ சௌகரியம். துணிகளை வீட்டிலேயே சலவை செய்து கொள்வது சுகாதார அடிப்படையிலும் நன்மை பயக்கும்; செலவும் மிச்சம்.

கடையில் கணக்கு வைத்துக் கொள்ளாமல் அவ்வப்போது பணம் கொடுத்துத்தான் வாங்குவது என்று வைத்துக் கொண்டால், மாதக் கடைசியில் பண நெருக்கடி ஏற்படுகிறபோது சில சாமான்களைக் குறைவாக வாங்குவோம்; அல்லது வாங்காமலேகூட இருந்து விடுவோம். முதல் தேதிதானே பணம் கொடுக்கப் போகிறோம் என்று அலட்சியமாகக் கணக்கு எழுதிவிட்டு வாங்கும் போது, தேவையற்ற சில சாமான்களைக்கூட வாங்கி விடுவது இயல்பு. தவிர, அதே பொருள் பக்கத்துக் கடையில் குறைந்த விலைக்குக் கிடைத்தாலும் அங்கு போய் வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

'நான் காப்பி சாப்பிடுகிறேனோ இல்லையோ—வேலைக்காரிக்கு அவசியம் காப்பி கொடுத்துத்தான் ஆகவேண்டும். வேலைக்கு வரும்போது அவள் போட்ட முதல் 'கண்டிஷன்' அது!' என்று குடும்பத் தலைவி அங்கலாய்க்கிறாள். கணவன் — மனைவி இருவர் மட்டுமே கொண்ட குடும்பத்தில் வேலைக்காரிக்கு அவசியமே இராது. 'கணவன் ஆபீசுக்குப் போய் விட்டால் சாயந்திரம் அவர் திரும்பி வரும் வரை 'கொட்டு கொட்டு' என்று ஒரு வேலையும் இல்லாமல் உட்கார்ந்திருக்கிறாள்!' என்று வர்ணிக்கப்படுகிற இளம் பெண்மணி வீட்டு வேலைக்கு ஒருத்தியை ஏற்பாடு செய்வானேன்? எதற்கு என்று கேட்டால், 'என் வீட்டுக்காரருக்கு ரூ. 400 சம்பளம். பக்கத்து வீட்டுப் பெண்மணியின் புருஷர் ரூ. 320தான் சம்பளம் வாங்குகிறார். அந்த அம்மாளே வீட்டு வேலைக்கு ஆள் போட்டுக் கொண்டிருக்கிற போது, நான் வேலைக்காரி வைத்துக் கொள்ளா விட்



குடுகுடுப்பைக்காரன்: காலம் மாறிப் போச்சு! கிழிசத் துணி கேட்டாக்கா, உங்கிட்டே இருந்தால் என்கிட்டே போடு நான் தர்க்கத் தரேன் என்று சொல்லி ஒரு தையல் மிஷினைக் கொண்டுவந்துடறாங்க.



"என்ன சார் பண்றது? எங்கள் வீட்டில் யாரும் காப்பி குடிப்பதில்லே. வீட்டு வேலைக்காரிக்காகத் தினமும் காப்பி வாங்கிண்டு போறேன்."

டால் நன்றாயிருக்குமா?' என்று பதில் கேள்வி பிறக்கிறது. போலி கௌரவத்துக்கு ஏன் இடம் அளிக்க வேண்டும்?

தவணை முறையில் கட்டில், பீரோ, ரேடியோ முதலிய பொருள்கள் வாங்குவது சுலபமாக இருக்கிறது. ஆனால், தவணை முறையில் வாங்கும் பொருளுக்கு அதன் விலைக்கேற்ப வட்டி செலுத்த வேண்டியுள்ளது. இதற்குப் பதில் ரூ. 200 மதிப்புள்ள ஒரு பொருளை வாங்க வேண்டுமாயின், மாதம் ரூ. 10 அல்லது ரூ. 20 வீதம் பாங்கில் கட்டி முழுத் தொகையும் சேர்ந்த பிறகு வாங்குவதன் மூலம், பாங்கில் கட்டின தொகைக்கு வட்டியும் கிடைக்கும். பல இடங்களில் விசாரித்து விலை சகாயமாக உள்ள கடையில் ரொக்கம் கொடுத்து வாங்கலாம். கொஞ்ச காலத்துக்குக் கட்டிலோ ரேடியோவோ இல்லாமல் பல்லைக் கடித்துக் கொண்டு காலத்தை ஓட்டினால் லாபகரமான முறையில் அவற்றைப் பெற முடியுமே.

அப்பளம், வடகம் இவைகளின் செய்முறை அறிந்தவர்கள், கடைகளில் வாங்குவதற்குப் பதில் வீட்டிலேயே தயாரிப்பது சிறந்தது; பணமும் மிச்சம். கரிசலாங்கண்ணி, அகத்திக் கீரைத் தைலங்களையும் வீட்டில் சுலபமாகச் செய்து கொள்ளலாம். தேவைக்கேற்ப வாசனை சேர்த்துக் கூந்தல் தைலங்களை வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளலாம்.

'இதெல்லாம் என்ன? தேவரகசியமா? யாருக்குத் தெரியாது இந்த விஷயங்களெல்லாம்?' என்று கேட்கிறீர்களா?

தெரிந்த காரியங்களைக் கடைப்பிடிக்கத் தவறுவதனாலேதான் பிரச்னைகள் எல்லாமே எழுகின்றன. எங்கே மனத்தில் கையை வைத்து யோசித்துப் பாருங்கள். மேலே விவரித்துள்ள, உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயங்களில் எவற்றையெல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?

— 'பாணன்'

படித்துப் பாருங்கள்!

தியாகராஜ கானாம்ருதம்-முதல் ரத்னம்

சங்கீத ஜகத்குரு தியாகய்யரின் கீர்த்தனங்கள் உணர்ச்சிப் பெருக்கு நிறைந்தவை. அதனால் சங்கீத அம்சத்தில் மட்டுமின்றிச் சாகித்திய அம்சத்திலும் தனிச் சிறப்புப் பொருந்தியவை. அவற்றின் பொருளைக் கவனியாமல் வெறும் ஸ்வரக் கோவைகளாக மட்டும் கவனிப்பது மூலஸ்தான மூர்த்தியைத் தரிசியாமல் வெளித் தூண்களில் உள்ள சிற்பங்களை மட்டும் பார்ப்பது போலாகும் என்று ராஜாஜி கூறுவது வழக்கம். மூலமூர்த்தியைத் தரிசிக்க வழி செய்கிறது இந்த நூல்.

இதில் தியாகப் பிரம்மத்தின் 141 கீர்த்தனங்களுக்குத் தமிழில் பதவுரையும், கருத்துரையும் தரப்பட்டுள்ளன. உரையாசிரியருக்குத் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் இருப்பதோடு, இசையில் ஈடுபாடும் தியாகய்யரிடம் பக்தியும் சேர்ந்திருப்பதால் நூல் நல்ல முறையில் உருவாகியுள்ளது. அய்யர்வாளின் வரலாறும் தரப்பட்டிருப்பது நூற்பயனை அதிகமாக்குகிறது. சங்கீத வித்துவான்களும், ரசிகர்களும் அவசியம் கருத்தூன்றிப் படிக்க வேண்டிய நூல்.

முதல் பகுதியாகிய இந்தப் புத்தகம் 'முதல் ரத்னம்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற ரத்தினங்களும் விரைவிலேயே வெளியாகி இசையொளியும் பக்தியொளியும் வீசுமென நம்புகிறோம். கர்னாடக இசை பயில்பவர்களுக்குப் பயனுடையதாகவும் இருக்கும்.

உரையாசிரியர்: எஸ். கே. சீதாதேவி செல்லம்மையார்; பதிப்பாசிரியர்: மயிலை ரசிக ரஞ்சனி சபை பாடசாலைத் தலைவர் ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர்; கிடைக்குமிடம்: கானாம்ருதப் பிரசுரம், 29, வி. வி. கார்டன் முதல் தெரு, சென்னை — 28; விலை ரூ. 5.

பிளேட்டோவின் கடிதங்கள்

உலக சரித்திரம் கண்ட தத்துவஞானிகளில் தலைசிறந்தவர்கள் என்று ஒருசிலரை விரல்விட்டு எண்ணினோமாயின் அவர்களில் கிரேக்கப் பேரறிஞன் பிளேட்டோ நிச்சயம் இடம் பெறுவான். எந்த நாடும் ஒரு தனி மனிதனால் ஆளப்படாமல், சட்டங்களால் ஆளப்பட வேண்டும் என்று சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன்பே சித்தாந்தம் வகுத்தவன் பிளேட்டோ. ஆளும் பொறுப்பை ஞானிகளே ஏற்க வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறியவன் அவன். 'சம்வாதங்கள்' எனப் புகழ் பெற்ற நூல்களில் அவனது கருத்துக்களையும், அவனது குருநாதன் ஸாக்ரடிஸின் கருத்துக்களையும் அறிகிறோம். பிளேட்டோவின் கடிதங்களிலும் அவனது சித்தாந்தங்கள் விரவி இழையோடுகின்றன. எனினும், இந்நூல் முக்கியமாகப் பிளேட்டோ என்ற மனிதனை நமக்குப் பல கோணங்களில் அறிமுகம் செய்வதாலேயே சிறப்புப் பெறுகிறது. நாடாளும் அதிபனிடமும் ஒரு தத்துவஞானி வெளிப்படையாக முரண்பட்டு அதனை எடுத்தியம்பக்கூடும் என்பதை முக்கியமாக இந்த நூலில் கண்டு வியக்கிறோம். பிளேட்டோவின் நட்புப் பாங்கு எவ்வளவு உயர்ந்தது என்பதைக் கண்டு மகிழ்கிறோம். நடுநடுவே அமரமான உண்மைகள் எளிய முறையில் விளக்கம் பெறுவதைக் கண்டு அறிவு விழிப்புப் பெறுகிறோம்.

தமிழாக்கம் செய்தவர் இந்தத் துறையில் விசேஷத் தேர்ச்சி பெற்ற அநுபவஸ்தராகையால் நூலைத் தங்கு தடையின்றிப் படித்துப் பயன்பெற முடிகிறது.

மொழிபெயர்ப்பாளர்: வெ. சாமிநாத சர்மா; வெளியீடு: பிரபஞ்சஜோதி பிரசுராலயம், புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம்; விலை ரூ. 2.50.


விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்
குழந்தைக்காக
தயாரிப்பு: D. ராமாநாயுடு
டைரக்ஷன்: P. மாதவன் B.A.

அத்தியாயம் 36

' மோகனம் முத்துரங்கம்!'

"சிறப்போடு
பூசனைசெல்
லாது வானம்
வறக்குமேல்
வானோர்க்கும்
ஈண்டு".

ஏ. காவிரியே! நீ எங்களைக் காப்பாற்றுகின்றாய். எழுதாமறையை எங்கள் அனுட்டானங்கள் மூலம் காப்பாற்றுகின்றாய். நாங்கள் உனக்கும் காவல்காரர்களாக இருப்போம். அதிகாலையில் உன்னிடம் வந்து நீராடி, மேனி எங்கும் திருநீராடி, மறைபாடி, ஆதவனைக் காணுமல் கோணுமல் கண்டு அர்க்கியம் கொடுத்து, காலை, மாலை மதியம் ஆகிய மூன்று வேளைகளிலும் ஒவ்வொரு யாமம் உன் கரையிலிருந்து காயத்ரியை ஜபித்து வருவோம்'' எனக் கூறிக் காவிரியை வணங்கினர்.



பொன்னிவனத்துப் பூங்குயில்

கொத்தமங்கலம் சுப்பு

வண்டிகளில்தான் எத்தனை வகைகள்! மொட்டை வண்டி, கூண்டு வண்டி, பெட்டி வண்டி, பார வண்டி, அரை வண்டி என்று ஏராளமான வண்டிகள் காவிரிக் கரை நெடுக நிறுத்தப் பட்டிருந்தன. கூடுகொம்பன், வீணைக் கொம்பன், மட்டை விரி கொம்பன், மோழை, செவலை, பில்லை, காரி, தருமயிலை முதலான காளைகள் இரட்டையாகப் பிறந்தவைகளைப் போல் ஒரே மாதிரியான கொம்பு, குளம்பு, சுழி, நிறம், வால் கண் முதலிய அங்க அமைப்புக்கள் ஒன்றுபோல ஜோடி சேர்க்கப்பட்



டிருந்ததைப் பார்க்கும்போது, 'இறைவன் ஆவினத்தை மாத்திரம் ஜோடி ஜோடியாகப் படைக்கின்றானே' என்று தோன்றியது. ஆடவர்களையும், அணங்குகளையும் நாம் ஏன் இப்படி ஜோடி சேர்ப்பதில்லை என்றும்ஐயம்எழுந்தது. கடுக்கன்ஜோடியும் காளை ஜோடியும் சேர்ந்துவிடும். கணவன் மனைவியும் அப்படிச் சேர்ந்தால் பூவுலகம் பொன்னுலகாகிவிடும் என்ற கவியின் வாக்கு நினைவுக்கு வந்தது. அந்த வண்டிகளில் குறுநில மன்னர்களும் பெரும் படைத் தலைவர்களும், வைரம் பாய்ந்த உடலும், மலர் போல் உள்ளமும் படைத்த பாப்பா நாட்டுத் தேவர், சிங்கவரம் கோபாலன், உக்கடைத் தேவர், பூண்டியார். மதுக்கூரார், அத்தி வேட்டியார் முதலான பிரமுகர்கள் அரசரது விசேட அழைப்பின் பேரில் வருகை தந்திருந்தார்கள். திருக்காட்டுப்பள்ளி தீயாடியப்பருக்குக் காவிரி நீரால் திருமஞ்சனமாட்டி. அதன் பின் காவிரிக் கரையில் உள்ள அத்தனை சிவாலயங்களுக்கும் திருவிண்ணகரங்களுக்கும் முறைப்படி பூசை நைவேத்தியங்கள் நடத்திய பின்னர் அத்தனை கோயில்களிலும் தேவார, திருவாய்மொழிகள் ஓதப்பட்டன. காவிரிக் கரை எங்கும் கோட்டை அடுப்புக்கள் கட்டப்பட்டு,

நாட்டார்கள் அத்தனை பேருக்கும் அறுசுவை உண்டி ஆயிரம் கும்பாபிஷேகங்களில்நடப்பது போலச் சமைக்கப்பட்டன. கோவிலடி, சுக்காம்பார், திருக்காட்டுப்பள்ளி முதலான ஊர்களில் உள்ள பண்டைச் சோழ நாட்டு அரசர்களாகிய முத்தரையர்கள்தங்கள் விருந்தோம்பலை உலகுக்குத் தெரிவித்தார்கள். ஒவ்வொரு திருநயத்தில் திருவிளையாடலும், விஷ்ணும் பேட்டையில் வேத பாராயணமும், வரகூரில் கிருஷ்ணலீலா தரங்கிணியும், மெலட்டூரில் பாகவத மேளாவும் சூலமங்கலத்தில் தெலுங்கில் பரதமும் நடைபெற்றன.

இரவில் அழகிய ஓடங்

கள் பலவற்றைச் சேர்த்துத் தெப்பம் போலக் கட்டி அதன் மேல் பட்டு விதானங்களும், பவளத் தூணிகளும், திரைச் சீலைகளும் கட்டித் தேர்போல் அலங்கரிக்கப்பட்டு, நான்கு தெப்பங்கள் நின்றன. அவை ஒவ்வொன்றிலும் தேங்காய் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

கரையோரம் நெடுக நடைபெறும் கோலாகலங்களை மன்னர் துக்கோஜியும், அவரது குடும்பத்தினரும் தெப்பத்தின் மீது அமர்ந்து சென்று பார்த்து வந்தனர். ஒவ்வொரு தெப்பமும் வடக் கயிறுகளால் ஆற்று வெள்ளத்தை எதிர்த்து இழுக்கப்பட்டு வந்தன. அதில் ஒரு தெப்பத்தில் யுவராஜா பாவா சாகிப் தமது நவக்கிரகங்களுடன் அமர்ந்திருந்தார். அவருக்கு அவர் மனைவிமார்களின் சண்டையைத் தீர்த்து விடவே நேரம் சரியாக இருந்ததால் சம்சார சாகரத்தில் இது ஓர் ஓடம் என்று சும்மா இருந்தார்.

''ஏன் இப்படி மௌனமாக இருக்கிறீர்கள்?'' என்றாள் சுஜனு பாய். தன் பேச்சுக்களுக்கிடையில் ''ஆறு சளசளவென்று சத்தம் போடுகிறது. அதில் நான் பேசினால் எங்கே கேட்கப் போகிறது?'' என்றார், அவர் பட்டுக் கொள்ளாமல்.

''ஆறு? ஒன்பதா? அப்பவே இது தெரிந்திருக்கவேண்டும்.''

''எப்பவே?''

''கலியாணம் செய்து கொள்வதற்கு முன்னால்.''

''அதற்காக என்ன? இப்போ இந்தக் கஷ்டத்தை அனுபவிக்க இன்னொரு ஜன்மம் எடுக்க வேண்டாமல்லவா?...''

''நன்றாயிருக்கிறது உங்கள் பேச்சு! நாங்களென்ன உங்களைக் கொடுமையா செய்கிறோம்?''

''சே, சே... இல்லவே இல்லை. கிரகங்கள் ஆட்சி நடத்தும். மனிதன் அகப்பட்டுக் கொண்டு விழிப்பான். அவ்வளவுதான்.''

''நாங்களா அகப்படச் சொன்னோம்? உங்கள் திமிர், ஒன்று போதாது என்று ஒன்பதைக் கட்டிக் கொண்டீர்கள். 'கண்ணே, மூக்கே' என்று கொஞ்சிய காலத்தில் அது தெரியவில்லை. கலட்சனு! இவங்க என்ன சொல்றாங்க பாரு'' என்று தன் ஓரகத்தியைப் பரிவோடு கூப்பிட்டாள் சுஜனு பாய். ஆம். அவர்களுக்குள் ஒரு நல்ல சுபாவம். கணவனுடன் போரிடும் காலங்களில் அந்த ஒன்பது எதிர் நாடுகளும் ஒன்றாகிவிடும். ஒரு மழை பெய்தது. உடனே நின்றது. ஒரு பெருமூச்சு விட்டார் யுவராஜா. அடுத்த மழைக்கு ஆயத்தம் செய்தாள் சுஜனு பாய்: ஓர் இடியைத் தூக்கி எறிந்தாள்.

''மகாராஜா! ஏன் இன்றைக்கு மட்டும் தனி ஓடத்தில் போகிறார்?''

''ஏதோ அரசாங்க விஷயமாக அதிகாரிகளுடன் ஆலோசிப்பதற்காக.''

''அந்த இடத்தில் உங்கள் தம்பி பிரதாப சிம்மருக்கு என்ன வேலை?''

''எனக்குத் தெரியாது.''

''உங்களுக்கு எதுதான் தெரியும்? உலகமே தெரியாது. எங்க ஒன்பது பேரையும் சுத்திச்சுத்தி வரத்தான் தெரியும்!''

''அதாவது தெரிகிறது என்று ஒப்புக் கொள்கிறாயே!''

''இதற்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்? உங்கள் குடும்பத்தின் சொத்தே அதுதானே? இந்தாங்க.. நான் சொல்கிறதைக் கேளுங்க. உங்க அப்பாவோடு உங்க தம்பியைத் தனியா விடாதீங்க.''

''ஏன்? அவரைத் தூக்கி ஆற்றிலே எறிந்து விடுவானா?''

''அவரை எறிந்தால் கவலை இல்லை. உங்கள் தலையில் இருக்கிற மகுடத்தைத் தூக்கித் தண்ணீரில் போட்டு விடுவான். மகாதேவப் பட்டணம் படை முழுக்கத் திருக்காட்டுப்பள்ளிக்கு வந்திருக்கு. இது என்ன சூதோ தெரியவில்லை. திருக்காட்டுப்பள்ளியை உங்கள் தம்பி தலையிலே கட்டிவிடுவார் என்று தோன்றுகிறது.''

''சே, ஒருகாலும் அப்படி இருக்காது.''

''ஏன் இருக்காது? உங்கள் பெரியப்பாவுக்குச் சாக்கோட்டையையும், உங்கள் அப்பாவுக்கு மகாதேவப் பட்டணத்தையும் ஷாஜி மகாராஜா பிரித்துக்கொடுக்கவில்லையா? நீங்கள் பெண் பிள்ளைகளைச் சுற்றிக் கொண்டேயிருக்கிறீர்கள். அங்கே பெரிய மோசடி நடக்கட்டும்'' என்று அவர் முகத்தில் இலேசாகத்தான் இடித்தாள் சுஜனு பாயி. நல்ல காலம்! அப்போது 'படார்' 'படார்' என்று சத்தங்கள் கேட்கவே, கரையோரத்தில் நடந்து கொண்டிருந்த வாண வேடிக்கையைப் பார்ப்பதற்காக அவரை விட்டு விட்டுப் போய்விட்டாள் சுஜனுபாய். வாணக்காரனை வாயார வாழ்த்தினார் பாவா சாகிப்.

''இதோ பார். படத்தைக் கையில் எடுத்தவுடன் வெடி முழங்குகிறது. நல்ல சகுனம்'' என்றார் முதல் தெப்பத்தில் இருந்த மன்னர். அவருக்கு முன் ஒரு வேலையாள் பிரதாப சிம்மரின் திருவுருவப் படத்தைக் கைகளில் வைத்துக்கொண்டு அவர் முன் காட்டியபடி நின்றான். அவர் அருகில் அன்ன



ர்ணா தேவி கொன்றை மரம் போல் குழம்பும் களிப்புடன் அந்தச் சித்திரத்தை ஒரு முறை பார்ப்பதும், மன்னரை ஒரு முறை பார்ப்பதுமாக நின்றாள்.

''உன் மகன் ஓவியம் எப்படி இருக்கிறது?'' என்று கேலியாகக் கேட்டபடி தம் ஆசை மனைவியைப் பார்த்தார்.

''என்னையா கேட்க வேண்டும்? உங்களுக்கே தெரியாதா? இருபத்திரண்டு வயதில் உங்களை மாதிரி இப்போது பிள்ளை இருக்கிறான்'' என்று சொல்லும் போது அன்னபூர்ணா தேவியின் கண்ணங்கள் குழிந்தன.

''அப்படியானால் திருச்சி அரசிளங்குமரி ஆசைப்படுவாள் என்று சொல்.''

''அது எனக்கு எப்படித் தெரியும்?'' என்றாள் அன்னபூர்ணா தேவி.

''உன்னைக் கேட்கவில்லை. அன்னபூர்ணாவைக் கேட்கிறேன். அவள் என் சித்திரத்தைப் பார்த்து மயங்கித்தானே கத்திக்கு மாலையிட்டாள்?'' என்று சொல்லி மன்னர் சிரித்தார்.

''இந்த அரசர்களுக்கே ஆனந்தம் வந்தால் பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்பது கூடத் தெரிவதில்லை!''

''பெண்டாட்டியுடன் பேச நேரம் இருந்தால்தானே?''

''உங்கள் பிள்ளையைக் கேளுங்கள் என்று சொன்னேன்.''

''அவனை என்ன கேட்பது? நான் எதைச் சொன்னாலும் சரி என்பான் பிரதாபன். என்ன பிரதாபா?''-என்று மைந்தரின் பக்கம் திரும்பினார் மன்னர்.

''சரி'' என்றான் பிரதாப சிம்மன்.

''எது சரி?''

''சரி.''

''படத்தைத் திருச்சிக்கு அனுப்பலாம் அல்லவா?''

''சரி.''

''மீனாட்சி தேவியாரிடமிருந்து அரசிளங்குமரியின் சித்திரத்தை இங்கு வரைவழைக்கலாம் அல்லவா?''

''ரொம்பச் சரி'' என்று சிறிது புன்னகை செய்தார் பிரதாப சிம்மர்.

''என்ன, எதற்கெடுத்தாலும் சரி என்கிறாய்? திருமணத்தை நிச்சயிக்கலாம் அல்லவா?''

''படத்துக்கும் படத்துக்ும்தானே கலியாணம்?'' என்று மிக அடக்கத்துடன் கேட்டார் இளவரசர்.

''சபாஷ் மகனே! உன் பிள்ளை என்ன கேட்கிறான் பார்!''

''ஏன் அப்படிக்கூறுகிறாய் பிரதாபா?''

''இல்லை அன்னையே. மகாராஜாவின் உத்தரவுக்கு நான் கட்டுப்படலாம். அப்பாவின் உத்தரவுக்குப் பிள்ளை அடங்கி



''உங்களைத் தேடிட்டு உங்க கணவர் வாசலில் வந்து நிற்கிறார்.''

''வேறு வேலை என்ன? உப்பில்லே, புளி இல்லே, மிளகாய் இல்லே என்று கேட்பார்! பத்து ரூபா கைமாத்து தாயேன். முதல் தேதி உனக்குத் திருப்பிக் கொடுத்துடறேன்!''

நடக்கலாம். இந்தப் படத்தை நீ ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்று அரசிளங்குமரிக்கு அப்பா அவர்கள் கட்டளையிட முடியுமா?''

''உனக்கென்ன மகனே! அழகில் குறைவா? அருங் கலையில் குறைவா? உன்னைத் திருமணம் செய்து கொள்ள அரசிளங் குமரிக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?'' என்றாள் அன்னை அன்போடு.

''என் அம்மாவுக்கு அவ்வளவும் தெரிகிறது. அவளுக்குத் தெரியுமா? என் சித்திரம் நன்றாக இல்லை என்று சொல்லிவிட்டால்?''

''படத்தைக் குறை கூறினால் மகுடத்தைக் காப்பாற்றிய அதே படை இன்றும் என்னிடம் இருக்கிறது'' என்று கோபத்துடன் மொழிந்தார் மன்னர். அவர் முகம் சிவந்தது.

பிரதாப சிம்மரே சிறிது நடுங்கினார்.

''அரசே! என்னை மன்னியுங்கள். உங்கள் பிள்ளையின் சித்திரம் சரியில்லை என்று அவள் கூறுவாளோ என்று எண்ணியதே உங்களுக்கு இத்தனை கோபம் வருகிறதே. நாளை நான் அரசிளங்குமரியின் படத்தைப் பார்த்து அவள் அழகாக இல்லை என்று கூறினால் உங்களுக்கு வந்த கோபம் மகாராணி மீனாட்சி தேவிக்கும் வரலாமல்லவா?''

இதைக் கேட்ட அரசர் சற்று நேரம் இடியேறு கொண்ட நாகம் போல்

திகைத்தார். "மகனே! பாசத்தால் மோசம் போக இருந்தேன். நீ சொல்வது உண்மை. நான் எதை எதையோ மனத்தில் எண்ணி இந்த உறவுக்கு வழி கோலுகின்றேன். உறவு பிடிக்கப் போய், அது பகையாக முடியவும் ஏது வுண்டு என்று நீ கூறுகின்றாய்."

இடம் கிடைத்தால் பிரதாபசிம்மர் விடுவாரா?

"அந்த மகாராணியைப் பற்றிப் பல வதந்திகள் உலவுகின்றன. அவள் வயிற்றில் பிறந்த பெண் எப்படி இருக்குமோ...?"

"வதந்திகளுக்கா பஞ்சம் நம் நாட்டில்? அரசைக் குறை கூறினால் அரசாங்கத்தினர் தண்டிப்பார்கள்."

"ஆதலால் பெண் எப்படி என்று இரகசியமாகப் பேசி அதில் இன்பம் அடைவதில் நம் மக்கள் ஒருவருக்கும் குறைந்தவர்கள் இல்லை."

"இதற்காக அவள் மகளை நாம்..."

"அது அவள் மகளல்ல. வளர்ப்புப் பெண்!"

"என்ன? உண்மையாகவா?"

"ஆம். அரசிக்குப் பிள்ளை இல்லை. அதனால் ஏதோ ஒரு பெண்ணைத் தம் புதல்வியாக்கி வளர்த்து வருகிறார்."

"அப்படியானால் அது யாருடைய பெண்?"

"அங்கே ஒரு மகாராஷ்டிரர் விஜயரங்க சொக்கநாத நாயக்கருடன் வேலை பார்த்து வந்தார். அவர் இசை, கணிதம், சோதிடம் எல்லாவற்றிலும் வல்லவர். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள்.

"ஒரு நாள் புதுக்கோட்டை தொண்டைமான் அரசர் அவர்கள் அழைப்பின் பேரில் மகாராஜா மழையூர் பெருமானைத் தரிசனம் செய்ய வந்திருந்தார். தரிசனம் முடிந்ததும் தொண்டைமான் ஆதனக் கோட்டைக் காட்டில் ஒரு வேட்டைக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

"அரசரும் அரசியாரும் பரண் மேல் அமர்ந்து வேட்டையை ரசித்துக் கொண்டிருக்கும் போது அதில் ஒரு குழந்தை விளையாட்டாகப் பரணில் இருந்து இறங்கிவிட்டது. அப்போது ஒரு வேடுவரின் அம்பு குறி தவறிக் குழந்தையின் காதில் பாய்ந்துவிடவே, அப்போது வேட்டையாடும் கூட்டத்தோடு கூட்டமாக இருந்த நமது ஒற்றர்களில் ஒருவன் குழந்தைக்கு இரண சிகிச்சை செய்து காப்பாற்றினான். கடைசியில் அவன் நமது ஒற்றர் என்று தெரிந்த பின் துன்புறுத்தப்பட்டதாகவும், அதிலே அவன் இறந்து போனதாகவும் எனக்கு நினைவிருக்கிறது.

"இதற்குப் பின் குழந்தைக்கு என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. எஞ்சிய ஒரு குழந்தையை மட்டும் எடுத்து ராணி வளர்த்து வருகிறார்கள். அக் குழந்தையைத்தான் நமது மராட்டிய குலத்தில் கொடுக்க அவர்கள் விரும்புவார்கள் என்று நம்புகிறேன். அவள் ஆடல், பாடலில் வல்லவள். நாகரிக முறையில் வளர்க்கப்பட்டவள்.

"தந்தையே! தங்களுக்குத் தெரியாததை நான் சொல்லப் போவதில்லை. விவாகத்துக்குத் தினப் பொருத்தம், கணப் பொருத்தம், பணப் பொருத்தம் என்று பதினொரு விதப் பொருத்தங்களை நம் பெரியவர்கள் பார்க்கிறார்கள். மனப் பொருத்தம் ஒன்றையாவது திருமணம் செய்துகொள்பவர்களுக்கு விட்டுவிடலாமல்லவா ?"

அரசர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கும் அளவுக்குச் சிரித்தார். "தேவி! உன் அருமை மகன் இப்போதே அரசிளங் குமரியைப் பார்க்கத் துடிக்கிறான். தெப்பத்தைத் திருப்பு. வா. இப்போதே திருச்சிக்குச் செல்வோம்" என்றார் சிரித்துக்கொண்டே.

"அப்பா! தெப்பத்தைத்திருப்பலாம். சித்தத்தைத் திருப்ப முடியாது. என்னையும் அழைத்துக் கொண்டு தாங்கள் அங்கு சென்று அதன் பிறகு நான் பெண் பிடிக்கவில்லை என்று கூறினால் வம்பாகி விடும். இவையெல்லாம் இரகசியமாகப் பார்க்க வேண்டிய காரியங்கள்."

"திருமணத்தில் கூட இரகசியமா?"

"சாதாரண மக்களிடையே தேவையில்லை. ஆனால் அரண்மனையில் அந்தப்புர இரகசியத்தின் அஸ்திவாரமே இது தான்."

"உன் அபிப்பிராயத்தை எனக்கு எப்பொழுது தெரிவிப்பாய்?"

"அரசர் உத்தரவு கொடுத்தால் ஒரே மாதத்தில்" என்றார் இளவரசர்.

தந்தையும் தாயும் அருமை மைந்தனின் முகத்தையே பார்த்தனர்.

ஊருக்கு நடுவே மலை இருக்கும் ஊர்களில் இரவில் கூட வெப்பம் அதிகமாக இருக்கும். ஆனால் திருச்சிராப்பள்ளி இதற்கு விதிவிலக்கு. மாலை ஆக ஆகக் காவிரிக் காற்று நடுக்கும். இரவு இரண்டாம் சாமத்துக்குமேல் குளிரே எடுத்து விடும். அதோடு அங்கு தோப்புகள் அக்காலத்தில் அதிகம். அந்தத் தோப்புக்களில் ஒன்றில்தான் தென்னூரில் உள்ள வசந்த மாளிகை அமைந்திருந்தது. அதையொட்டிய மங்கம்மா சத்திரம்



''என் மனைவியை உங்கள் மனைவியிடம் அனுப்புகிறேன். பக்கத்துப் போர்ஷன்காரர்களிடம் ஓசி; இரவல்; கடன் வாங்குகிற வித்தையைக் கற்றுத் தரச் சொல்கிறீர்களா?''

ஒன்றில் பெங்களூரில் இருந்து மோகனம் முத்துரங்கம் என்ற ஒரு மகாவித்வான் வந்து தங்கியிருந்தார். அவரே ராஜாவைப் போல் இருந்தாலும் ராஜ போட்டிக்காக வந்திருப்பதாகக் கூறினர்.

அவர் காதுகளில் உள்ள வைரக் கடுக்கன்களே பல ஆயிரம் பெறும். நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டைச் சுற்றிலும் முத்து முத்தாய் வேர்த்திருப்பதே அழகாக இருக்கும். கோட்டைத் துளிர் வெற்றிலையும் சிவலும் அவருக்காகவே இறைவன் படைத்தானே என்று தோன்றும். போட்டுக் குதப்பிக் கொண்டே இருந்தார். வெள்ளிக் குவளையில் தண்ணீர் எடுத்து வாய் கொப்புளிக்க வருவதே அழகாக இருந்தது என்றால் அவர் வாய் பாடி விட்டால் கேட்க எப்படி இருக்கும்?

அதிகாலையில் அவர் எழுந்தவுடன் வசந்த மாளிகையில் உள்ள கற்கட்டுத் திருக்குளத்துக்கு நீராட வந்துவிட்டால் பலர் அங்கேயே பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவரது இளந்தாடி, அவர் திருப்பதிக்குச் செல்கிறார் என்பதை எடுத்துக் காட்டியது. இசைக் கலையின் பெருமையை எடுத்துக் காட்டியது இரட்டைத் தம்பூர் முழக்கம். அவர் காலையில் பாடும்போது இளவெய்யில் கூட அதிக நேரம் நின்று கேட்கும். ஆதலால் பலர் அந்த விடுதியின் வாசல் முழுதும் நின்று கொண்டே இருப்பார்கள். அவரோடு கூடவே பல சமையற்காரர்கள், நான்கு குதிரைகள், பக்க வாத்தியக்காரர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். அந்தக் காலத்தில் சங்கீத வித்வான்களில் பலர் அரசர்களிடமிருந்து பரிமா, பல்லக்கு மரியாதை முதலியவைகளைப் பெற்றதுண்டு.

அவர் எங்கேயோ ஒரு சமஸ்தானத்தில் மோகன ராகத்தைப் பாடினராம். அதற்காக ஒரு வெள்ளைக் குதிரையை அவருக்குப் பரிசளித்து, 'மோகனம் முத்துரங்கம்' என்ற பட்டமும் அளித்தார்களாம். அவர் பீதாம்பரத்தைக் கட்டிக் கொண்டிருப்பார். யானைத் தந்தத்தால் செய்த பிளந்த குச்சியில் தான் தலையாற்றுவார். வாசனைப் பொடி தேய்த்து அவர் ஸ்நானம் செய்யவே ஒரு நாழிகை ஆகிவிடும்.

அயினும் அரசர் பேட்டி கிடைக்கவில்லை. அக்காலத்தில் ராஜ பேட்டிக்காக வரும் வித்வான்கள் அரண்மனை அருகில் உள்ள விடுதிகளில் இறக்கி வைக்கப்படுவார்கள். ராஜோபசாரமாக விருந்துகள் நடக்கும். ஆனால் பேட்டி கிடைக்கவே பல நாட்கள் ஆகிவிடும். ஆனால் கிடைத்து விட்டாலோ அந்தச் சன்மானம் ஒன்றே பல வருஷங்களுக்குக் காணும். ''என்றைக்கு மோகனம் முத்துரங்கம் அரண்மனைக்கு வந்து பாடுவார், நாம் எல்லோரும் கேட்கலாம்' என்று ரசிகர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ஒரு நாள் அந்தப்புரத்தில் மகாராணி அவர்கள் ஓராண்டுக்கு நோன்பு இருப்பதாகவும், அரண்மனைப் பிரதானி பெத்த பெருமாள் முன் வந்து பாடலாம் என்றும் உத்தரவாயிற்று. ஆனால் அவர் சம்மதிக்கவில்லை. பெத்த பெருமாள் பிரதானி என்று கேள்விப் பட்டிருக்கலாம். ரசிகர் என்று கேள்விப்பட்டதில்லை. ஆதலால் பேட்டியே வேண்டாம் என்று கூறிவிடாமல், 'அதற்கென்ன? பார்த்துக் கொள்ளலாம். வாடைக் காற்று உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை. தொண்டை கட்டியிருக்கிறது' என்று சமாதானம் கூறிவிட்டார்.

அன்று மாலை சமையற்காரன் அவரிடம் வந்தான். அவர் ஒரு வித்வான் மட்டுமல்ல. ரசிகரும் கூட. ஆதலால், சமையற்காரர், சலவை செய்பவர் என்ற பாகுபாடு எல்லாம் அவருக்குக் கிடையாது. அவன் ரசிகனாக இருந்தால் ராஜாவும் ஒன்றுதான் ஏழையும் ஒன்றுதான்.

''என்ன சமையல்காரரே! மகாராணி உன் சமையலை ரசித்தார்களா?''

''பெத்த பெருமாள் ரசித்தால் என்ன, ரசிக்காவிட்டால் என்ன? ராணி மாதேவி விரதமாம். அரசிளங்குமரி ஆலயத்துக்குப் போய் வந்துதான் சாப்பிடுவார்களாம்.''

''என்ன, ஆலயத்துக்கா?''

''ஆமாம். மகாராணி கோட்டையை விட்டுப் போக விரும்பவில்லை. ஆதலால் தன் மகளை மலைக்கோட்டை ஆலயத்துக்குச் சென்று தரிசனம் செய்து வர உத்தரவிட்டிருக்கிறார்களாம்.''

''அப்படியானால் நாமும் இன்று சிறிது நேரம் சந்நிதியில் பாடலாமே?''

''எந்தச் சந்நிதியில்?'' என்றான் சமையற்காரன் இளநகையுடன். (தொடரும்)

கொல்லு அந்த இரக்கத்தை!

பத்தடிக்கு எட்டடி கொண்ட இந்த அறைதான் என் உலகம் என்றால் இந்தச் சின்னஞ்சிறு ஜன்னல்தான் அதன் நிட்டி வாசல். இதனருகில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு, ஜன்னல் விளிம்பில் இரண்டு கைகளையும் ஊன்றித் தாடையில் பதித்து, வெளிப்புறக் 'கேட்'டுக்கு அப்பால் தெரிகிற வேறோர் உலகத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பதுதான் என்னுடைய தற்போதைய வேலை, பொழுதுபோக்கு எல்லாமே. ஊர்கிற மக்கள், ஓடுகிற வண்டிகள், நொண்டுகிற கால்நடைகள் — இவையெல்லாம் என் சிந்தையைத் தூண்டி, இரக்கத்தைக் கிளறி, அனுதாபத்தைப் பொழிய வைக்கிற அம்சங்கள்.

இன்று மட்டும் என்றில்லை; என்றைக்குமே என் மனத்திலே இரக்கத்துக்கும், அநுதாபத்துக்கும் இடமுண்டு. சின்னஞ்சிறு பயலாக இருந்தபோது, கன்றுக்குட்டிக்கு வாய்ப் பூட்டு போடுவதைப் பார்த்து, அது தன் தாயின் மடியில் எம்பி முட்டிச் சுரந்த பாலைச் சுவைக்க முடியாமல் மலங்க மலங்க விழிப்பதைக் கண்டு, கண்ணீர் சுரந்தவன் தான் நான். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் என்னைச் சுற்றியிருப்பவர்களின் துயரத்தையும் அவல நிலையையும் கண்டு மௌனமாக இரத்தக் கண்ணீர் வடித்தவன். சிறுமை கண்டு சீறிப் பாய்ந்திருக்கிறேன். அநியாயத்துக்கு எதிராகப் போர் முரசம் கொட்டியிருக்கிறேன்.


ஆனால் இன்று? கண்ணெதிரே நடக்கிற அக்கிரமங்களைக் கண்டும் காணாதவன் போல் நடிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறேன். இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு அந்தக் கோட்டைக்குள் சவு இரக்க உணர்ச்சிகள் புகுந்து விடாதபடி காபந்து செய்து கொண்டிருக்கிறேன். இந்த ரசவாதம் — அல்ல, ரசபேதம் — எப்படி நிகழ்ந்தது?

கண்ணெதிரே எதிர்ச் சருகிலுள்ள பால் 'டிப்போ' தென்படுகிறது. கடைவாசலில் மூங்கில் கம்பத்தின் உச்சியில் பறக்கும் கொடியில் தென்படும் இரு வண்ணங்கள் எப்படி அளவில் சீரானவையோ அதே போலத்தான் 'டிப்போ'வில் விற்கப்படும் பாலும். ஒரு மந்திரவாதிக்கே உரிய கை லாகவம், தனித்திறமை, சொல்லாட்சி அத்தனையும் டிப்போக்கார முருகேசனிடம் குடிகொண்டிருக்கின்றன. "என் சார்! ராஜா தலை போட்ட எட்டணாகாசுங்க இனி செல்லாதாமே?...." என்று எதிரில் நிற்கும் போஸ்டல் ஆடிட் சாமிநாதனைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவன் கை அந்த மாய வித்தையைச் செய்து விடுகிறது. சட்டென்று குனிந்து தனக்கு இடதுபுறத்தில் இருக்கும் ஜோடுத்தவலையை எடுத்து, அதிலே மாட்டுக்காரக் குப்புசாமியின் பாத்திரத்தைக் கவிழ்த்து விடுகிறான். அங்கே அந்தக் கணத்தில் ஒரு சங்கமம் நிகழ்ந்து விட்டது என்பது ஒருவருக்காவது தெரிய வேண்டுமே?.... ஊஹூம். இரண்டாம் நம்பர் வீட்டுக் கிழவர் மட்டும் இலேசாக முணுமுணுக்கிறார்: "பால் கொஞ்சம் தண்ணீராக இருக்கு போலிருக்கே..." என்று.




"அம்ருதத்தையே கொ(ண்)ணந்து ஊத்தினாலும் ஐயா அப்படித்தான் சொல்வாரு..." என்று சிரித்துக் கொண்டே குறைப்பட்டுக் கொள்கிறான் முருகேசன். "நன்றாக ஊற்றுவாயே நீ அமிர்தத்தை?.... ஒரு சொட்டுக்கு ஒரு புழலேரியை அல்லவா சேர்ப்பாய்?... உன்னைத் தெரியாதா எனக்கு...?" சிரித்துக் கொள்கிறேன் நான்.

டிப்போவுக்குச் சற்றுத் தள்ளி ஒரு பெட்டிக் கடை. வெற்றிலை பாக்குக் கடை என்று பெயர்தானே தவிர, அதிகம் விற்பனையாவதென்னவோ பீடி, சிகரெட்டுகள்தாம். கடைக்குள்ளே மோட்டார் சீட்டு ஒன்றை ஆசனமாகப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான் குஞ்சப்பன். பொடிசு ஒன்று கன்னங் கரேலென்று, வயிற்றைச் சாய்த்துக் கொண்டு (சூலைக் கட்டியோ?) மூக்கை உறிஞ்சியபடி வருகிறது. குஞ்சப்பனின் கடையில் நின்று நிதானிக்கிறது. முன் வரிசையில் ஆரோகணித்திருக்கும் கண்ணாடிப் புட்டிகளை ஏக்கத்துடன் பார்வையிடுகிறது. சிறிது நேரத் தயக்கத்துக்குப்பின் தன் அழுக்கு விரல்களால் வேர்க்கடலை உருண்டைகள் நிரம்பிய



புட்டியைத் தொட்டுக் காட்டி, ''உண்டை குடு, நாயர்!'' என்கிறது. ''துட்டு எங்கேடா ராஸ்கோல்?'' என்று கடிந்து கொள்கிறான் குஞ்சப்பன். இடது கையைப் பிரித்துக் காட்டுகிறது அந்தப் பிஞ்சு. கசங்கி, அழுக்கேறிய ஒரு





ரூபாய் நோட்டு அதன் கைகளில் புரள்கிறது. குஞ்சப்பன் அதை வாங்கிக் கொண்டு ஓர் உருண்டையை எடுத்துக் கொடுக்கிறான். அந்த அழுக்கு மூட்டை தயங்கி நிற்கிறது. ''போடா அப்பாலே!'' என்று விரட்டுகிறான் குஞ்சப்பன். அது அச்சம் கொண்டு நகர்ந்து போய் விடுகிறது.


கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கடைவாசலில் கும்பல். செவந்தகனி நாடார் கட்டைத் தொட்டியில் கோடாலி பிடிக்கும் காத்தவராயன் கத்திக் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறான். அவன் பக்கத்திலே அந்தப் பொடிசு நிற்கிறது. அழுது கொண்டே. அதன் உதட்டோரத்தில் இன்னும் கடலைத் துணுக்குகள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

ஒரு ரூபாய்க்கு நாயர் மீதிச் சில்லறை கொடுக்கவில்லை என்பது காத்தவராயனின் வாதம், குற்றச்சாட்டு. குழந்தை பணமே கொடுக்கவில்லை என்பது குஞ்சப்பனின் எதிர்வாதம்.. அவனுகத்தான் இரக்கப்பட்டுக் குழந்தை கையில் ஓர் உருண்டையைக் கொடுத்து அனுப்பி வைத்தானும். ''அப்படியானால் நான் கொடுத்தனுப்பிய ரூபாய் என்னவாயிற்று?'' என்று கேட்கிறான் காத்தவராயன். ''என்னைக் கேட்டால்...?' — குஞ்சப்பனின் மறுமொழி இதுதான். காத்தவராயன் அவன் கண்ணெதிரிலேயே குழந்தையைப் போட்டு மொத்துகிறான். அது மண்ணில் விழுந்து புரண்டு அழுகிறது. அந்தக் கருப்பு உடம்பில் விதிச் செம்மண் படிகிறது. சுற்றிலும் இருக்கிறவர்கள் காத்தவராயனைத் தடுக்கிறார்கள். நாயரோ 'ஃப்ரெஷ் லைம்' சர்பத்துக்கு ஐஸ் போட்டுக் கண்ணாடித் தம்ளரில் கடகடவென்று ஸ்பூனால் பெரிதாக ஓசை எழுப்பியவண்ணம் காரியத்திலேயே கண்ணாக இருக்கிறான். எதை மறைப்பதற்காக இவ்வளவு பெரிய ஓசை....?

என் வீட்டு வாசலிலேயே ஒரு பஸ் 'ஸ்டாப்'. இப்போதுதான் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. முன்பு பஸ்களெல்லாம் இந்தத் தெருவைச் சீந்தவே சீந்தா. 'தமிழக அரசு போக்குவரத்து' ஆன பிறகுதான் இந்தத் தெருவுக்கும் கதிமோட்சம் பிறந்திருக்கிறது; ஊரைச் சுற்றிக் கும்மாளம் அடித்துக் கொண்டு போகும் 'ரூட்' ஒன்றும் ஏற்பட்டிருக்கிறது.

பஸ் நிறுத்தத்தில் பூனு சுந்தரம் நின்று கொண்டிருக்கிறார். (அவர் அந்தக் காலத்தில் பூனுவில் இருந்தவராம். மகாராஷ்டிர மண்ணை உதறி மூன்று மாமாங்கத்துக்கு மேல் ஆகிறது. ஆனால் 'பூனு' என்கிற அடைமொழியை மட்டும் இன்னமும் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறார்...) சுந்தரத்துக்கு வயது அறுபதுக்குக் கிட்டத்தட்ட இருக்கும். இந்தப் பேட்டைக் கோயிலின் கௌரவ காப்பாளர்களில் அவரும் ஒருத்தர். வருடா வருடம் ராம பட்டாபிஷேகமும் ராதா கல்யாணமுமாக ஏற்பாடு செய்து ஜமாய்ப்பார். அவரே பஜனைப் பாட்டெல்லாம் பாடுவார்; கரக்கம்பமும் சிரக் கம்பமும் பெரிதாகச் செய்வார். 'ஆஹா!'காரம் போடுவார். ஆனால் இத்தனையும் ஒரு கவசம்தான் அவருக்கு. இது

முகிந்தன்



அநேகமாக எல்லாருக்குமே தெரிந்த விஷயம்தான். கீழ்ப் பார்வையும் மேல் பார்வையுமாக அவர் பார்ப்பது நமக்கே உறுத்தும் என்றால் பெண்களைப் பற்றி என்ன சொல்வது?

அப்படிப் பட்டவர்தான் இப்போது என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். கையிலே பம்பாய் தார்மீகச் சங்கம் ஒன்றின் வெளியீடு. புத்தகத்துக்கும் சாலைக்குமாக, அவருடைய பார்வை தாவிக் கொண்டிருந்தது.

அவருக்குச் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்தாள் கோகிலா. வக்கீல்குமாஸ்தா ராமசுப்புவின் பெண் அது. குப்பையில் முளைத்த செந்தாமரை. அப்பன்காரனுக்கு மூன்று சீட்டும் கிண்டியுமாக மும் யமனாக வந்து வாய்த்திருந்தன. அதனால்தான் தழையத் தழையத் தாலி கட்டிக் கொண்டு கணவன் வீட்டுக்குப் போக வேண்டிய இந்தச் செந்தாமரை இப்படி உழைத்து உழைத்துச் சுண்ணாம்பாகிக் கொண்டிருக்கிறது. செம்புதாஸ் தெருவிலே இரும்புக் கடை ஒன்றில் ஸ்டெனோவாம் அந்தப் பெண். கோகிலாவின் பார்வை தெருவிலும் பதியவில்லை; சாலைத் திருப்பத்திலும் பதியவில்லை. வானத்தில், எட்டாக் கையில் எங்கோ பதிந்திருக்கிறது. பார்வையில் ஓர் ஏக்கம் தோய்ந்து கிடக்கிறது.

'சர்'ரென்று பஸ் வந்து நிற்கிறது. நிறுத்தத்துக்குச் சற்றுத் தள்ளி. (நிறுத்தத்தில் நின்றால் அப்புறம் அது என்ன அரசாங்க பஸ்?) தவம் கிடந்த கும்பல் பஸ்ஸை நோக்கி ஓடுகிறது. கண்டக்டர் மகாராஜா தம் கால்களில் ஒன்றையே வழியடைப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறவர் காலை எடுத்து வழி விடுகிறார். முட்டி மோதிக் கொண்டு கும்பல் பஸ்ஸினில் ஏற முயல்கிறது.

சுந்தரமும்தான். ஆனால் அவர் வேண்டுமென்றே கோகிலாவின் மீது மோதுவதுபோல் இருக்கிறது. அந்தப் புஷ்பம் வெடவெடக்கிறது. இருந்தாலும் என்ன செய்வது? இடது கையில் உள்ள டிபன்பாக்ஸை ஆத்திரம் தீர அழுந்தப் பற்றிக் கொள்கிறது.

இவற்றையெல்லாம் பார்த்தும் என் இரத்தம் கொதிக்கவில்லை. கண்ணெதிரில் ஏமாற்றும் முருகேசன், வஞ்சிக்கும் குஞ்சப்பன், அயோக்கியத்தனமாக நடந்து கொள்ளும் சுந்தரம் — இவர்கள்பேரில் எனக்குக் கொஞ்சம்கூடக் கோபமே வரவில்லை. காரணம்?.... இருக்கிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள்—

அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டு எழுந்தேன். கீழேயிருந்து ஏதோ கோஷம் கிளம்பிக் கொண்டிருந்தது. இந்திக் கிளர்ச்சி மும்முரமாக நடந்து கொண்டிருந்த சமயம் அது. 'மாணவர் ஊர்வலம் ஏதாவது வருகிறதாக்கும்' என்று ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தேன். இது வேறு. இதுவும் கிளர்ச்சிதான். தொழிலாளர்கள் கிளர்ச்சி.


எங்கள் அலுவலகத்துக்கு அடுத்த ஓர் அயல்நாட்டுக் கம்பெனி. ஆவடிக்கு அருகில் அவர்களுக்குத் தொழிற்சாலை ஒன்றும் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் திடீரென எட்டுப் பேர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டார்களாம். அவர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரித்தான் இந்தக் கோஷம். தொழிலாளர்கள் அத்தனை பேரும் இங்கே அலுவலகத்தின் முன்பு படையெடுத்து விட்டிருந்தார்கள்.

என் குறுகுறுப்பு சும்மா இருக்க விடவில்லை. கீழே இறங்கிப் போனேன். கூடியிருந்த சில பேரிடம் விஷயம் என்னவென்று விசாரித்தேன். அந்தக் கம்பெனிக்காரர்கள் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதுடன், போலீஸில் புகார் வேறு கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ''என்னவென்று?'' என்று கேட்டேன் நான். தொழிற்சாலையில் தயாரிக்கும் பண்டங்களைத் திருட முயன்றதாக அபாண்டப் பழி சுமத்தியிருப்பதாகச் சொன்னார்கள். போலீஸ்காரர்கள், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை நன்றாக அடித்து உதைத்ததில் ஒருத்தருக்கு முதுகெலும்பே முறிந்து போய்க் கவலைக்கிடமான நிலையில் இருக்கிறாராம்....

''அதோ பாருங்க அந்தக் கண்றாவியை!'' என்றார் ஒருவர். அவர் சுட்டிக்காட்டிய திக்கில் பார்த்தேன். நடைபாதைச் சுவரோரமாக முடங்கிக் கிடந்தது எலும்பும் தோலுமான ஓர் உருவம். அந்த ஆசாமிக்குத்தான் முதுகெலும்பு முறிந்து போய்விட்டதாம்...!

வேதனை என் உள்ளத்தைக் குடைந்தது. நெஞ்சிலே ஒரு கரிப்பு ஏற்பட்டது. முதலாளித்துவ வர்க்கத்தின் மீது சொல்லொணாக் கசப்பு விளைந்தது.

அந்தச் சமயத்தில் கம்பெனியின் ஜெனரல் மானேஜர் காரில் வந்து இறங்கினார். அவரை உள்ளே நுழைய விடாமல் வழி மறித்து ஏதோ சொன்னார்கள் தொழிலாளர்கள். அதற்கு அவர் சொன்ன மறுமொழியின் ஒரு பகுதியே என் காதில் விழுந்தது: ''....நாய்க்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்!....''



நாடாளுமன்ற அங்கத்தினர்கள் இருவருக்கு, பலத்த வாக்குவாதம் எழுந்தது.


ஒருவர்: நீங்கள் எதற்காக இங்கே வருகிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை. நீங்கள் வந்து இடிச்ச புளிமாதிரி உட்கார்ந்திருக்கிறீர்களே தவிர வாயைத் திறந்தே நான் பார்த்ததில்லை.

மற்றவர்: நான் வாயைத் திறக்காமல் இல்லை. பெரிதாக நான்தான் திறக்கிறேன்.

ஒருவர்: எப்பொழுது?

மற்றவர்: நீங்கள் பேசும்போது பெரிதாக வாயைத் திறந்து கொட்டாவி விடுகிறேனே, கவனிக்கலையா?


சிறு தொழில்களுக்குப்
பெரிய
உதவி
சிறு தொழில்களின் சக்கரங்களை
பி என் பி சுழல வைக்கிறது.
புதிய தொழில்களை நிறுவுவதற்கும்
ஏற்கனவே உள்ளவற்றை நவீனப்-
படுத்தி பெரிதாக்குவதற்கும்
பி என் பி முன் பணம் வழங்கி
உதவுகிறது. தொழில், வர்த்தகம் பற்றி
இலவச ஆலோசனையும் அளிக்கிறது.
மற்ற விவரங்களுக்கு அருகி
லுள்ள பி என் பி கிளையை
அணுகுங்கள். நாடெங்கிலும்
எங்களுக்கு 500க்கும்
அதிகமான கிளைகள் உள்ளன.
பஞ்சாப்
நேஷனல்
பாங்க்
1895ம் ஆண்டிலிருந்து



சொல்லிவிட்டு மீண்டும் காரில் ஏறி உட்கார்ந்தார் ஜி. எம். என் இரத்தம் கொதித்தது. இரத்தத்தை வியர்வையாகப் பிழிந்து கொட்டிப் பாடுபடும் ஒரு தொழிலாளியைப் பார்த்து என்ன வார்த்தை சொல்லிவிட்டான் இந்த மனிதன் ?....

ஆத்திரத்துடன் பாய்ந்து அவர் கார் முன்னால் போய் விழுந்தேன். ''அற்பப் பதரே! என்ன திமிர் உனக்கு?.... முதலில் இந்தத் தொழிலாளியிடம் மன்னிப்புக் கேள். இல்லா விட்டால் நீ உள்ளே நுழைய முடியாது.... நெஞ்சுரமிருந்தால் என் மீது வண்டியோட்டிக் கொண்டு போ, பார்க்கலாம்....!'' என்று சவால் மொழிந்தேன்.

அந்த வழக்கைத் தலை ஜி. எம். ஒரு கணம் தயங்கினார். கூடியிருந்தவர்கள் கோஷம் எழுப்பினார்கள். சட்டென்று அவர் காரை விட்டிறங்கி, ஒரே தாவாக என்னைத் தாண்டிக் கொண்டு சென்றார் !

அவ்வளவுதான் ; அவரைத் தொடர்ந்து அத்தனை தொழிலாளர்களும் உள்ளே ஓடினார்கள் — என்னை மிதித்துக் கொண்டு ! இருநூறு ஜோடிக் கால்களில் மிதிபட்டேன். அது தான் எனக்குத் தெரியும்.

நான் மறுபடியும் கண் விழித்தது சர்க்கார் ஆஸ்பத்திரியில். உடல் முழுதும் கட்டுக்கள். கையைக் காலை அசைக்க முடியவில்லை. தலை மேலே மகாபலிபுரத்து வெண்ணெய்க் கல்லைத் தூக்கி வைத்தது போலிருந்தது. வலி யாவது வலி !

மூன்று வாரங்களுக்குப் பிறகு ஆஸ்பத்திரியிலிருந்து வீடு வந்து சேர்ந்தபோது என்னை வரவேற்றவை இரண்டு. 1. என்னுடைய வேலை நீக்க உத்தரவு; 2. பக்கத்துக் கம்பெனியில் உண்மையாகவே திருடியதாக அந்த முதுகெலும்பு முறிவுக்காரரின் ஒப்புதல் வாக்கு மூலத்தைத் தாங்கிய பத்திரிகைச் செய்தி. நானும் பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன், எனக்கு நேர்ந்த விபத்து பற்றி ஏதாவது செய்தி வந்திருக்குமோ என்று. காணோம்.

இதிலே இன்னொரு வேதனை என்னவென்றால் யாருக்காக நான் அப்படித் துடித்துப் பாய்ந்தேனோ, அந்தத் தொழிலாளர்கள் எனக்கு என்ன நேர்ந்தது என்றுகூட விசாரித்துப் பார்க்கவில்லை. என் ஆபீஸ் நண்பர்கள் கொடுத்த தகவல் இது :

கடந்த காலத்தைப் பற்றிய நினைவுகளில் மூழ்கி யிருந்தவன், அறைக்குள் ஏதோ அரவம் கேட்டுத் தலையைத் திருப்பிப் பார்த்தேன். என் ஒரே மகனான குமாரவேலு என்னையே வெறிக்கப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். அவன் என்னைப் பார்த்த பார்வையில்தான் எத்தனை கடுமை!

''எப்பா ! வேளா வேளைக்குச் சோற்றைத் தின்றுவிட்டுப் படுக்கையிலே விழுந்து கிடக்கக் கூடாதோ?.... வேடிக்கை என்ன வேண்டியிருக்கிறது இந்த வயதிலே?.... ஹூம் ?.... நீங்கள் என்ன சின்னக் குழந்தையா?.... ஒரு தரம் சொன்னால் உங்களுக்குத் தெரியாது?....''

நெருப்புத் துண்டங்களாகத் தெறித்து விழுந்தன வார்த்தைகள்.

அவன் வீசிய ஒவ்வொரு சொல்லம்பும் இதயத்தில் தைத்து வேதனையளிக்கவே செய்தது. இதயக் கனிவின் புறச் சான்றாகக் கண்களில் நீர்ப் படலம் திரையிட்டது. ஆனால் எனக்கென்னவோ அவன் மீது துளிக்கூடக் கோபம் ஏற்படவே இல்லை. எனக்குத் தெரியும் அவன் என்னைக் கடிந்து கொள்வதற்கான காரணம். இன்னும் கொஞ்ச நேரத்தில் அவள் புவனா — எதிர் பஸ் ஸ்டாண்டில் வந்து நிற்பாள். இவனும் பஸ்ஸுக்குக் காத்து நிற்கிற சாக்கில் அவள் அருகில் போய் நிற்பான்; அவளோடு பேசுவான்; அவள் அர்த்தமில்லாமல் சிரிப்பதைக் கண்டு அக மகிழ்ந்து போவான். அவர்களுக்குள் 'இது' இருக்கிறது என்பது எனக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம்தான். தன் காதலிக்குத் தன் தகப்பனாரைப் பற்றி — அதாவது என்னைப் பற்றி — எதுவும் தெரியக் கூடாது என்பது குமரவேலுவின் எண்ணம். தெரிந்தால் அவள் மனம் மாறினாலும் மாறி விடுமாம். ஏற்கனவே பல தடவைகள் குமரவேலு என்னிடம் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். அதனால்தான் இப்படிக் கெடுபிடியும் அவன் செய்கிறான்.

இத்தனை வேதனைக்கிடையிலும் என் மனத்தில் ஒரு திருப்தி பிறந்தது. என்னருமைக் குமரவேலு, நீ பிழைத்துக் கொள்வாயடா!.... பெற்ற தகப்பனிடமே ஈவிரக்கமில்லாமல் நடந்து கொள்ளும் உனக்கு மற்றவர்களிடம் இரக்கம் எப்படிச் சுரக்கப் போகிறது?.... என்னைப் போல, யாரோ ஒருத்தனுக்காக இரக்கப்பட்டு, கால்களை இழந்து சக்கர நாற்காலியே கதியாக நீ கிடக்க மாட்டாய். அது போதுமே எனக்கு!



MAFATLAL GROUP
கண்டுகொண்டோம்!
மேனி சிலிர்க்க வைக்கும் வாயில்கள். மஃபத்லால் க்ருப்பின் படைப்பு உங்கள் எழிலுக்கு எழில் கூட்டும் வாயில்கள். பளிச்சென்ற கோல திருசுகள். வண்ண வகைகளோ உங்களைப் போலவே களிதுள்ளுபவை. உள்ளத்திற்கு உற்சாக மூட்டுவதற்கென்றே தயாரிக்கப்படுபவை இது போன்ற உன்னத வாயில்கள். அணிந்து பாரீர், அருமையை உணர்வீர்
மபத்லால் க்ரூப்
2×2 வாயில்களும் விரேக்களும்
'டெரீன்' /காட்டன், டெபிலேஸ்டு & 'மபீனேஸ்டு', தரங்கள்
M 364 TM
நியூ ஷோராக் (ஷோராக்), அகமதாபாத். நியூ ஷோராக், நதியாத். ஸ்டாண்டர்டு, பம்பாய். ஸ்டாண்டர்டு (நியூ சைனா), பம்பாய். ஸ்டாண்டர்டு (தேவாஸ்). ஸஸூன், பம்பாய். ஸஸூன் (நியூ யூனியன்), பம்பாய். ஸூரத்காட்டன், ஸூரத். மஃபத்லால் ஃபைன், நவசாரி. மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்.



ருஷ்யர்கள் வருகிறார்கள்!

வில்லியம் ரோஸ் என்ற ஆங்கிலத் திரைப்பட வசனகர்த்தா புதுமையான முறையில் நகைச்சுவை மிக்க திரைக் கதைகளை அமைப்பதில் வல்லவர்.

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடைவிடாது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பனிப்போர், ஆயுதங்கள் போட்டி இவை காரணமாய் ஒரு சிறு பொறி கூடக் காட்டுத் தீயாக மாறிவிடும் என்ற கருத்தில்தான் அவர், "ரஷ்யர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்ற இந்த நாடகத்தை எழுதினார். அரசியலை மறந்து மனிதாபிமானம் மிகுந்தால் ருஷ்யர்களோ அமெரிக்கர்களோ அனைவரும் ஒற்றுமையாக வாழலாம் என்று உணர்த்தும் இந்த நாடகம் திரைப்படமாக்கப்பட்டு 1967ம் ஆண்டின் மிகச் சிறந்த பத்து திரைப்படங்களுள் ஒன்றாக நியூயார்க் திரைப்பட விமர்சகர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. திரைக் கதையை இங்கு தருகிறோம்.



...தபால் நிலையத்தின் வெளியே ஒரு ஸெடான் கார் இருப்பதைக் கண்ட ருஷ்யர்கள் காரின் சொந்தக்காரியான அறுபது வயதுக் கிழவியைப் பயமுறுத்திக் காரைத் திருடிக் கொண்டார்கள்....




...... ருஷ்யர்களின் நீர் மூழ்கிக் கப்பலுக்குத் துணையாக அமெரிக்கர்கள் பலப்பல படகுகளில் ஏறிச் சென்று ருஷ்யக் கப்பலைப் பத்திரமாக நடுக் கடலில் கொண்டு போய் சேர்த்தார்கள்....

'டமார்' என்ற பயங்கர சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிடுகிறார் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் தலைவரான தியோடர் பிக்கல். அதே சத்தத்தைக் கேட்டுப் பயந்த கப்பல் காப்பாளன் ரோஜாநோவ் கப்பலில் உள்ள வரை படங்களையும் கப்பல் செல்லும் திசையையும் கவனித்துத் திடுக்கிடுகிறான்.

அச்சம் கலந்த குரலில் அவன் கப்பல் தலைவனிடம் ''நாம் இங்கு ஒரு நிமிடம் கூட இருக்கக் கூடாது. நாம் பாதை தவறி விட்டோம். உடனே கப்பலைக் கடலுக்குள் திருப்புங்கள்'' எனக் கூக்குரலிடுகிறான்.

நீர்மூழ்கிக் கப்பல் கடலின் கரையோரமாக இருந்த ஒரு மணற் குன்றின் மீது மோதியதால் அது அக்குன்றுக்குள் ஆழ்ந்து கிடந்தது. கப்பல் தலைவன் எவ்வளவோ முயன்றும் அது அந்த இடத்தை விட்டுக் கிளம்ப மறுத்தது. வேறு வழியின்றித் தலைவன் ரோஜாநோவையும், மற்றும் எட்டு ருஷ்யர்களையும் கரைக்குச் சென்று உதவி பெற்று வரும்படி ஆணையிடுகிறான்.

கப்பலிலிருந்து தனது எட்டுத் தோழர்களுடன், கடலில் நீந்திக் கரையை அடைந்த ரோஜாநோவ், ''கடவுளே! நாம் அமெரிக்காவில் அல்லவா இருக்கிறோம்'' என்று பயத்தால் உளற ஆரம்பிக்கிறான். வந்தது வந்தாகிவிட்டது. எங்கேயாவது ஓர் இயந்திரப் படகைக் கடனாகப் பெற்று அதன் மூலம்



...பதினெட்டு வயதுப் பாவையைக் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்த கோல்கின், விட்டேக்கர் திடீரெனத் தாக்கி அவனது துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டான்....

கப்பலை மணற் குன்றிலிருந்து இழுத்த பின் ருஷ்யாவை நோக்கிப் புறப்படலாம் என்ற எண்ணத்துடன் அவன் அந்தத் தீவைச் சுற்றி உதவிக்காக அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கும் வேளையில் ஒரு பெரிய வீடு தென்படுகிறது.

அவ்வீடு வால்ட் விட்டேக்கர் என்ற நாடக ஆசிரியரின் வீடு. வேனிற் காலத்தைக் கழிப்பதற்காக விட்டேக்கர் தம்பதிகள் கிளௌஸெஸ்டர் தீவிலுள்ள அந்த வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தனர். அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் விட்டேக்கர் தம்பதிகள் வீட்டுக்கு வெளியே சாவகாசமாய்க் காலை உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், அவர்களது ஆறு வயதான மகன் பீட்டர் திடீரென்று மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க ஓடி வந்து, ''அப்பா! நம் வீட்டைச் சுற்றி யாரோ வந்து கொண்டிருக்கிறார்கள்'' எனக் கூறுகிறான். அவனது கூற்றைக் காதில் போட்டுக் கொள்ளாமல் விட்டேக்கர்



...தீவில் உள்ள முக்கியமான வீடுகளில் மக்கள் தங்களுக்குக் கிடைத்த ஆயுதங்களைக் கையில் ஏந்திக் கொண்டு ருஷ்யர்களைத் தாக்க ஒன்று திரண்டார்கள்....

தம்பதிகள் தங்களது காலை உணவை முடித்துக் கொண்டு உள்ளே போகிறார்கள்.

திடீரென வாசற்கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது. கதவைத் திறந்த விட்டேக்கரைத் தள்ளிக் கொண்டு நுழைகிறான் ரோஜானோவும் அவனது சகா கோல்சின் என்பவனும். விட்டேக்கரிடம் பவ்யமாக அவர்கள் இயந்திரப் படகு ஒன்றைச் சில மணி நேரங்கள் கடனாகத் தரும்படி வேண்டுகிறார்கள். அவர்களது சம்பாஷணையைக் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்த சிறுவன் பீட்டர் ''அப்பா! இவர்கள் ரஷ்யர்கள். இங்கு எப்படி வந்தார்கள்?'' எனக் குறுக்கே இடைமறிக்கிறான்.

தாங்கள் ரஷ்யர்கள்தான் என உண்மையைக் கூறினால் உதவி கிடைக்காமல் போகும் என எண்ணிய ரோஜானோவ் அசட்டுச் சிரிப்புடன், ''நாங்கள் ரஷ்யர்கள் அல்ல; நார்வே நாட்டைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இப்பொழுதிருக்கும் பயங்கரமான விரோத நிலையில் நாங்கள் ரஷ்யர்களாக இருக்கும்பட்சத்தில் அமெரிக்கப் பூமியில் கால் வைப்பதே கடினம்'' என்கிறான். ஆனால் விட்டேக்கர், வந்தவர்கள் ரஷ்யர்கள்தான் என நொடியில் கண்டு பிடித்து அவர்களை மிரட்டுகிறான்.

வேறு வழியின்றி ரோஜானோவ் தன்னிடமுள்ள துப்பாக்கியை நீட்டி அவர்களைப் பயமுறுத்துகிறான். துப்பாக்கி முனையில் அவன் விட்டேக்கரின் கார் சாவியை வாங்கிக் கொண்டு அவர்களை கோல்சினின் பாதுகாப்பில் இருக்க வைத்து விட்டு இயந்திரப் படகுக்காகத் தீவின் வேறு ஒரு பகுதிக்குச் செல்கிறான். கோல்சினை வெறுப்புடன் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த பீட்டர் உதவிக்காக டெலிபோன் செய்ய முயலுகையில் கோல்சின் டெலிபோன் தொடர்புகளை வெட்டி விடுகிறான்.

கோல்சினின் துப்பாக்கிக்கு எதிரே நாற்காலிகளில் விட்டேக்கர் தம்பதிகளும் பீட்டரும் உட்கார்ந்திருக்கும் நேரத்தில் திடீரெனக் கதவு திறக்கும் சத்தம் கேட்டுத் திடுக்கிடுகிறான் கோல்சின். துப்பாக்கியைத் தயாராகப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் வேளையில் கதவைத் திறந்து கொண்டு விட்டேக்கரின் இளைய மகளான மூன்று வயது அன்னி உள்ளே நுழைகிறாள். தனது பைத்தியக்காரச் செய்கையைக் கண்டு தானே சிரித்துக் கொண்ட கோல்சின் விட்டேக்கரிடம் தங்களது கப்பல் தலைவன் ஒரு மாதிரி பைத்தியம் என்றும் தங்களது தலைமை அதிகாரிகளின் ஆணையை மீறி அமெரிக்காவை இலேசாகப் பார்க்கலாம் என்ற ஆவலில் இத்தீவுக்கு வந்தபோது மணற் குன்று ஒன்றின் மீது கப்பல் மோதியதால் இயந்திரப் படகு ஒன்றைத் தீவு மக்கள் யாரிடமிருந்தாவது பெற்று வரும்படி தங்களை அனுப்பியதாகக் கூறிக் கொண்டிருக்கும் வேளையில் — அலிஸன் பால்மர் என்ற பதினெட்டு வயதுப் பாவை — விட்டேக்கர் தம்பதிக்கு வீட்டு வேலைகளுக்கு உதவியாக இருப்பவள்—உள்ளே நுழைகிறாள். அவளையே அயராது பார்த்துக் கொண்டிருந்த கோல்சினை விட்டேக்கர் திடீரெனத் தாக்கி அவனது துப்பாக்கியைப் பிடுங்கவும் கோல்சின் தப்பி ஓடுகிறான். அவனைத் துரத்திச் சென்ற விட்டேக்கர் அவனைப் பிடிக்க முடியாமல் அவனைப் பற்றிப் புகார் செய்யப் போலீஸ் நிலையத்துக்கு விரைகிறான்.

இதற்கிடையில் விட்டேக்கரின் காரில் ஏறிச் சென்ற ரோஜானோவும் அவனது சகாக்களும் பெட்ரோல் தீர்ந்து விட்ட காரணத்தால் காரை விட்டு விட்டு இறங்கிப் பக்கத்தில் உள்ள கிராமத்தை நோக்கி நடக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் உள்ள தபால் நிலையத்தின் வெளியே ஒரு ஸெடான் கார் இருப்பதைக் கண்ட ரோஜானோவ் காரின் சொந்தக்காரியான அறுபது வயதான கிழவி மூரியல் எவரட்டை ஏமாற்றிக் காரைத் திருடுகிறான்.

மூரியல் டெலிபோனை எடுத்து இளைஸெஸ்டர் போலீஸ் நிலையத்தை அழைத்து ''ரஷ்யர்கள் வந்து விட்டார்கள். நம்மூரின் மீதே படையெடுத்து விட்டார்கள். என்னைத் தாக்கிவிட்டு என் காரை அபகரிக்கிறார்கள்'' எனக் கூக்குரலிடுகிறாள். அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்த ஒரு ரஷ்ய மாலுமி டெலிபோன் தொடர்பைத் துண்டித்துவிட ஒரே குழப்பம் ஏற்படுகிறது. அந்தத் தீவில் உள்ள டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் தபால் நிலையத்திலேயே இருப்பதால் யாரும் யாருடனும் பேச முடியவில்லை.

ஆனால் தீவெங்கும் ரஷ்யர்கள் படையெடுத்துவிட்ட செய்தி காட்டுத் தீயைப் போலப் பரவுகிறது. தீவின் போலீஸ் அதிகாரி லிங் மேடாக்ஸ் இந்த வதந்தியை நம்ப மறுத்தாலும் டெலிபோன் தொடர்பு தீவு எங்கிலும் திடீரெனத் தடைப்பட்டுவிட்டதால் ஒருவேளை செய்தி உண்மையாக இருக்குமோ என எண்ணுகிறான்.

தீவில் உள்ள முக்கியமான வீதிகளில் மக்கள் தங்களுக்குக் கிடைத்த ஆயுதங்களைக் கையில் ஏந்திக் கொண்டு ரஷ்யர்களைத் தாக்க ஒன்று திரளுகிறார்கள். அந்த விசித்திர சேனைக்குத் தலைவனாக, தளபதியாகத் தீவில் உள்ள கசாப்புக் கடைச் சொந்தக்காரனான பெண்டல் ஹாக்கின்ஸ் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறான்.

'பயங்கரக் குடிகாரன்' எனப் புகழ்பெற்ற லூதர் கிரில்க் என்பவனைத் தீவு எங்கிலும் ''ரஷ்யர்கள் வந்துவிட்டார்கள்; தயாராகுங்கள் போருக்கு'' என்ற செய்தியைப் பரப்பச் சொல்லி அவனிடம் ஒரு வயதான குதிரையைக் கொடுத்து அனுப்புகிறான் விட்டேக்கர். கிரில்க் எவ்வளவோ முறைகள் முயன்றும் அந்தக் கிழட்டுக் குதிரையின் மீது ஏறிச் சவாரி செய்ய முடியாமல் திணறுகிறான்.

இதற்கிடையில் எங்கிருந்தோ ஓர் இயந்திரப் படகைத் திருடிக் கொண்டு வந்த ரோஜானோவும் அவனது சகாக்களும் தங்களது நீர்மூழ்கிக் கப்பலைத் தேடி அலைகிறார்கள்.

கடற்கரை ஓரமாக அவர்கள் சென்று கொண்டிருக்கும் வேளையில் தீவின் மக்கள் கூட்டம் ரோஜானோவைச் சூழ்ந்துகொள்ளுகிறது. என்ன செய்வது என்றறியாமல் ரோஜானோவ் திணறிக் கொண்டிருக்கும் சமயம் திடீரென்று நீர்மூழ்கிக் கப்பல் கடலின் அடியிலிருந்து மேலே வருகிறது.

மணல் திட்டிலிருந்து கப்பலை எப்படியோ விடுவித்துவிட்ட அதன் தலைவன் தனது

மாலுமிகள் அனைவரையும் பத்திரமாக அனுப்பாவிடில் கப்பலில் உள்ள பீரங்கிகளால் சுட்டுவிடுவேன் என மக்கள் கூட்டத்தைப் பயமுறுத்துகிறான்.

அச்சமயத்தில் கப்பலில் பிரம்மாண்டமாகக் காட்சியளிக்கும் பீரங்கிகளைக் காண வேண்டும் என்ற ஆசையினால் உந்தப்பட்டு ஆறு வயதான ஜெர்ரி என்ற சிறுவன் மாதா கோயில் ஒன்றின் உச்சியில் ஏறுகிறான். கீழே நடக்கும் களேபரத்தை ரசித்துக் கொண்டிருக்கும் வேளையில் திடீரெனக் கால் தவறி ஒரு வீட்டு ஜன்னல் மீது விழுந்து தொங்குகிறான்.

அதைக் கண்ட மக்கள் கூட்டம் பயத்தால் திடுக்கிடுகிறது. ஜெர்ரியைக் காப்பாற்ற வேண்டுமானால் ஏணியின் உதவி வேண்டும். நீளமான ஏணிகள் தீயணைக்கும் படையினரிடம்தான் இருக்கிறது. ஆனால் அவர்களோ சுமார் இருபது மைல்கள் தூரத்தில் உள்ள நகரில் இருக்கிறார்கள். என்ன செய்வதெனத் தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் வேளையில்—

ரோஜானேவ் 'மனித ஏணி' ஒன்றை உண்டாக்குகிறான். ஒருவர் தோள்மீது ஒருவராக ஏறி நிற்கிறார்கள். இருநூறு அடி உயரத்தில் ஒரு ஜன்னல் விளிம்பில் தொங்கிக் கொண்டிருந்த அமெரிக்க ஜெர்ரியை ரஷ்ய ரோஜானேவ் காப்பாற்றுகிறான்.

ரோஜானேவின் உயிருக்கு அஞ்சாத தீரச் செயலைக் கண்டதும் தீவு மக்களின் பயம் மாறுகிறது. அவர்கள் ரஷ்யர்களை நண்பர்களாகப் பாவிக்கத் தொடங்குகிறார்கள்.

கிளௌசெஸ்டர் தீவில் ரஷ்யர்கள் படையெடுத்துவிட்ட செய்தியைக் கேள்வியுற்ற அமெரிக்கக் கப்பற் படை, போர் விமானங்களை அனுப்பி வைக்கிறது, தீவை ரஷ்யர்களிடமிருந்து பாதுகாக்க.

தீவு மக்கள் ரோஜானேவையும் அவனது குழுவினரையும் உடனே கப்பலில் ஏறித் தப்பிச் சென்றுவிடும்படி வேண்டுகிறார்கள். ரோஜானேவின் கப்பலுக்குத் துணையாக ஆயிரக் கணக்கான படகுகளில் தீவு மக்கள் ஏறிக்கொண்டு ரஷ்யக் கப்பலைப் பத்திரமாக நடுக் கடலில் கொண்டு போய் விட்டு விட்டு வருகிறார்கள்.

நடந்தது என்னவென்று புரிந்துகொண்ட அமெரிக்கக் கப்பற் படை, விமானங்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளுகிறது.

ஆனால் தீவின் மற்றொரு மூலையில் கிழட்டுக் குதிரையின் மீது ஏற முடியாமல் இன்னும் தத்தளித்துக் கொண்டிருக்கும் லூதர் கிரில்க் "ரஷ்யர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்! ரஷ்யர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்!" எனப் பயங்கரமாக அலறிக் கொண்டே இருக்கிறான்!

— அ. இராமதுரை

அடுப்பு நாச்சியாருக்குக் காணிக்கை



யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பு நாச்சி என்னும் தெய்வத்தை வணங்குவர். இவ் வழிபாடு போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் தொடங்கியது. "நல்ல நாள் பெரு நாள்" வந்தால் வீட்டிலே சுடும் பலகாரத்தில் முதற் பலகாரம் ஒவ்வொன்றையும் அடுப்புநாச்சிக்கென நேர்ந்து அடுப்புக்குள் போடுவர். அதன்பின்னரே ஏனைய பலகாரங்களைத் தமது தேவைக்கு எடுப்பர். வீட்டிலுள்ள சிறு குழந்தைகளுக்கு வாய்விக்கல் போன்ற வருத்தங்கள் வந்தாலும், கஞ்சி வடிக்கும்போது அது உடம்பில் தெறித்துவிட்டாலும், அடுப்புநாச்சிக்குச் சமைக்கும் பொருட்கள் யாவற்றையும் அடுப்பிற்கு முன்னே வெற்றிலை பாக்குடன் வைத்துப் படைப்பர். படையல் மாற்றும்பொழுது படைத்த பொருட்கள் ஒவ்வொன்றிலும் சிறிது கிள்ளிக் கிள்ளி அவ் வடுப்புக்கும் போடுவர். அதன் பின்னர் அங்கு செம்பில் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரைப் படையற்பொருட்களின் மேலே தெளித்துப் படையல் மாற்றுவர். வருத்தம் வந்து மாறிய ஒருவருக்குப் பத்தியம் வைக்கும் பொழுது அடுப்புநாச்சிக்கு 'நேர்ந்து, நுளைவி' அப் பத்தியச் சோறு கறியில் ஒரு சிறிது கிள்ளி அடுப்புக்குள் போடுவர்

ஆதாரம்: பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய 'ஈழத்து வாழ்வும் வளமும்'

தகவல்: கே. பாலசுந்தரம்

ஒரு கல்லில் ஆயிரம் ரூபாய்!

அக்பர் அரண்மனையில் கான்கானு என்றொரு பிரபு இருந்தார். ஒரு சமயம் அவர் தெருவில் போய்க் கொண்டிருந்த போது யாரோ ஒருவன் அவர் மீது கல்லை விட்டெறிந்தான். உடனே கான்கானு தம் வேலையாட்களைக் கூப்பிட்டுக் கல்லை விட்டெறிந்தவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி சொன்னார். எல்லோரும் இதைக் கேட்டுத் திகைப்படைந்தனர். பிரபு சொன்னார்: "மரத்தை நோக்கிக் கல்லெறிந்தாலே காயோ பழமோ கிடைக்குமே, என்னை நோக்கிக் கல்லெறிந்து விட்டு அவன் வெறும் கையுடன் போகலாமா?"

—பி. வி. கிரி

இலவசம் உப்புப் பொட்டலம்!

நமது பக்கங்களில் வேர்க்கடலை தின்றவுடன் சிலர் சிறிது வெல்லம் உண்பதைக் கண்டிருக்கலாம். இங்கு உத்தரப் பிரதேசத்தில் மக்கள் வேர்க்கடலை உண்டவுடன் சிறிது உப்பு சாப்பிடுகிறார்கள்! ஆம்..... வெறும் உப்பைத்தான்! வேர்க்கடலை வியாபாரிகள் டாக்டர் மருந்துப் பொட்டலம் வைத்திருப்பது போல் சின்னப் பொட்டலங்களாக உப்பைக் கட்டி வைத்திருக்கிறார்கள். வேர்க்கடலை வாங்குபவர்களுக்கு அவர்கள் வேர்க்கடலையுடன் இந்த உப்புப் பொட்டலம் ஒன்றையும் தரத் தவறுவதில்லை!

—ரா. கிருஷ்ணன்

தர்ப்பைக் கட்டும் தர்ப்பணப் புத்தகமுமாக வெளியே கிளம்பத் தயாராக நின்றார் சுப்பண்ணா.

கூடத்து அறையில் அவர் மகன் வேதபுரி முணுமுணுத்துக் கொண்டு நின்றான். மகனின் முணுமுணுப்பு சுப்பண்ணாவின் காதில் தெளிவாக விழ வேண்டும் என்பதில்லை. அந்தச் சங்கேதமே அவருக்குப் புரியும்; முழுதுமே புரியும் !

மனைவி கொடுத்த பசும்பாலை வாங்கிக் குடித்து விட்டு, ''போய்விட்டு வரேன்!'' என்று புன்னகையோடு, கூடவே மகனின் முணுமுணுப்பைக் கிரகித்துக் கொண்ட குறும்புடனும் வெளியே கிளம்பினார்.

கழுத்தில் பாதி கட்டிக் கொண்டிருந்த 'டை'யோடு வெளியே வந்த வேதபுரி தாயாரிடம் படபடப்புடன் பேசினான்.

''அப்பாவுக்கு ஏன்தான் இந்தப் பிடிவாதமோ ? வாழ்க்கையில் இந்த நிலையிலும் இதை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு அலைகிறார். மற்ற மாறுதல்களைப் புரிந்து கொண்டு அதன் பிரகாரம் இருக்கக் கற்றுக் கொண்டால் கௌரவமாக இருக்கும்.''

மகன் வேதபுரி மேல் அளவற்ற அன்பு கொண்ட கனகம் மகனின் கௌரவம் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் கொஞ்சம் சினம் கிளர்ந்து அடங்கினாள். ஆத்திரத்தில் பேசுவதால் அதனுள் இருக்கும் மானப் பிரச்னையின் சிக்கல் அவன் அளவில் உணரப் படாமலே இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டவள் மகனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே பேசினாள்.

''வாழ்க்கையில் சில விஷயங்களைத் தனித் தனியா புரிஞ்சுக்கக் கத்துக்கணும், வேதபுரி. நாம் செய்யும் கடமை, நாம் செய்யும் காரியம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அர்த்தமுண்டு. இதே போலத்தான் ஆத்மார்த்தத்துக்கும், கடமையில் இதைவிடச் சிறந்தது ஒன்று இருப்பதாகவோ காரியத்தில், இதைவிடச் சிறந்தது ஒன்று இருப்பதாகவோ அவர் நினைக்கிறதில்லை.''

வேதபுரி மிகச் சாதாரணமாக நகைத்தான்.

''அப்பா வயசுதான் இருக்கும் எங்கள் ஸ்தாபனத்தின் சீப் இன்ஜினியருக்கு. ஆக்கபூர்வமான வேலைகளுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர் மாதிரி இந்த இயந்திர யுகத்தில் ஓர் இயந்திரமாக உழைக்கிறார். அவரைப் பார்க்கும் போதெல்லாம் எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா? ஆறு மாதங்களுக்குமுன் அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று வந்தார். இப்பொழுது கம்யூனிஸ்ட் நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் போய்த் திரும்பியிருக்கிறார். நம் அப்பாவைப் போல அவரும் இருந்திருந்தால் இன்றைக்கு நம் நாடு ஒரு பெரிய பொறியியல் நிபுணரை இழந்திருக்கும். யுக தர்மங்களை அனுசரித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அதில்லாமல்...'' என்று சலிப்புடன் இழுத்தான் வேதபுரி.

''இப்படியெல்லாம் பேசாதே வேதபுரி. உன் அப்பா இதை எவ்வளவு உயர்வாக நினைக்கிறார் தெரியுமா? வேதங்களை ஒழுங்காகக் கற்றுத் தெரிந்து, அதன் உள் அர்த்த பாவங்களை உணர்ந்து, ஏழு காண்டங்களைப் படித்து, மூன்று சாகைகளைத் தெரிந்து, அருண காடகம் உணர்ந்து, எண்பத்திரண்டு பிரச்னங்களைப் படித்து, வேதம், பதம், கிரமம், ஜடை, கனம், லட்சணம் என்று அதையொரு வேத சம்பத்தாக வணங்கித் தெரிந்து கொண்டு மனமொன்றி ஈடுபட்டிருக்கிறார். நீதான் தினம் தினம் பார்க்கிறியே, சந்தியாவந்தனம் செய்து சூரிய நமஸ்காரம் பண்ணி சூரியன், விஷ்ணு, அம்பிகை, கணபதி, ஈச்வரன் ஆகிய ஐந்து தெய்வங்களுக்குப் பூஜை செய்யாமல் தண்ணீர்கூடக் குடிப்பதில்லை. இதையெல்லாம்



ஒரு பாலம்

மகரிஷி

சிறப்புச் சிறுகதை

அவர் தமக்கொரு பொழுது போக்குக்காகச் செய்கிறார் என்று நினைக்கிறாய்?....''

வாசலில் வேதபுரியின் காரியாலய 'வான்' வந்து நிற்கும் ஒலி கேட்டது. அவசரம் அவசரமாக வேதபுரி புறப்பட்டு விட்டான்.

ராமசாமியின் வீட்டைக் கார் தாண்டும் போது ஒரு வீட்டில் சுப்பண்ணா தம் புரோகிதத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தார். அவர் செய்கிற காரியத்துக்காக அவர் மேல் கொஞ்சம் வெறுப்பு கொண்டாலும் அது நிரந்தரமானதல்ல. நிரந்தரமாக வெறுப்புக் கொள்ளக்கூடிய முகமல்ல அது. ஒடிசலான உருவம். முகத்திலே தெளிவு பெற்ற கண்களோடு கூடியதொரு அபூர்வமான சாந்தம். எதையும் உள்ளடக்கமாக வாங்கிச் சீர் தூக்கிப் பார்க்கிற முகபாவம். அப்பளக் குடுமி. கழுத்திலே சன்னமான ருத்திராட்ச மாலை. தந்தையைக் கார் நெருங்கும் போது காரின் வேகத்தை நிதானப்படுத்தச் சொல்லி, ''போய்ட்டு வரேம்பா. சீக்கிரமா வீட்டுக்குப் போங்கள். அதிகமாக அலைய வேண்டாம். ஆத்ம திருப்திக்காக ரெண்டு மூணு இடங்களுக்குப் போனாப் போறும்'' என்றான்.

சுப்பண்ணா பதிலேதும் கூறாமல் தலையை மட்டும் ஆட்டினார்.

கார்கூட அவரைக் கடந்து விட்டது.

சுப்பண்ணா ஓய்வுபெற்ற டிப்டி கலெக்டர். உத்தியோகத்தில் இருக்கும் போது அவரால் பாரமார்த்திக விஷயங்களில் அவ்வளவு ஒழுங்காக ஒரு விதரணையுடன் இருக்க முடிந்ததில்லை. எதையும் பூரண மனத் திருப்தியோடு செய்யமுடியாத நாட்களாகக் கழிந்து விட்டன.

அமாவாசை தர்ப்பணம் செய்ய வேண்டுமென்று புரோகிதருக்குச் சொல்லி அனுப்புவார். புரோகிதர் பரக்கப் பரக்க ஓடி வந்து நிற்பார். கூடவே வாசலில் ஜீப்பும் வந்து நிற்கும். கலெக்டர் உடனே அழைத்துக் கொண்டு வரச் சொன்னார் என்று பியூன் கூறிக் கொண்டு வருவான். அரையும் குறையுமாகத் தர்ப்பணம் அவசரத்தில் முடியும். சில சந்தர்ப்பங்களில் சாஸ்திரிகளே சூழ்நிலையைப் புரிந்து கொண்டு நகர்ந்து விடுவார்.

''நாளைக்குச் சிராத்தம் நினைவிருக்கிறதா உங்களுக்கு?'' — என்பாள் கனகம்.

''நாளைக்குத்தான் மந்திரி வருகிறார். காலையில் நான்கு மணிக்கே ரயில்வே ஸ்டேஷன் போயாக வேண்டும். அப்படியே அவர் பின்னால் மாலை நான்கு மணி வரையில் சுற்றணும்......''

''நாளைக்கு ஒருநாள்கூட...'' முடிவுபெறாத வார்த்தைக்குப் பின்னால் நிற்கும் முடிவுபெற்ற ஏக்கம் அவருக்குப் புரியாது என்பதல்ல.


வேதனையுடன் நகைப்பார். சாத்தியமற்ற விஷயங்களைப் பேசி என்ன பயன்?

''நேற்று அம்மன் கோயிலில் நம்முடைய கட்டளை. அம்மன் அலங்காரம் எவ்வளவு அழகு தெரியுமா? பட்டுப் பாவாடையும் ஒட்டியாணமுமாக அலங்காரம் கண்ணிலேயே நிற்கிறது. இவ்வளவெல்லாம் ஏற்பாடு செய்யச் சொல்லி விட்டுப் பார்த்தால் உங்களைக் காணோம். சாமி தரிசனம் செய்யக் கூட உங்களுக்கு இப்போதெல்லாம் அவகாசம் இருக்கிறதில்லே......''

கனகத்தின் கண்கள் இப்படி எத்தனையோ சந்தர்ப்பங்களில் பனித்திருப்பதைக் கண்டிருக்கிறார் அவர். இப்படி ஒன்று இரண்டா? அவருடைய உத்தியோக நாட்களில் அவர் இன்றி வீட்டில் நடந்த விசேஷ காரியங்கள் எத்தனையோ உண்டு. அநுஷ்டான ரீதியிலே அவர் தாண்டி வந்தவையும் எத்தனையோ உண்டு. இவைகளை நின்று நினைத்துப் பார்க்கக்கூட அவகாசம் இழந்திருந்தார் சுப்பண்ணா.

மனத்தின் ஈடுபாடு ஒருபுறமும், கடமை ஒருபுறமுமாக இருமுனை இழுப்பில் அவர் கடமையின் இழுப்புக்கே தம்மை ஆட்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. வாழ்வில் பாதிப் பகுதி இந்தப் போராட்டத்துடன் இழுபட்டு, இழுபட்டு மனம் நொந்த பல சந்தர்ப்பங்களில் அவர் பல வேதாந்த நூல்களை 'கேம்ப்'களில் கிடைத்த சிறு சிறு ஓய்வுகளில் படித்து அந்த வெம்மைச் சூட்டைத் தணித்துக் கொண்டார்.

ஓய்வுபெறும் வயதை அடைந்த போது அவரது நிர்வாகத் திறமையும், உழைப்பும் நிறைவேற்றி வைத்த பல அற்புதமான திட்டங்களும் நினைவுகூரப்பட்டன. வேலைக்கென்று அவர் நுழைந்தது முதலே தன்னலமற்ற உழைப்பினால் சிறுகச் சிறுக முன்னுக்கு வந்தவர். நிர்வாகத்துறை, நிலச் சீர் அமைப்பு, நீர்வளத் துறை, ஹரிஜன முன்னேற்றம், மாதர் நலம், சிறு சேமிப்பு என்று எல்லா நிலைகளிலும் அவர் செய்த தன்னலமற்ற உழைப்பை மனத்தில் கொண்டு அவ



ருடைய ஓய்வுகாலத்தை இன்னும் இரண்டாண்டு காலம் நீட்ட அவரிடம் யோசனை கேட்கப்பட்டபோது அவர் அதை மறுத்து விட்டார். அப்படி அவர் துணிவுடன் கூற வேதபுரி தலையெடுத்து விட்டதும் ஒரு காரணம். சர்க்கார் கண்டிராக்டுகளை ஏற்று நடத்தும் பிரபலமான இன்ஜினியரிங் கம்பெனியொன்றில் உதவி இன்ஜினியராக அவன் பணியாற்றுகிறான். எனவே வாழ்க்கையைப் பற்றிய பிரச்னை அவருக்கு இருக்கவில்லை. தாகமெடுத்துத் துடிக்கும் மனத்தின் ஒரு பகுதி ஆத்மீக தாபத்தை அவர் தம் இஷ்டம் போல் ஆற்றிக் கொள்ளலாம்.

''அறிந்தோ அறியாமலோ அநுசிதமான காரியங்கள் எவ்வளவோ செய்திருப்பேன். பித்ருக்களுக்கு அமாவாசை மற்ற திதிகளில் எள்ளுத் தண்ணீர் இறைக்கக்கூட அவகாசம் இல்லாமல் மனத்துக்குள் நொந்த சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு. ஓய்வே இல்லாத இயந்திர வாழ்க்கையிலிருந்து விடுபட்டு இன்று நான் நாளுக நிற்கிறேன். இந்த ஓய்வுக் காலத்தில் எனக்காக மட்டுமின்றிப் பிறருக்காகவும் இவ்வகையில் உழைக்கப் போகிறேன்'' என்று மனைவி கனகத்திடம் மனமுருகச் சொல்லிக் கொண்டார். அவள் அவருடைய அபிலாஷையின் முன் நிற்கவில்லை. அவரை உற்சாகப்படுத்தினுள். ஆனல் மகன் வேதபுரி மட்டும் முகம் சுளித்தான்.

வேதபுரியின் எதிர்ப்புக்கு அவர் மதிப்புத் தரவில்லை.

அநுஷ்டான முறைகளையும், அதற்கு உண்டான நியமங்களையும் முதுபெரும் புரோகிதரான ஏகாம்பர சாஸ்திரிகளுடன் உடன் இருந்து, சென்று அறிந்து கொண்டார். ஏற்கனவே வேதங்களை அப்பியசித்து வைத்துக் கொண்டிருந்ததால் அவைகளைச் செயல் முறைக்கு எப்படி உபயோகிக்க வேண்டும் என்பது ஒரு குரு இல்லாமல் முடியாது என்பதை உணர்ந்தார். ஏகாம்பர சாஸ்திரிகளிடம் சில காலம் இருந்து கற்றுணர்ந்து தேறினர்.

இருண்டு புகை மண்டிக் கிடந்த ஆத்மாவின் ஒரு பாகம் இப்பொழுது புத்தொளி பெற்று வந்ததைத் திருப்தியுடன் உணர்ந்தார் அவர்.

ஒவ்வொரு பலஹீனமான சந்தர்ப்பத்திலும், ஒவ்வொரு நல்ல தர்மங்களை விட்டுக் கொடுத்துக் கொண்டே வந்து கடைசியில் சூழ்நிலைக்கு அடிமைப்பட்டு இன்று மாறிக் கொண்டு வரும் ஜன சமூகத்தின் அவசரத்தை எண்ணிப் பார்ப்பார். ஒரு காலத்தில் அவரும் அந்த அவசரத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தவர்தானே.

அவர் மேற்கொண்டிருக்கிற இன்றைய பணியில் காட்டுகிற சிரத்தை மகத்தானது. ஆண்டவனுக்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்புகளைக் கிரியை மூலம் நினைவு படுத்துகிறவன் புரோகிதன் என்பதை மிகத் தெளிவாகவே உணர்ந்து வைத்திருந்தார் கப்பண்ணு.

பிரிவினை வந்தது !

''நமது சகாப்தத்தின் மாறுதலை ஓரளவாவது உணர்ந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். சித்தாந்த மோகம், பாரம்பரிய வழிபாடு என்பதையெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவு தூரவே வைத்துவிட்டு இன்றைய விஞ்ஞான யுக தர்மத்துக்கு இசைவாக வாழக் கற்றுக் கொள்ளாத வரையிலே நமக்குப் பெருமையே கிடையாது'' — கூடத்தில் கப்பண்ணு குறுநடை போட்டுக் கொண்டிருந்தார். வேதபுரி வழக்கமான தர்மத்தின் ஓர் இழையைப் பாதியில் பிரித்தான். அவன் நிகழ்கால சகாப்தத்தில் ஒரு பொறியியல் நிபுணன். அவனது முடிவுகள் அவனது பொறியியல் புதிய கண்டு பிடிப்புக்கள், எல்லாமே வரையறுக்கப்பட்ட சித்தாந்த அடிப்படையிலே கணிக்கப்பட்டவை. பழக்கப்பட்டு விட்ட சில தொடர் பழக்கங்களுக்காகவும், சில மரியாதைகளுக்காகவுமே அவன் கடவுள் தத்துவங்களை ஏற்றுக் கொண்டவன் போல் நடிக்கிறன். இப்படி நடிப்பதற்கு அவனது பிறப்பின் பின்னணி ஒரு மறைப்பாக உதவியது.

மாறிக் கொண்டு வரும் சமுதாய வாழ்க்கைக்குத் தகுந்தபடி இன்றைய மனிதனின் பழக்க வழக்கங்கள் போய்க் கொண்டிருந்தாலும், உள்நெஞ்சம் வேறெங்கோ சென்று அமைதிக்கு ஏங்குவதைக் கப்பண்ணு புரிந்து கொண்டவர்தான். அப்படி ஏக்கப் பெருமூச்சு விடும் ஒரு சராசரி பாமரன் போலத்தான் வேதபுரியும் இருக்கிறன் என்று எண்ணிக் கொண்டவர், ''கடவுள் தத்துவத்தை உன்னைப் போல் விஞ்ஞான ரீதியிலே உணர வைக்க எந்த ஆத்மீகவாதியாலும் முடியாது. அது தேவையுமில்லை'' என்ருர்.

''தர்ம நியாயங்களையும், அதன் மறை பொருளையும் அதிக விளக்கம் பெருமலேகூட ஏற்றுக் கொள்ளலாம். ஒரு விஞ்ஞானியைப் போலவோ, உன்போல் ஒரு பொறியியல் நிபுணன் போலவோ ஆராய்ந்து உணர்ந்து அதன்பின் ஒரு விஷயத்தின் பேரில் நம்பிக்கையும், மதிப்பும் வைப்பது போல் தர்ம தத்துவங்களையும் ஆராய்ச்சியின் முடிவில் ஏற்பதானல் ஏற்பேன், இல்லையேல் எதிர்ப்பேன் என்று கூறுவது சரியில்லை. அது முடியாத காரியமும்கூட. ஆத்மீகம் என்பதும் ஒரு கலை. அதை ஆராதிப்பது என்பதுதான் விஞ்ஞான அணுகல். வாழ்வின் உண்மைகளையும், மதிப்பீடுகளையும் ஒழுங்குபடுத்தி அதற்கு ஒரு நேரிடையான பாதையைச் செப்பனிட்டுத் தருபவன்தான் புரோகிதன். மானிட இயலை நேசிப்பவன், அவனை உதாசீனப் படுத்தக் கூடாது'' என்ருர் கப்பண்ணு.

வேதபுரி பாமரனுக நகைத்தான் :—

''பொருளாதார நகக்கல். அணுவின் பரிணும கதியிலே போய்க் கொண்டிருக்கும் இன்றைய வாழ்க்கை, அதோடு பிணைந்து போய்க் கொண்டிருக்கிற நிலையில் உங்கள் பாரமார்த்திகக் கருத்துக்களுக்கு நீங்கள் பலமே தேட முடியாது'' என்றவன் தன் தந்தையைக் கண்டிக்கும்போதெல்லாம் — உதாரணத்துக்குச் சொல்லும் தனது கம்பெனியின் பிரதம இன்ஜினியரைப் பற்றி இந்த இடத்திலும் சொன்னன். ''எவ்வளவு வயதாகியும்கூட இடையருத உழைப்பினுல் இன்றும் அவர் நமது நாட்டில் போற்றத் தக்க சில குறிப்பிட்ட பொறியியல் நிபுணர்

களில் ஒருவராக இருக்கிறார். ஆறு மாதங்களுக்குமுன் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தார். சமீபத்தில் கிழக்கு, மேற்கு, ஜெர்மனி, ரஷ்யா, செக்கோஸ்லோவோக்யா, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பியிருக்கிறார். அவருடைய மகன் அவர் வழியிலேயே பயிற்சி பெற்றுச் சமீபத்தில்தான் ஜப்பான் சென்று திரும்பியிருக்கிறான். இன்றைய உலகுக்கு எது தேவையோ, அதை அவர் உணர்ந்து உழைக்கிறார். அவரைத்தான் சமுதாயம் விரும்புகிறது. அவர்தான் இந்த யுகபுருஷர். அவரிடம் நான் பயிற்சி பெறும் போதெல்லாம் எவ்வளவு பெருமையடைகிறேன் தெரியுமா?'' என்றான் வேதபுரி கொஞ்சம் பெருமை தெரிய.

''தன்னைத் தானே விமரிசனம் செய்து கொண்டு திருந்துவதை விடுத்துப் பிறர் பார்த்து விமரிசிக்க வேண்டும், புகழ வேண்டும் என்ற நிலைக்கு ஒவ்வொரு தனி மனிதனும் வந்துவிட்டான். இதனால் செய்கிற தொழிலில் ஏற்றத்தாழ்வு என்ற கருத்து வாதம் அதிகமாகி விட்டது. ஓரளவு அது கவர்ச்சிகரமான வாதமாகக்கூட இருக்கிறது. மனிதனுடைய வாழ்க்கைப் போக்குகள் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொருவிதமாக மாறிக் கொண்டுதான் போகும். ஆனால் அடிப்படை தர்மம், மண்ணின் சாயை என்பது மாறவே முடியாது, மாறவும் கூடாது. நாடு ஒன்றாகவும், ஆத்மா வேறாகவும் இருக்க முடியாது. இந்தியன் இந்தியனாக இருந்தால்தான் பெருமை !''

தந்தைக்கும், மகனுக்கும் நடக்கிற தர்க்கத்தில் லயித்துப் போயிருந்தாள் கனகம். தன் மனக் குழப்பத்துக்கு மருந்து தேடுவது போல இருந்த மகனுடைய தவிப்பையும், அவன் தெளிவின்மைக்கு அவ்வளவு எளிதில் மருந்து கொடுத்துவிட முடியாது என்கிற மாதிரி தந்தை சில அடிப்படைகளைக் கிளறிப் பின் விஷயத்துக்கு மெதுவாக வருவதையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

''உங்களுடைய இந்தத் தத்துவத்தை ஜீரணிக்க இன்றைய மனிதனுக்குச் சக்தியில்லை. அதில் ஒரு கவர்ச்சியும் இல்லை'' என்றான் வேதபுரி பரிகாசத்துடன்.

''அது தேவையில்லை. ஏனென்றால், உண்மை எப்போதுமே கவர்ச்சியாக இருந்ததில்லை'' என்றார் சுப்பண்ணா நகைப்புடன். பிறகு நிதானத்துடன், ''நமது வேதாந்த தத்துவங்களை நாம் இங்கேதான் அறிந்து கொள்ள முடியும். உன்னுடைய பிரதம இன்ஜினீயர் பொறியியல் விஷயங்களை மேல்நாடு சென்று கற்றது போல் இதையும் மேல்நாடு சென்று படிக்க முடியாது.....'' என்றார் கொஞ்சம் கேலி பாவத்துடன்.

இருவரிடையே நீண்ட நேர மௌனம் நிலவியது. வாதம் முடியவில்லை என்பதை இருவருமே புரிந்து கொண்டுதான் இருந்தனர். சில நிமிஷங்கள் கழிந்து குறுக்குநெடுக்காக நடந்து கொண்டிருந்த சுப்பண்ணா தான் மீண்டும் பேசினார். இப்பொழுது அவர் பேச்சு மிகுந்த மன வருத்தத்தோடும் ஆழமான மனத்தாங்கலோடும் வெளிவந்தது.

''தன்னைகளை விட்டொழித்துவிட்டுக் கிரமமான தார்மிக காரியங்களில் இறங்கத் துடிப்பவர்கள் அநேகரை இப்பொழுது நான் அடிக்கடி சந்திக்கிறேன். நீ சொல்வதுபோல் பாரமார்த்திகம் கவர்ச்சியாக இல்லை. அது இன்று சராசரி மனிதனை ஈர்க்கவும் இல்லை தான். அதற்கெல்லாம் இன்றைய மனிதனின் மனத்தில் அமைதியில்லாததுதான் காரணம். அந்த அமைதியைப் பொருளாதாரத்தினால் மட்டும்தான் சரி செய்ய முடியும் என்ற ஒரு தவறான நம்பிக்கை மக்களிடம் பரவி விட்டது. பணம்.... பணம்.... என்று நேரம் முழுவதையும் பணம் ஈட்டுவதிலேயே திருப்பிவிட்டதால் பாபங்கள் நிறைந்த மனிதர்கள் ஒவ்வொரு வீட்டிலும் . சிறுகச்

நான் யார் தெரியுமா ?



காலை மணி ஏழு இருக்கும்.

அவன் படுக்கையிலிருந்து எழுந்தான். அவன் உலகை வெறுத்தவன் போல் காணப்பட்டான். அவன் இளைஞன். உலகை வெறுக்கும்படி அவனுக்கு அப்படி என்ன ஏற்பட்டது ? காதலில் தோல்வியடைந்தானோ ?

படுக்கையிலிருந்து எழுந்த அவன் வீட்டை விட்டு வெளியேறினான். அவனைத் தடுப்பார் அங்கே எவருமில்லை. மனத்தில் ஒரு முடிவோடு கிளம்பினான். கிழக்கு நோக்கி நடையைக் கட்டினான். நான் அவனைப் பின்தொடர்ந்தேன்.

காலைக் கதிரவனின் ஒளிக்கிரகணம் 'சுள்' என்று அவன் மேல் பட்டது. ஆனால் அதை அவன் பொருட்படுத்தவில்லை. அவன் மனம் ஒரே நிலையில் இருந்தது. தான் அப்போது செய்யப் போகும் செயலையே நினைத்துக் கொண்டிருந்தான்.

அவன் நடை இப்போது வேகமாகிக் கொண்டிருந்தது. நானும் வேகமாக அவனைப் பின்தொடர்ந்தேன். அவன் எங்கு செல்கிறான் ?

அவன் செல்லச் செல்ல நானும் பின்தொடர்ந்து சென்றேன்.

கடற்கரை வந்தது.

'ஆ ! என்ன ? அவன் தற்கொலை செய்து கொள்ளப் போகிறானோ?'

மணற்பரப்பில் நடந்து சென்றான். நானும் தொடர்ந்தேன்.

அங்கிருந்த கற்பாறை ஒன்றின் மேல் ஏறி நின்று கொண்டான். நானும் அவனுக்குப் பின்னால் ஏறி நின்று கொண்டேன்.

நான் தீர்மானித்துவிட்டேன், சந்தேகமில்லாமல் அவன் தற்கொலை செய்து கொள்ளத்தான் போகிறான் என்று.

அவனைக் காப்பாற்ற வேண்டுமே! எப்படிக் காப்பாற்றுவது ?

ஆ ! அந்தோ பரிதாபம்! அவன் கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டு விட்டான்.

நான் என்ன செய்வேன்? என்னால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை. உயிருள்ள ஒரு மனிதனாக இருந்திருந்தால் நான் அவனைக் காப்பாற்றியிருப்பேன். ஆனால் நான்தான் அவனுடைய நிழலாயிற்றே !

தகவல்: காழி ஜெயா

நறுமண வெள்ளம்

நியூயார்க் நகரத்தில் ஒரு புதுமையான வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. இந்த வெள்ளத்தில் ஓடியது தண்ணீர் அல்ல, வாசனைத் தைலத்தை நியூயார்க் நகர வீதிகளில் தெளித்ததால் நறுமண வெள்ளம் இது. "நியூயார்க்கைச் சுத்தமாக வைத்திருங்கள்" என்னும் பிரசார வாரத்தை யொட்டி இப்படிச் செய்தார்களாம்.

- வி. ந. ஸ்ரீதரன்

சிறுகப் பெருகி விட்டார்கள். இன்றையச் சூழ்நிலையில் ஆசாரத்தின் கேந்திரமான புரோகிதனின் பணி மிக மிக முக்கிய அங்கம் வகிக்க வேண்டியிருக்கிறது. அந்த முக்கிய பணியைத்தான் நான் மேற்கொண்டிருக்கிறேன். வெறும் சபலத்தினாலோ, பொழுது போகவில்லை என்றோ நான் இதற்கு வந்து விடவில்லை. பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே உள்ள மெல்லிய தர்ம இழையின் தொடர்புகளை ஒவ்வொரு கட்டத்திலும் வாழ்க்கையோடு பிணைப்பவன் புரோகிதன். இதை எல்லா மதங்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன."

வேதபுரி அசைவற்று நின்றான். அவனது யதார்த்த வாதங்களினால் தந்தையை வெல்ல முடியவில்லை. தனது தோல்வியை எடுத்த எடுப்பில் ஒப்புக் கொள்ள அவ்வளவு உயர்ந்த மனப்பக்குவம் அவனிடம் இல்லை. ஏனென்றால், அவன் நிகழ்காலத்து வாலிபன்.

ராம நவமி !

வீட்டில் பூஜைக்கான ஏற்பாட்டைச் செய்து வைத்துவிட்டுச் சுப்பண்ணா வெளியே போயிருந்தார். வேதபுரியிடம் இந்த மாதிரி காரியங்களுக்கு அதிக உதவியை அவன் பெற்றோர் எதிர்பார்ப்பதில்லை. தான் இவைகளில் அதிகம் சிரத்தை காட்டாததால் அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை அவர்களே செய்து கொண்டு விடுவதை அவன் அவ்வளவு பெரிய அவமதிப்பாகவும் எடுத்துக் கொண்டதில்லை.

" நந்தனம் வரையிலே போய்ட்டு வரேன் அம்மா! அப்பா வந்தால் சொல்லு. வீட்டில் பூஜை ஆரம்பிக்கிறதுக்குள்ளே வந்துடறேன்" தாயாரிடம் சொல்லிவிட்டு ஸ்கூட்டரில் புறப்பட்டான்.

நந்தனம். அங்கேதான் அவனது ஸ்தாபனத்தின் முதல்வர் இருக்கிறார். ஸ்கூட்டர் அவருடைய பங்களாவைத் தாண்டும்போதே அவரது நினைவும் அவனைச் சூழ்ந்து கொண்டது.

ஆறு மாதங்களுக்கு முன்தான் அவர் அமெரிக்கா சென்றிருந்தார். சமீபத்தில் கம்யூனிஸ்ட் நாடுகளுக்குச் சென்று திரும்பினார். பொறியியல் துறையில் புதுப் புது சாதனைகளைச் செய்து வெற்றி கண்டு வருகிற மேதை அவர். அவனது ஸ்தாபனத்தில் அவனுக்கு அவர்தான் குரு. மிகச் சிறந்த முறையில் அவனை ஒரு பொறியியல் நிபுணனாக்க அவர் தம் மகனிடம் காட்டும் அக்கறை போலவே அவனிடமும் காட்டுகிறார். அதுவே அவனுக்கொரு தனிப் பெருமையாக இருந்தது.

நண்பனின் வீட்டின் முன் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு உள்ளே நுழையும் போதே காதுகளில் சகஸ்ரநாம அர்ச்சனையின் ஒலி கேட்டது. ராமநவமி பூஜை நடக்கிறது போலிருக்கிறது என்று எண்ணியவாறு காலணியைக் கழற்றிவிட்டுக் கூடத்தை எட்டிப் பார்த்தான்.

ராமர் பட்டாபிஷேகப் படத்துக்கு அலங்காரம் செய்யப்பட்டு சகஸ்ரநாம அர்ச்சனை நடந்து கொண்டிருந்தது. நண்பனின் தந்தை அர்ச்சனை மலர்களைப் படத்தின் மேல் தூவிக் கொண்டிருந்தார்.

அடுத்தபடியாக அவன் கவனம், மிகத் தெளிவாகவும், நிறுத்தியும், சிரத்தையோடு அர்ச்சனை மந்திரங்களைக் கூறும் அந்தப் புரோகிதரின் மேல் திரும்பியது. வேதபுரியின் உடம்பு ஒரு முறை சிலிர்த்தது !

பழமையோடு கூடிய, எளிய ஆனால் கம்பீரமான புரோகிதர் உடையில் அவர் அடக்கத்துடன் அமர்ந்திருந்தார்.

லோகாயதம் வேறு, வேதாந்தம் வேறு என்பதைப் பொருளுணர்ந்திக் கொண்டு அவர் அமர்ந்திருந்தார்.

அகத்தையும் புறத்தையும் மிகத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டிக் கொண்டு அவர் அமர்ந்திருந்தார்.

எந்த மனிதரை அடிக்கடி உதாரணத்துக்குக் காட்டுவானோ, அவர்தான் அங்கே புரோகிதராக அமர்ந்திருந்தார்.

அலுவலகத்தில் தன்னை ஊக்குவித்து நெறிப்படுத்தும் ஒரு பொறியியல் நிபுணரும் இந்த யுகத்து மனிதர், இந்த யுகத்துக்குத் தேவையானவர் என்று யாரைச் சுட்டிக் காட்டி அவன் பேசுவானோ அவர், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே பாலமாக இருந்து ஆத்மீகத் தொடர்புகளை இணைக்கும் புரோகிதராக அமர்ந்திருந்தார்.

' நாடு ஒன்றாகவும், ஆத்மா வேறாகவும் இருக்கவே முடியாது. இந்தியன் இந்தியனாக இருந்தால்தான் பெருமை' என்று கூறிய தந்தையின் வார்த்தையில் ஒரு புதிய அர்த்தத்தைப் புரிந்து கொண்டான் அவன்.

'விஞ்ஞான முறையில் மனிதனுடைய நெறிமுறைகளை வகைப்படுத்த நினைப்பது எவ்வளவு மடத்தனமான பிரயத்தனம். மனித இனத்தின் ஒரு பகுதி வீணடிக்கப் படுவதாகத் தான் கொண்டுள்ள கருத்து எவ்வளவு சிறுமையானது. அப்பாவைப் போன்ற ஆத்மீகவாதிகள் கடலாழம் போன்றவர்கள். மேல்மட்டத்தில் என்னதான் ரஸாயன மாறுதல்கள் தோன்றிக் கொண்டே இருந்தாலும், உள் நிலை மாறவே முடியாது. உள் நிலை மாறாத அந்த ஸ்திரமான உள்ளங்களிலேதான் புதிய தலைமுறைகள் கப்பலாக மிதக்கின்றன. புதிய சகாப்தங்கள், பழமை ஆழங்கள், நம்பிக்கைகள் இவைகளைத் தூர விலகாமல் இணைக்கும் பாலங்கள் இவர்கள்!'

ஸிரிடோன்காஃபி

நீங்கள் காஃபியைத்தான்
விரும்புகிறீர்கள்-

இதை அறிந்தே இப்பொழுது ஸிரிடோன் காஃபி மணத்திலும் தயாரிக்கிறோம்!

ஒரு கோப்பை பாலில் ஸிரிடோன்
காஃபியை கலந்து அதன் சுவையான
காஃபி மணம் உங்களை எப்படி
கவருகிறது என்று பாருங்கள்



ஸிரிடோன்
கொக்கோ
மணத்திலும்
கிடைக்கிறது

ajanta, siris/502.



தமிழ் திரை உலகில் உயர்தரமான படைப்புக்களும் உண்டு.

படம்: கப்பலோட்டிய தமிழன்

● இசையிலும் நாட்டியத்திலும் உயர்ந்திருக்கும் அளவு தமிழ்ப் படங்கள் இல்லை. 'டிசிப்ளின்' இங்கே துளியும் இல்லை போலத் தோன்றுகிறது. பல ஆண்டுகளுக்கு முன், அமெரிக்காவில் 'வெரைட்டி ஷோ' என்று கதம்ப நிகழ்ச்சி காட்டுவார்கள். அதை நினை வூட்டுகின்றன இன்றையத் தமிழ்ப் படங்கள்.

ஆல்பர்ட் பா. பிராங்க்லின்

இது குறித்து இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களைக் கேட்ட பொழுது அவர் கூறியதாவது:

■ சினிமா சிந்தனை

கட்டுக்கோப்பற்ற கதம்ப நிகழ்ச்சியா?

தமிழ்த் திரைப்பட உலகின் துரதிர்ஷ்டமோ அல்லது அவரது துரதிர்ஷ்டமோ, திரு ஆல்பர்ட் பா. பிராங்க்ளின் அவர்கள் பார்த்த தமிழ்ப் படங்கள் தரமற்றதாக அமைந்தன. தமிழ்ப் படங்களில் தரமுள்ள படங்களும் இல்ல 'மல் இல்லை அதுபோல ஆங்கிலப் படங்களனைத்தும் தரமான படங்கள்தான் என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்லவும் முடியாது. 'டிசிப்ளின்' இல்லாத, பல ஆண்டுகளுக்கு முன் காட்டப்பட்ட 'வெரைட்டி ஷோ' என்கிற கதம்ப நிகழ்ச்சி கொண்ட ஆங்கிலப் படங்கள் இன்றைக்கும் தயாரிக்கப்

கதம்ப நிகழ்ச்சி போன்ற கட்டுக் கோப்பற்ற படங்களும் உண்டு.

படம்: "மூன்றெழுத்து"





படுவது உண்டு. தரக் குறைவான தமிழ்ப் படங்களும் உண்டு. இதை அவரும் நாமும் நிச்சயம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.


வீர பாண்டிய கட்டபொம்மன், கற்பகம், நெஞ்சில் ஓர் ஆலயம், கப்பலோட்டிய தமிழன், படிக்காத மேதை, என்னதான் முடிவு, பாசமலர், ஆலயம் போன்ற பல தமிழ்ப் படங்கள் உயர்தரமான படங்களே! அம்மாதிரியான தரமுள்ள தமிழ்ப் படங்களைப் பார்க்காமல், தரக் குறைவான படங்களை மட்டும் பார்த்துவிட்டு, தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் எல்லாத் தமிழ்ப் படங்களுமே 'டிசிப்ளின்' அற்றவை என்று மாஜி அமெரிக்க கான்ஸல் ஜெனரல் திரு ஆல்பர்ட் பா. பிராங்க்ளின் முடிவு கட்டி விட்டதை நினைக்கும்பொழுது என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது.

இன்று பொருளாதாரத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும், கலைத் துறையிலும் அமெரிக்க நாடு முன்னணியில் நிற்கிறது என்றால் என்ன காரணம்? அந்நாடு கடந்த இருநூறு ஆண்டுகளாகவே சுதந்திர நாடாக இருந்து வந்துள்ளதுதான். அடிமைப்பட்டு, அடங்கி, அவதிப்படாததினால்தான் அவர்கள் இவ்வளவு தூரம் எல்லாத் துறைகளிலும் முன்னேற முடிந்திருக்கிறது. ஆனால் நாமோ சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகள்தாம் ஆகின்றன. இந்தக் குறுகிய காலத்துக்குள் நாம் கலைத் துறை நுணுக்கங்களில் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். இனியும் வேகமாய் முன்னேற முயலுவோம்.

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் ஆங்கிலப் படங்கள் அனைத்தும் சர்வதேச மார்க்கெட்டைப் பிடித்துவிட்டன என்றால் அதற்குக் காரணம் 'ஆங்கில மொழி' சர்வதேச மொழியாக அமைந்திருப்பதுதான். நமது தமிழகத் திரைப் படங்கள் தரமுள்ளனவாக, நமது நாட்டுக் கலாசாரப் பண்பாட்டுடன் தயாரிக்கப்பட்டிருந்தாலும் இந்த 'மொழி' தெரியாத குறையினால் வெளிநாட்டவர் பார்த்து, புரிந்து கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளன. அது நம்முடைய துரதிர்ஷ்டம்தான். அதே போல் தரமுள்ள தமிழ்ப் படங்களைப் பார்க்கத் தவறியது திரு பிராங்க்ளின் அவர்களுடைய துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

தரமுள்ள தமிழ்ப் படங்கள் நமது நாட்டிலேயே தரமற்றதாகக் கருதி ஒதுக்கித் தள்ளப்படும் போது, மக்களுடைய ஆதரவை மிகுதியாகப் பெறத் தவறும்போது, வெளிநாட்டவர் நமது தரமற்ற சில தமிழ்ப் படங்களைப் பார்த்துவிட்டு எல்லாத் தமிழ்ப் படங்களுமே 'டிசிப்ளின்' அற்றவை என்று முடிவு கட்டிவிடுவதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?

— **திரைத்துருவி**



பாரத நாட்டிலுள்ள சீக்கிய மதத்தினருள் 'நமஸ்தார்' எனப்படும் ஒரு பகுதியினர், தங்கள் திருமணத்தை ஒரு ரூபாய் இருபத்தைந்து காசுகளுடன் முடித்துவிடுகின்றனர்களாம்!

ஒன்றேகால் ரூபாய்தான்!

பணக்காரராயினும், ஏழையாயினும் இந்த எளிய முறையில் நடத்தி விடுகிறார்கள். இந்தத் திருமணத்துக்கு ''ஆனந்த்'' எனக் கூறப்படுகிறது.

இந்த ''ஆனந்த்'' ஆரம்பமானதே ஒரு கதையாகும்.

வரதட்சிணைப் பிரச்னையால் துன்பப்பட்ட பெற்றோர்களையும், பெண்களையும் கண்டு அனுதாபப்பட்டவர் சத்குரு ராம்சிங்ஜி. அவர் 1863ஆம் ஆண்டில், பஞ்சாப் மாகாணத்தில் ''ஆனந்த்'' எனும் பெரிய திருமணத்தைத் தொடங்கி வைத்தார்.

திருமண தினத்தன்று பக்திப் பாடல்கள் கான மழை பொழிய, 'ஆனந்த்' நேரம் வந்ததும் (முகூர்த்த நேரம்) மணப் பெண் கள் கூட்டத்திலிருந்து எழுந்து வருவாள். வெள்ளை உடையில் மணமக்கள் தரித்திருப்பார்கள். மணமகள் மணமகனை வணங்கியதும், 108 மணிகளால் ஆன மாலையைப் போட்டுக் கொள்வாள். மணமகனும் மணமகளும் ஆடைகள் முடிச்சுப் போட்டிருக்க, நிலை வலம் வந்து உட்கார்ந்து குரு மந்திரங்களை வாசிப்பதைக் கேட்பார்கள். பிறகு இருவரும் இனிப்பு பானம் அருந்துவார்கள். மணமகனுடன் திருமணம் முடிந்துவிட்டது.

ஒன்றேகால் ரூபாய் பெறுமான மணி மாலையுடன் — திருமணச் செலவும் முடிந்துவிட்டது!

தகவல்: ஏ. சுவாமிநாதன்

தபால் ஒட்டி

''லிப்ஸ்விக்'' என்ற நகரில் ஒரு நூதன தபால் பெட்டி ஒன்று உள்ளது. அந்தத் தபால் பெட்டியில் உள்ள விசேஷம் என்னவென்றால் இதில் போடும் தபால்களுக்கு நாம் ஸ்டாம்பு ஒட்டிப் போடவேண்டும் என்ற அவசியம் இல்லை. தபால் பெட்டியின் ஒரு புறம் உள்ள வாயில் தபாலைப் போட்டுவிட்டு, தபால் கட்டணத்தை மட்டும் மற்றொருபுறம் உள்ள துவாரத்தில் போட்டுவிட்டால், ஸ்டாம்பு தானாகவே நமது தபாலில் ஒட்டிக் கொள்ளுமாம். இத்தகைய தபால் பெட்டிகள் தற்போது ஏராளமாகத் தயாரிகின்றனவாம்.



ஆதாரம்: டிட்பிட்ஸ்
தகவல்: ''சிலா''



எம்.எஸ். கந்தசாமி செட்டியார்

தோற்றம்: 27-9-1898 மறைவு: 7-8-1968

இயற்கை எய்தினர்

●

தெய்வ பக்தியும், தேச பக்தியும் மிகுந்த ஆரணி பட்டு ஜவுளி வியாபார பிரமுகரான எமது அருமை தகப்பனார் **எம். எஸ். கந்தசாமி செட்டியார்** 7-8-1968 புதன்கிழமை மாலை 6 மணிக்கு இயற்கை எய்தினர். அதுகுறித்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்

எம். கே. பாலசுந்தரம்
எம். கே. சுந்தரேசன்

எம்.எஸ். கந்தசாமி செட்டி & சன்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்
ஆரணி (வட ஆற்காடு மாவட்டம்)

தொலை பேசி எண்: 76103 த. பெ. எண்: 2910 தந்தி: செந்தில்

இந்தோ மெர்கண்டைல் பண்ட் பிரைவேட் லிட்.

(ரிஜிஸ்டர்ட்: இந்தியன் கம்பெனி சட்டம் 1956க்கு உட்பட்டது)

25, சுந்தரேஸ்வரர் தெரு - மயிலாப்பூர், சென்னை - 4

கீழ்க்காணும் சீட்டு குரூப்புகளுக்கு, 1961-ம் வருடத்திய 24-ம் நம்பர் மதராஸ் சிட்டு பண்டுகள் சட்டத்தின் கீழ் நாங்கள் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொள்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வகுப்பு சீரிஸ் சீட்டு நெ.	சீட்டுத் தொகை	மாதத் தவணை	டிக்கெட்டுகள் எண்ணிக்கை	மொத்த காலம்
		தினசரி சீட்டு		
A	ரூ. 9,000	ரூ. 20 தினசரி	80	450 நாட்கள்
B	ரூ. 4,500	ரூ. 10 ,,	30	450 ,,
C	ரூ. 2,000	ரூ. 5 ,,	40	#00 ,,
D	ரூ. 800	ரூ. 2 ,,	40	400 ,,
E	ரூ. 400	ரூ. 1 ,,	40	400 ,,
		மாதாந்திர S. T.		
A	ரூ. 6,000	ரூ. 200 மாதத்துக்கு	80	30 மாதங்கள்
B	ரூ. 3,000	ரூ. 100 ,,	30	30 ,,
C	ரூ. 1,500	ரூ. 50 ,,	30	30 ,,
D	ரூ. 750	ரூ. 25 ,,	30	30 ,,
E	ரூ. 600	ரூ. 20 ,,	30	30 ,,
F	ரூ. 450	ரூ. 15 ,,	30	30 ,,
		மாதாந்திர L. T.		
A	ரூ.30,000	ரூ. 500 மாதத்துக்கு	60	60 மாதங்கள்
B	ரூ.15,000	ரூ. 250 ,,	60	60 ,,
C	ரூ. 7,500	ரூ. 125 ,,	60	60 ,,
D	ரூ. 3,600	ரூ. 60 ,,	60	60 ,,
E	ரூ. 1,800	ரூ. 30 ,,	60	60 ,,
F	ரூ. 1,200	ரூ. 20 ,,	60	60 ,,

இதர விவரங்களுக்குத் தேவையான குரூப்பை குறிப்பிட்டு எழுதவும்:

கிளை: 1. ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ்-1
தொலைபேசி எண்: 21941

M. V. சுப்ரமணியம்
மேனேஜிங் டைரக்டர்

வட்டமேஜை

ஆண்டுமலர் அற்புதம்!



ஆடிப் பதினெட்டில், பொன்னிநதி பெருக் கெடுத்தோடும் புனிதமான இத்திருநாளில் மீண்டும் ஒரு முறை அமரர் கல்கி அவர்களின் 'பொன்னியின் செல்வன்' தொடங்குவது மிகவும் பொருத்தமான ஒன்றே. மகா காவியங் களுக்கு இணை சொல்லல் இயலாது. 'பொன் னியின் செல்வன்' தமிழ் மொழியில் ஒரு மகா காவியம்தான். இதற்கு இணையான ஒன்றை இனி வரும் நாட்களில் யாரேனும் எழுதக் கூடும் என்று நினைப்பதற்கும் முடியவில்லை.

அன்பர் 'மகரிஷி'யின் ''துயரங்கள் உறங்குவதில்லை'' அற்புதமான படைப்பு. இன்றைய கட்டுப்பாடற்ற அவசரம் மிக்க இளம் தலைமுறையினருக்கு இது போன்ற சித் திரங்கள் மிகவும் அவசியமானதும் அவசர மானதும் ஆகும். அன்புமிக்க இன்றைய இளந்தலைமுறையினர் இந்த உறங்காத துயரக் கதையை அவசியம் படித்துப் பயன்பெறட் டும். துணிச்சலான — புதுமையான, தரமான முயற்சிகளுக்கு எப்போதுமே ஆதரவு தரும் 'கல்கி'க்கு நன்றி.

புதுக்கோட்டை—2
2—8—68 தி. சு. பாலசுப்பிரமணியம்

O

ஆண்டு மலரைப் பார்க்கும் பேறு இன்று கிடைத்தது. மிக மிகப் பிரமாதம்! பொன்னி யின் செல்வனைப் புதிய வடிவிலே வண்ண வண்ண ஓவியங்களுடன் காண்பது சிந்தைக்கு இனிய பெரு விருந்து. பழைய சாயல்கள் துளியும் குன்றாமல் அப்படியே கடைந்தெடுத் துக் கொடுத்துவிட்டார் ஓவியர் வினு. இதைக் கண்டதும் நேரில் மீண்டும் கல்கி அவர்களையே சந்தித்து அளவளாவுவது போன்ற பெரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போனேன்.

மைசூர் — 4
3—8—68 குகப்ரியை

O

'பச்சைக் குழந்தையைப் பாதுகாப்பது எப்படி?' என்ற கட்டுரையைப் படித்தேன். தாய்மார்களுக்கு மிகவும் பயனுள்ள கட் டுரை. கட்டுரை மூன்று பக்கங்களே. எனினும் அதில் உள்ள அறிவுரைகளோ ஏராளம். என் போன்ற தாய்மார்களுக்குக் குழந்தைகளைப் போஷாக்குடன் வளர்ப்பதற்கு மிகவும் உதவி யாக இருக்கிறது.

சென்னை — 17
2—8—68 வைதேகி பார்த்தசாரதி

கவின்மிகு தமிழால் உயர் கல்கிக்கு
 கருத்துயர்ந்த நல்வாழ்த்து — உயர்
காலத்தறிந்து அஃதாற்றும் கலைக்கு
 காதலால் தந்த கலைஞர் வாழ்த்து.

பொன்னியின் செல்வன் வந்த
 போதினில் உயர்ந்த பொதிகைபோல்,
கன்னியிளமையால் கல்கி வளம்பெறக்
 காலையென் வாழ்த்து வாழிநாளும்
 என்பதாமே!

சேலம் — 3
3—8—68 என். ராஜகோபாலன்

O

'துயரங்கள் உறங்குவதில்லை' அருமை யான படைப்பு. தமிழ் இலக்கியம் வளர்ந் துள்ளதா என்று அலட்சியமாகக் கேட்ப வர்கள் வாயடைத்துப் போவார்கள்.

'கல்கி'யின் புதிய பகுதிகள் இளைஞர்முன் புதிய உலகம் ஒன்றை சிருஷ்டிக்கத் தொடங்கி விட்டன.

புலியூர்க்குறிச்சி
3—8—68 வனமாலிகை

O

''சினிமா சிந்தனை''ப் பகுதியில் ''நான்'', ''மூன்றெழுத்து'' இரண்டு திரைப்படங்களை யும் பற்றி நான் கூறியதாகச் சொல்லப்பட் டிருக்கும் கருத்துக்கள் கீழ்க்கண்ட முறையில் அமைந்திருக்க வேண்டும். நான் கூறிய கருத்து இதுதான்: ''நல்ல பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த ''நான்'' படம் வெள்ளி விழாக் கொண்டாடியது. அதைக் காட்டிலும் அதிகமான பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்ததாக நான் நினைக்கும் ''மூன்றெழுத்து'' படம் ''நான்'' படம் பெற்ற அளவுக்கு மக்களின் ஆதரவைப் பெறவில்லை! மக்களின் ரசனையை எங்களால் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை என்ப தற்கு இதுவே உதாரணம்.''

சென்னை—4 கே. பாலசந்தர்
11—8—68 (சினிமா டைரக்டர்)

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

இன்று! என்னிடம் நிறைய பணம் இருக்கிறது!



நான் ஒவ்வொரு மாதமும் சிறிய தொகைதான் யுகோ பாங்க் ரெக்கரிங் டெபாஸிட் திட்டப்படி சேமித்து வந்தேன். இன்று எனக்கு இந்த ரொக்கத்தொகை கிடைத்திருக்கிறது.

மாதத்தவணையில் குறைந்த பட்சம் செலுத்தும் தொகை ரூ 10/- அதிக பட்சம் ரூ 450/- இந்த ரெக்கரிங் டெபாஸிட் அக்கௌண்டினை ஒருவரோ அல்லது கூட்டாகவோ தொடங்கலாம்.

தி
யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க்
லிட்.

தலைமை ஆபிஸ் : கல்கத்தா

நீங்கள் பணம் சேமிக்கலாம், யுகோ பாங்க் உங்களுக்கு உதவி செய்ய முடியும்

ASP/UCO-10/68

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon